திருக்கோயில்

மார்ச் 1981 ரூ. 1-25

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நிகழ்ந்த தங்கத்தேர் உலா விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன், வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு கா. காளிமுத்து, ஆணையர் திரு. யு. சுப்ரமணியன், மதுரை மேயர் எஸ். கே. பாலகிருஷ்ணன், அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் ஆகியோர் கலந்து கொள்ளுதல்.



பொற்கிழிப் பரிசளிப்பு விழாவில், மேலவைத் தலைவர், 'சிலம்புச் செல்வர்' மாண்புமிகு டாக்டர் திரு. ம. பொ. சிவஞானம், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன், தொழிலதிபர் திரு. என். மகாலிங்கம், அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம், அறங்காவலர் திரு. சின்னசாமிக் கோனார், ஆகியோர் கலந்து கொள்ளுதல்.

முகப்பு:

திருவரங்கம்
அருள்மிகு திருவரங்கநாதர்
கோயிலின் அழகிய தோற்றம்

திருக்கோயில்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை : 23 | திருவள்ளுவர் ஆண்டு 2012, இரவுத்திரி ஆண்டு-பங்குனி (மார்ச் 1981) | மணி: 6

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப் பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 விதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

இராமலிங்கரின் இலட்சியம்
—'சிலம்புச் செலவர்' டாக்டர் திரு. ம.பொ. சிவஞானம், M.L.C

திருஞான சம்பந்தன செந்தமிழ்கள்
—ந.ரா முருகவேள், M.A., M.O.L.

மணவாள மாமுனிகளின் மாட்சி
—மகாவித்துவான் திரு. பி.ப. அண்ணங் கராசார்ய சுவாமிகள்

அருள்மிகு மீனாட்சி அம்மை தங்கத்தேர் உலாவிழா
—வித்துவான் திரு. தா. குருசாமி ஓதுவார்

தேனூறு செஞ்சொல்
—மகாவித்துவான் திரு. சி. அருணை வடிவேல் முதலியார்

பரஞ்சோதி முனிவர் பாடற்றிறன்
—ந.ரா. முருகவேள், M.A., M.O.L.

திருவிருத்தம்
—திரு. என்.எஸ். தாத்தாச்சாரியார்

மாலைமாற்றுப் பதிகம்
(மூலமும் உரையும்)
—ந.ரா. முருகவேள், M.A., M.O.L.

தில்லையுலா
—திரு. மு. அருணாசலம்

கண்ணனூர் மாரியம்மன் தாலாட்டு
—திரு. புலவர் பா. அன்பரசு, M.A., B.T.

முதுமை நிலையாமையால் இளமை நிலைத்தது
—மகாவித்துவான் பண்டித நடேசனார், B.A., J.P.

ஆண்டாளும் அருளாளனும்
—திரு. நா. வேணுகோபால் நாயகர், B.A., B.L.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

இராமலிங்கரின் இலட்சியம்

'சிலம்புச் செல்வர்'

டாக்டர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள், M.L.C.,

மேலவைத் தலைவர்

அருட்பிரகாச வள்ளலார், ''ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை'' என்ற புதிய கோஷத்தை எழுப்பினார். அந்தக் கோஷத்தின் அடிப்படையில் உயிர்களிடையே சகோதர உணர்வை வளர்க்க முயன்றார். அடிகளாரின் குறிக்கோள் பலவாயினும், அவற்றுள் தலையாயது-மற்ற எல்லாக் குறிக்கோள்களையும் தன்னுள்ளே கொண்டு விளங்குவது ''ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை'' என்பதாகும். ''சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியம் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை'' என்று அடிகளாரே கூறுகின்றார்.

சன்மார்க்க நெறியிற் சாராதாரைத் 'துன்மார்க்கர்' என்றே கூறுவார் தாயுமானவர். இதனைச் ''சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்கனேனையும் தண்ணருள் கொடுத்தாள்வையோ!'' என்ற அவரது வாக்காலேயே அறியலாம். இங்குத் தாயுமானவர் வலியுறுத்துவது சித்தாந்த-வேதாந்தங்கள் கலந்த சமயசன்மார்க்கமேயாகும். வள்ளலார், சமயங்கடந்த சமரச சுத்த சன்மார்க்கம்' என்ற புது நெறியையே போதித்தார்.

ஆன்மநேய ஒருமை :

உயிர்கள் பலவகையான தேகங்களைப் பெற்று வாழ்கின்றன. அவற்றை, மனிதர் மிருகம்-பறவை-ஊர்வன-நீர் வாழ்வன-தாவரம் எனப் பாகுபடுத்தியுள்ளனர் அறிஞர் பெருமக்கள். அவை அனைத்தும் பரமான்மாவால் படைக்கப்பட்ட ஜீவான்மாக்கள் என்பது சமயக் கொள்கை. அதனால், அந்த உயிர்களிடையே ஆன்மநேய ஒருமைப்பாடு காண்பதனைத் தம் கடமையாகக் கொண்டார் வள்ளலார். ''உலகம், ஆதி பகவானாகிய இறைவனை முதலாக உடைத்து'' என்றார் திருவள்ளுவர். அந்த முதற் பொருளைத் தலைமையாகக்கொண்டு ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைச் சமுதாயத்தைக் காண விரும்பினார் வள்ளலார். இதுபற்றித் தாம் இயற்றிய ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்ற நூலில், அடிகளார் தரும் விளக்கம் வருமாறு :

''சீவர்கள் எல்லாம் ஒரு தன்மையாகிய கடவுள் இயற்கை உண்மை ஏகதேசங்களாகிக் கடவுள் அருட்சக்தியால் பூதகாரிய தேகங்களில் வருவிக்கப்பட்டபடியால், இச்சீவர்களெல்லாம் ஒருரிமை இனத்தவர்களேயாகும்.

''சீவர்கள் எல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கை உண்மை ஏகதேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டபடியால், ஒருரிமை உள்ள சகோதரர்களேயாவர்.''

மேலே எடுத்துக் காட்டிய இரண்டு பகுதிகளும் ஒரே கருத்தை வலியுறுத்தியுள்ளனவாக இருப்பினும், முன்னதில் உயிர்கள் அனைத்தையும் ஒரே இனமாகக் குறிப்பிடுகின்றார். பின்னதில், அந்த இன உரிமை பற்றிச் சகோதர ஒருமைப்பாடு இயற்கையாக இருப்பதை எடுத்துக்காட்டுகின்றார்.

வாயே பறையானது :

'உயிர்கள் அனைத்திடத்தும் அன்பு செலுத்த வேண்டும்' என்பது ஜீவகாருண்யம். அடிகளார், அதனினும் ஒருபடி மேலே சென்று தேகபேதங்களை மறந்தவராகி, உயிர்களையெல்லாம் ஒரே இனத்தைச் சார்ந்தவையாகக் கூறுகின்றார். அது, ஆன்மநேய இனமாகும். அந்த அடிப்படையில் கருணையையே மதமாகக் கொண்ட ஒரு புத்தம் புதிய உலகை அமைக்க முயன்றார் வள்ளலார். அதனைத் தம் கண்ணாரக் கண்டு மகிழும் பேற்றினைத் தருமாறும் கடவுளைப் பிரார்த்தித்தார்.

''கள்ள வாதனையைக் களைந்தருள்
நெறியைக்
காதலித்து ஒருமையில் கலந்தே
உள்ளவாறு இந்த உலகெலாம் களிப்புற்று
ஓங்குதல் என்று வந்து உறுமோ?

''வள்ளலே அதுகண்டு அடியேன் உள்ளம்
மகிழ்தல்என் றோஎனத் துயர்ந்தேன்
ஒள்ளியோய் நினது திருவுளம் அறிந்தது
உரைப்பதுஎன் அடிக்கடி உனக்கே''

''உலகத் திரளெலாம் மறுவறக் கலந்து
வாழ்வதற்கு வாய்த்த தருணம்
இதுஎன்றே
வாயே பறையாய் அறைகின்றேன் '',

என்னும் வரிகளில், தலது இலட்சியச் சித்திரத்தைக் காட்சிப்படுத்துக்கிறார் வள்ளற் பெருமான்.

அடிகளாரின் ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை, பேதங்களைக் கடந்த அல்லது பேதங்கள் அற்ற அபேத சித்தாந்த மாகும். ஆம்; கடவுள் வேற்றுமை, வருண வேற்றுமை, சமய மத வேற்றுமை, சாதி வேற்றுமை ஆகியவற்றையெல்லாம் அழித்தும், மொழி நாடு நிற வேற்றுமைகளை யெல்லாம் கடந்தும் வளர்வது ஆன்மநேய ஒருமைப்பாடு.

தெய்வம் பலப்பல என்னும் மூட நம்பிக்கைக்கு எதிரான சித்தாந்தம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை. அதனால்,

''ஆறு கோடியாம் சமயங்கள்
அகத்தினும் அவைமேல்
வீறு சேர்ந்தசித் தாந்தவே
தாந்தநா தாந்தம்
தேறும் மற்றைய அந்தத்தும்
சிவம்ஒன்றே அன்றி
வேறு கண்டிரேல்
பெரியர்காள் விளம்பீர்!''

எனப் பாருலகனைத்துக்கும் பறையறைந்து பாடுகின்றார் வள்ளலார். தெய்வம்ஒன்று தான் உண்டு என்று உண்மையை உணராத மாந்தர்களைப் பார்த்து, ''ஒன்றெனக் காணும் உணர்ச்சி என்றுறுமோ?'' என்றும் ''ஒன்றே சிவம் என உணர்ந்து இவ்வுலக மெலாம்; நன்றே ஒருமையுற்று வாழி!'' என்றும் பாடினார். இங்கு அடிகள் 'சிவம்' என்றது உயிர்க்குலம் அனைத்துக்கும் பதி யான பரம்பொருளேயாகும்.

அன்பே - அகிலமே கடவுள் :

வள்ளலார் சொல்லும் கடவுள், நாம ரூப பேதங்களுக்கு அப்பாற்பட்டது. இதனை அடிகளாரே கூறக் கோட்போம்.

''உண்மையில் 'கடவுள்' எனப்படுவது அகிலமாம்-அன்பாம். அஃது, உலகிலுள்ள எல்லாவற்றிலும் பரிபூரண சமாதானத்தையும் சமரச நிலையையும் ஏற்படுத்தி அவைகளை நிலை நிறுத்துகின்றது.''

முற்காலச் சான்றோர், 'அன்பே கடவுள்' என்றனர். அத்துடன் அகிலத்தையும் சேர்த்து, 'அன்பாம் அகிலமாம் கடவுள்' என்றார். உலக ஒருமைப்பாட்டினைக் காணவிழைந்த வள்ளலார்.

உயிரினத்திடையே—குறிப்பாக மனிதர்களிடையே ஒருமைப்பாட்டினை வளர்க்கத் தடையாக இருக்கும் எதனையும் தெய்வ சக்தியாகவோ, தெய்வ சம்மதமாகவோ ஏற்க மறுக்கிறார்; வள்ளலார்.

இராமலிங்கர் உலகிலுள்ள எல்லா மதங்களையுமே வெறுத்தார்; அம்மதங்களைச் சார்ந்த மக்கள் அனைவரிடமும் ஒருமைப்பாடு காண விழைந்தார், இஃது அவருடைய பொதுக் கொள்கை. ஆயினும் தமது கொள்கைக்கு ஆதரவு தேடும் முயற்சியை முதலில் இந்தியாவில் தோன்றி வளர்ந்த இந்து, சமண, பௌத்த மதங்களிடையே மட்டும் மேற்கொண்டார். இஸ்லாம்-கிறிஸ்துவ சமயங்களைப் பற்றி அவர் வெளிப்படையாக எதுவும் சொல்லவில்லை. அதனால் இஸ்லாம் கிறிஸ்துவ மதங்கள் அல்லாத இந்திய மதங்களை மட்டும் ஒன்றுபடுத்த விரும்பினார் என்று கருதுவதற்கில்லை. தமது கொள்கைக்கு இஸ்லாம்-கிறிஸ்து மதத்தை ஈர்க்க விருப்பமிருப்பினும், அதனைக் காலத்தின் கையில், கடவுள் கையில் விட்டுவிட்டார் என்றே சொல்ல வேண்டும். ஆம்; கருத்துப் போர்க்கான களத்தைப் பெரிதாக்கிக் கொள்ள விரும்பாத ராஜதந்திரி வள்ளலார்.

ஆதிசங்கரர் கண்ட ஒருமை :

ஒரு குழுவினருக்கு எதிராக இன்னொரு குழுவினர் ஒன்றுபடுவது ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையாகாது. அதனைத் தற்காப்புணர்ச்சி என்றே சொல்ல வேண்டும். அடிகளார் ஒருமைப் பாட்டினை வற்புறுத்தியது குறிப்பிட்ட ஒரு குழுவினருக்கு மட்டும் தற்காப்புத் தேடவன்று. 'ஒரே உலகம்' காண்பதற்கே யாம். ஆதி சங்கரர், இந்து சமயத்தின் உட்பிரிவுகளாக இருந்த அறுவகைச் சமயங்களிடையே ஒருமைப்பாடு காண முயன்றார்.

ஆதி சங்கரரின் சமய ஒருமைப்பாட்டு முயற்சி, அவருடைய வெறுப்புக்கு இரையான சமண, பௌத்த மதங்களுக்கு எதிராக-அந்த மதங்களின் தாக்குதலிலிருந்து வேத மதத்திற்குத் தற்காப்புத் தேட—இந்துக்களை எல்லாம் ஒன்றுபடுத்த எடுத்துக் கொண்ட முயற்சியேயாகும். வள்ளலாரின் குறிக்கோள் அதுவன்று. அவர், மதங்களே இல்லாத மனித சமுதாய ஒருமைப்பாட்டைக் காணவே பாடுபட்டார். ஒன்றுபட்ட அந்த மனித சமுதாயமும், ஒரே தெய்வ நம்பிக்கை கொண்டு பிளவு-பிரிவினை ஆகிய தீய சக்திகளிடமிருந்து விடுபட்டு, உயிர்கள் அனைத்திடமும் அன்பு செலுத்துவதாக இருக்க வேண்டுமென்றும் கனவு கண்டார். அத

னாற்றான், 'இந்துநேய ஒருமைப்பாட்டுரிமை' என்று சொல்லாமல், 'ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை'என்று கோஷித்தார். கோஷம் புதியதாயினும், அந்தக் கோஷத்தினுள்ளே அடங்கியிருக்கும் குறிக்கோள் உலகத்திற்குப் புதிதன்று.

முன்னோர் கண்ட தோல்வி :

உலகில், மதாசாரியர்களாக-தீர்க்கதரிசிகளாகக் கருதப்படுவோர் அனைவருமே உலகம் முழுவதையும் ஒரே நெறியின் கீழ்க்கொண்டு வர முயன்றவரே யாவர். ஆனால், காலம் அவர்களுள் ஒவ்வொருவரையும் தனிமைப்படுத்திப் பல மதங்களை ஏற்படுத்திவிட்டது. அதனால், ஒவ்வொரு நெறியும் அல்லது ஒவ்வொரு இயக்கமும், காலத்தில் தனித்தனி மதங்களாகி, அவற்றைத் தோற்றுவித்தவர்களின் ஒரே உலகக் கனவு பலிக்காமல் செய்துவிட்டது.

மதவாதிகளும் ஞானிகளுமேயன்றி, சக்கரவர்த்திகளும் உலகனைத்தையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வர முயன்று, அதிலே அவர்கள் தோல்வியடைந்தனர். அதன் விளைவாக, சாம்ராஜ்யங்கள் பலவாயின. உலக சாம்ராஜ்யம் காணச் சக்ரவர்த்திகளுள் சிலர் முயன்றதற்குத் தலைமைப் பதவியில் அவர்கள் கொண்டிருந்த ஆசையும், ஒரு காரணமாக இருக்கலாம். ஆயினும், ஒரே உலகப்பொதுமை உணர்வும் அவர்களுக்கு இருந்த தென்பதை நாம் மறப்பதற்கில்லை.

ஞானியர்களும் அரசர்களும்அடைந்த தோல்விகளுக்குக் காரணம், அவர்களது 'ஒரே உலக' முயற்சியானது. ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வை அடிப்படையாகக் கொள்ளாததுதான். ஒரே உலக உணர்வுடன் தோன்றிய மதங்கள் தங்களுக்குள்ளே போட்டியிட்டு, போராடத் தொடங்கி, தத்தம் உயிர்க் கொள்கையான உலக ஒருமைப்பாட்டிற்கே கேடிழைத்துவிட்டன. அந்தப் புனிதமான குறிக்கோள் என்றென்றுமே நிறைவேறாதபடி, மதங்கள் தடைகளாகிவிட்டன. அதனாற்றான், மதங்களை அழித்தாலன்றி, ஆன்மநேய ஒருமைப்பாடு தோன்றுவதோ உலகிலுள்ள மனிதர் அனைவரும் ஒரு குலமாய் ஒன்றுபடுவதோ சாத்தியமில்லை என்றார் சமரச சுத்த சன்மார்க்க சங்கத் தலைவரான வள்ளலார்.

மதங்கள் பலவாயிருப்பினும், குறிக்கோளில் ஒருமைப்பாடு இருப்பின், வள்ளலார் மதங்களை வெறுத்திருக்கமாட்டார். ஆனால் அவர் வாழ்ந்த காலத்தில் ''போதித்த சமயமோ ஒன்று சொன்னபடி ஒன்று பேசாது,'' என்று தாயுமானவர் எடுத்துக்காட்டிய இழிதன்மையே நிலைத்திருந்தது. அதனால், மதங்களை ஒழித்து மனித குலத்திடையே ஒற்றுமை காண விழைந்தார்.

எம்மதமும் சம்மதம் :

'எம்மதமும் சம்மதம்' என்பது அடிகளாரின் கொள்கை. இதனை,

''எம்மத நிலையும் நின்னருள் நிலையில்
இலங்குதல் அறிந்தனன்
எல்லாஞ் சம்மத மாக்கிக் கொள்கின்றேன்.''

என்ற அருட்பா வரிகளில் வெளிப்படுத்துகின்றார். இங்கு 'எம்மதமும்' என்று அடிகளார் குறிப்பது, மத ஸ்தாபனங்களையன்று; மத தத்துவங்களையே. இந்தக் குறிக்கோளுக்கிணங்க சித்தாந்தம்,வேதாந்தம், நாதாந்தம், கலாந்தம், யோகாந்தம், போதாந்தம் ஆகிய ஆறு அந்தங்களையும் ஒன்றுபடுத்தி, ''ஷடாந்தம்'' என்றொரு சமரச சமஷ்டித் தத்துவத்தை உருவாக்கினார்.

ஆதிசங்கரர், இந்து மதத்தின் உட்பிரிவுகளான ஆக்னேயம், ஐந்திரம், காணபத்தியம், சைவம், வைணவம், சாக்தம் ஆகிய ஆறு சமயங்களையும் ஒன்றுபடுத்தினார். அது காரணமாக, 'ஷட்மத ஸ்தாபகர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றார். அவர் காலத்தில் இந்து மதமொன்றே இந்தியா முழுவதிலும் செல்வாக்குப் பெற்றிருந்ததால், அதன் உட்பிரிவுகளை ஒன்றுபடுத்துவதையே தேசிய ஒருமைப்பாட்டுப் பணியாக அவர் கருதியிருக்கக் கூடும்.

அவருக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் வாழ்ந்த வள்ளலார் காலத்தில், இஸ்லாம் கிறிஸ்துவ மதங்கள் இந்து மதத்தின் செல்வாக்கை ஊடுருவி, அந்த மதங்களைச் சார்ந்தவர்களால் நடத்தப்பட்ட அரசாங்கங்களின் துணையால், இந்தியாவில் நிலைத்துவிட்டன. ஆகவே, இந்து மதத்திற்குப் புறச்சமயங்களானசமண-பௌத்த மதங்களையேயன்றி, இந்தியாவிற்கே புறச் சமயங்களான இஸ்லாம் கிறிஸ்தவ மதங்களையும் ஒன்றுபடுத்தி, உலக ஒருமைப்பாடு காண விழைந்தார் வள்ளலார்.

இஸ்லாம் - கிறிஸ்தவம் :

அடிகள், தமது ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைக் கொள்கையை முதலில் இந்திய மதங்களிடையே மட்டும் பரப்ப முயன்றதற்கு முக்கிய காரணம், அந்தக் கொள்கைக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் நாடு இந்தியாதான் என்று அவர் நம்பியதேயாகும். இதனைச் சுவாமி விவேகானந்தரும் உறுதிப்படுத்துகின்றார்.

''எல்லாத் தேசங்களிலும் 'மன்னுயிர்களை எல்லாம் தன்னுயிர்போல் நினை' என்ற உண்மை சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் மனித உயிர்களுக்கும் மற்ற உயிர்களுக்கும் வித்தியாசம் காட்டுவதில்லை.''

''ஏன் மற்ற உயிர்களைத் தம் உயிர் போல் நினைத்து அன்பு செய்ய வேண்டும்? இதற்குக் காரணம் மற்ற சாஸ்திரங்களில் கொடுக்கப்படவில்லை. கடவுள் அருபமாய் எல்லா உயிர்களிலும் இருக்கிறார். அதனால், எல்லா உயிர்களும் சமம்.''

—இந்தியப் பிரசங்கங்கள், பக். 32.

ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைச் சித்தாந்தம், 'தெய்வம் ஒன்று' என வற்புறுத்துவதோடு, 'அத்தெய்வம் எல்லா உயிர்களிலும் இருக்கின்றது' என்றும் சொல்கின்றது. மனிதர் மிருகம் பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்பன வெல்லாம் உடலைக் காரணமாகக்கொண்ட வேற்றுமைகளே. அந்த வேற்றுமைகளுக்கும், ஆன்மாவுக்கும் சம்பந்தமில்லை என்பது அடிகளின் கொள்கை.

புல்லாகி :

உயிர்கள் அனைத்திலும் கடவுள் வியாபித்திருக்கிறார் என்ற உண்மையை உணராதவர், தம்மிடத்திலுள்ள கடவுள் தன்மையையும் உணரத் திறனற்றவராவர் இதனை,

''ஜீவகாருண்யம் ஆன்மாக்களின் இயற்கை விளக்கமில்லாத ஜீவர்களுக்கு கடவுள் விளக்கம் அகத்திலும் புறத்திலும் வெளிப்படவே மாட்டாது.''

—ஜீவகாருண்ய ஒழுக்கம்-3!

என்ற அடிகளார் வாக்காலும் அறிகிறோம்

பானுகவியின் தவறு :

வள்ளலாரை வெறுத்த மருட்பாக் கட்சியினர் சார்பில் தாம் வெளியிட்ட ''நியாய வச்சிர குடாரம்'' என்ற நூலில்.

"எம்மதமும் சம்மதமென்று பிள்ளையவர்களும் பிறரும் உரைப்பதெல்லாம் வேதாகம பிரதிபாத்திய மதங்களேயாம்"

என்கிறார், அதன் ஆசிரியரான ரத்னாகரம் ம. தி. பானுகவியார். அதாவது, வேதங்களையும், ஆகமங்களையும் ஏற்றுக் கொண்ட மதங்களையே அடிகள் சம்மதமாகக் கொண்டார் என்றார். இஃது உண்மையானால், சமணம்-பௌத்தம் - கிறிஸ்தவம் ஆகிய புறச்சமயங்கள், அடிகளார் காண விரும்பிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுச் சமுதாயத்திற்குப் புறம்பானவையாகிவிடும். பானுகவியாரின் விளக்கம் அடிகளாரின் கருத்துக்குப் பொருந்துவதாக இல்லை. அருட்பாவுக்கு எதிராகப் போர்க் கோலங்கொண்ட சைவர்களைச் சமாதானப்படுத்தவே பானுகவியார் தவறான விளக்கம் தந்தார் போலும். அவருடைய கருத்து அடிகளாரின் கொள்கைக்கு மாறானதென்பதைக் கீழ்வரும் பாடல்களால் அறியலாம்.

''பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகைஎன் கணவர்திருப் பேர்புகல்என் கின்றாய்
அருகர்புத்தர் ஆதிஎன்பேன் அயன்என்பேன் நாராயணன்என்பேன் அரன்என்பேன் ஆதிசிவன் என்பேன்
பருகுசதா சிவம்என்பேன் சுத்தசிவம் என்பேன்
பரமம்என்பேன் பிரமம்என்பேன் பரப்பிரமம் என்பேன்
துருவுசுத்தப் பிரமம்என்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவம் என்பன்இவை சித்துவிளையாட்டே.'' (1)

''சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்குச்
சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ என்றாய்
பிற்சமயத் தார்பெயரும் அவர்பெயரே கண்டாய்
பித்தர்என்றே பெயர்படைத்தார்க்கு எப்பெயர்ஒவ் வாதோ
அச்சமயத் தேவர்மட்டோ நின்பெயர்என் பெயரும்
அவர்பெயரே எவ்வுயிரின் பெயரும்அவர் பெயரே
சிற்சபையில் என்கணவர் செய்யும்ஒரு ஞானத்
திருக்கூத்துக் கண்டளவே தெரியும்இது தோழி.'' (2)

இப்பாடல்களிரண்டும் தலைவி தோழிக்கு உரைக்கும் பாவனையில் அடிகளார் பாடியவையாகும். முதற் பாடலில், அருகர்-புத்தர் என்னும் பெயர்களும் தாம் வணங்கும் ஆண்டவனுடைய பெயர்களே என்கிறார். ''அருகர்-புத்தர் என்பன புறச் சமயங்களின் தலைவர்கள் பெயராயிற்றே, அவை இந்து, ஆகம முறைப்படி வழிபடும் அம்பலத்தரசருக்குப் பொருந்துமா?'' என்று தோழி கேட்டதாகப் பாவித்து, இந்தியாவின் புராதன சமயங்களின் தலைவர்களாகிய அருகர்—புத்தர் ஆகியவர்களின் பெயர்களேயன்றி, ''பிற்சமயத்தார் பெயரும் அவர்பெயரே கண்டாய்'' என்கிறார். அடிகள் 'பிற்சமயத்தார்' எனக் குறிப்பிடுவது, பிற்காலத்தில் இந்தியாவில் புகுந்து, வளர்ந்து நிலைத்துவிட்ட இஸ்லாம்-கிறிஸ்தவ சமயங்களேயாகும். இதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆகவே, அடிகளார், 'எம்மதமும் சம்மதம்' என்றது, இஸ்லாம்-கிறிஸ்துவ மதங்களுக்கும் பொருந்துவதாகும். ''ஒருமையின் உலகெலாம் ஓங்குக'' என்றுரைத்த அடிகளார், இஸ்லாம்-கிறிஸ்தவ மதங்களை விலக்கி உலக ஒருமைப்பாடு காண விரும்புவாரா?

***

"திருஞான சம்பந்தன செந்தமிழ்கள்"

ந. ரா. முருகவேள், M.A., M.O.L,

''அருஞானம்வல்லார் அழுந்தை மறையோர்
பெருஞானமுடைப் பெருமான் அவனைத்
திருஞான சம்பந் தனசெந் தமிழ்கள்
உருஞான முண்டா முணர்ந்தார் தமக்கே''

—சம்பந்தர்.

முன்னுரை

நமது தமிழகத்தில் வாழையடி வாழையாகத் தோன்றித் தமிழுக்குத் தொண்டாற்றியவர்கள், தொல்காப்பியர் முதலாக எத்தனையோ பல பெரும் சான்றோர்கள் எண்ணில்லாதோர் இருப்பினும், அவர்களுள் எல்லாம் திருஞானசம்பந்தர், தனல சிறந்த ஒருவராவார்! அவருக்கு முன்பிருந்த தொல்காப்பியர் திருவள்ளுவர் திருமூலர் இளங்கோவடிகள் நக்கீரர் போன்றவர்களெல்லாம்,

''ஞானிகளாய் உள்ளார்கள் நான்மறையை
முழுதுணர்ந்தைம் புலன்கள் செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரியும் முதுகுன்றமே''

என்றபடி, மக்கட் சமுதாயத்தினின்று சற்று ஒதுங்கி நின்று, சிந்தனை வானில் உலவித் தனித்திருந்தே, தத்தம் நூல்களை இயற்றித் தமிழை வளர்த்தனர்.

தொல்காப்பியரும் திருவள்ளுவரும், மக்களிடையில் வாழ்ந்தனராயினும், பெருந் திரளான மக்களுடன் தொடர்பு கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. திருமூலர், தமது திருமந்திரம் என்னும் ஒப்புயர்வற்ற சிறந்த நூலைத், திருவாவடுதுறையில் ஒரு போதி மரத்தின் கீழ்த் தங்கியிருந்து, தவம்புரிந்தே இயற்றியருளினர். அவ்வாறே இளங்கோவடிகளும், தமது சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியத்தைக் 'குணவாயிற் கோட்டம்' என்னும் கோயிலில் இருந்தே, இயற்றியருளினார் என்று, அந்நூலின் பாயிரத்திலிருந்து தெரிகின்றது. ஆனால் திருஞானசம்பந்தரோ, அங்ஙனமின்றி ஊர் ஊராகத் தமிழகத்தின் மூலை முடுக்கர் எங்கணும் சென்று பல்லாயிரக்கணக்கான மக்கள் தம்மைப் பின்பற்றிச் சூழ்ந்து நிற்க, நாளும் தமிழ் பரப்பியருளினார்! அதுவும், இன்னிசையால் தமிழ் பரப்பியருளினார்! திருஞான சம்பந்தர்க்கு முன்னர், வேறு பிறர் எவரும் அத்தகையதொரு தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்ததாகவோ, தமிழ் மொழியைத் தமிழகமெங்கணும் சென்று, சீருறப் பரப்பி வளர்க்கும் சிறந்த தொண்டினைச் செய்ய முயன்றதாகவோ, நமக்குத் தெரியவில்லை.

களப்பிரர் காலம்

தமிழகத்தின் பொற்காலம் எனத் தகுந்த சங்ககாலத்திற்குப் பிறகு, தமிழக வரலாற்றில் ஓர் ''இருண்ட காலம்'' *(Kalabhra Interregnum)* நிலவியது. அவ்விருண்ட காலத்தில், நாட்டின் நிலைமைகள் பல்லாற்றான் நலிவுற்றுக் கிடந்ததனால், நல்ல இலக்கியம் எதுவும், அதுபோது தோன்றா தொழிந்தது. அவ்விருண்ட காலத்தில், சேர சோழ பாண்டியர்களாகிய தமிழ் மூவேந்தர்களின் ஆட்சி வலி குன்றிச் சீரழிந்திருந்தது. வேற்றரசர்கள், தமிழகத்திற் புகுந்து ஆட்சி செலுத்தத் தலைப்பட்டனர். வேற்று நாட்டவரின் கொள்கைகளும், பழக்க வழக்க ஒழுக்கங்களும், தமிழ்நாட்டில் தடையின்றிப் புகுந்து பரவத் தொடங்கி, அரசியற் செல்வாக்குடன் நிலைபெற முற்பட்டன.

, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த ''ஐந்தமிழ் (இயல்-இசை-நாடகம்--அறிவியல் - நுண்கலை) விழா'' வில், தமிழ்க்கடல் - சிவமணி திரு. இராய. சொக்கலிங்கம் அவர்களின் நினைவுஅறக்கட்டளையின் சார்பில் நிகழ்த்திய, சிறப்புச் சொற்பொழிவினைத் தழுவியது. (8-3-81).

பழந்தமிழ்ச் சங்கமும், அச்சங்கத் தமிழ் நூல்களும், அழிந்து மறையத் தொடங்கின. வேற்று நாட்டவர்க்கும், வேற்றுக் கொள்கையாளர்களுக்கும் தமிழகத்தில் ஏற்பட்ட ஆட்சி யுரிமை வலிமையால், தமிழ்நாடு மிகவும் தளர்வுற்றுத் தமிழ் மக்களும் நிலைகுலையலாயினர். சங்ககால வாழ்க்கை வரன்முறைகளும், பழக்க வழக்கப் பண்பாடுகளும் போற்றுவாரின்றி அழியத் தலைப்பட்டன. இசைத் தமிழும், நாடகத் தமிழும், பிற பல கலைகளும் அழியவிடப் பெற்றன. வேற்றவர் ஆட்சியும் தலைமையும் தமிழ் நாட்டிற் புகுந்ததனால், தமிழ் மக்கள் அடிமை மனப்பான்மை எய்தி, பழம்பெருஞ் சிறப்புக்களை இழந்து, மொழிப்பற்றும் கலையுணர்வும் குன்றி, அறிவுநலம் சாம்பி இழிதகவுற்றுக் கிடந்தனர்.

பழம்பெருந் தமிழ்ச் சமயங்களாகிய சிவநெறியும், திருமால்நெறியும் பொலிவிழந்து மங்கிக் கிடப்ப, ஒன்றுக்கொன்று முரண்பாடுடையனவும், ஒன்றோடொன்று பெரும் பகைகொண்டு, ஒன்றையொன்று அழித்தொழித்தற்கு அற்றம் நோக்கியிருந்தனவுமாகிய, பல புதுப்புதுக் கொள்கைகள், தமிழகத்திற் புகுந்து நுழைந்து வேரூன்றிப் பரவிச் செல்வாக்குப் பெற முயன்றன.

களபரர் அல்லது களப்பிரர் என்பார் நாடோடிகளாய் ஓரிடத்தும் நிலையாகத் தங்காமல், மக்களைச் சூறையாடுவதே தொழிலாகக் கொண்டிருந்து குழப்பம் விளைவித்து வந்த கூட்டத்தினராவர். பல்லவர்களுக்கு முன்பே அவர்கள் தமிழகத்திற் புகுந்து சங்க கால வாழ்வைச் சீரழித்தனர். தமிழகத்திற் குழப்பம் விளைத்துத் தமிழர்களின் பொருள் வளங்களைச் சூறையிட்டுக் கலைகளை அழித்து, வாணிகத்தைக் கெடுத்து, அரசியலை அலைக்கழித்துச் சமயநெறியைத் தாக்கிக் கேடு சூழ்ந்தவர்கள், களபரர்களே என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

களப்பிரர்கள் தமிழர் அல்லர்; தமிழ் நாட்டவரும் அல்லர். ஓரிடத்தும் நிலையாகத் தங்காமல் அலைந்து திரிந்து, கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்டிருந்த நாடோடிகள் (Nomads) எனத் தெரிகின்றது. அவர்கள் புகுதற்கு முன்னர்ப் பல துறைகளிலும் சிறந்து, தமிழகம் மேலோங்கியிருந்தது. களப்பிரர்களின் வருகைக்குப் பின்னரோ, கல்வி வாணிகம் செல்வம் அரசியல் சமயம் முதலிய துறைகளில், அவர்களால் பெரும் வீழ்ச்சியுற்றது.

* "The Madurai Tamil Sangams collapsed perhaps on account of dynastic change; and of the disturbances created by the *Kalabhras* who conquered the Pandya Country in the sixth century. The real cause of their disruption seems to have been the irruption of the Kalabhras into the Pandyanad. The common word '*Kalebharam*' meaning confusion, owed its origin to them."

—*Prof. M. S. Purnalingam Pillai*

பல்லவர் காலம்

இவ் இருண்ட காலத்திற்குப் பின்னர், கி. பி. 6-7-ஆம் நூற்றாண்டுகளில் பல்லவப் பேரரசு தலையெடுத்து, வளர முற்பட்டது. அப்பல்லவப் பேரரசின் காலத்தில்தான், நமது சைவ சமய ஆசிரியர்களாகிய திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் தோன்றி வாழ்ந்து விளங்கினார்கள். அவ்விரு பெருமக்களும் நமக்குக் காலத்தினாற் செய்த நன்றியின் அருமை பெருமைகளை, அவர்கள் காலத்துத்தென்னிந்தியாவின் அரசியல், பொருளியல், சமயவியல், சமூகவியல் வரலாறுகளையெல்லாம்நன்கினிது ஆராய்ந்தறியினன்றி, உள்ளவாறு உணர்தல் இயலாது. புதுமை புரட்சி சீர்திருத்தம் மறுமலர்ச்சி என்பன போலும் பல சொற்கள் சொற்றொடர்களை, இன்று நாம் பலகாலும் பலரும் முழங்கக் கேட்கின்றோம். இவை தம்மையெல்லாம் இற்றைக்குப் பல நூற்றாண்டு கட்கு முன்னரே, நமது சமய ஆசிரியர்கள் நிகழ்த்திக் காட்டியிருப்பதனை, நம்மிற் பலர் அறிவதில்லை. திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் முதலிய நமது சமய ஆசிரியர்கள், தமது காலத்தில் தமிழ்நாட்டில் பல பெரும் புரட்சிகளைச் செய்தனர்; புதுமைகளை வகுத்தனர்; சீர்திருத்தங்களை நிகழ்த்தினர்; மறுமலர்ச்சிகளை விளைத்தனர்!

''பாடிய செந்தமி ழாற்பழங்
காசு பரிசில்பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம்
பந்தன் நிறைபுகழான்

நேடிய பூந்திரு நாவுக்
கரசோ டெழில்மிழலைக்
கூடிய கூட்டத்தி னால்உள
தாய்த்திக் குவலயமே''

—நம்பியாண்டார் நம்பிகள்

நாடும் ஏடும்

ஒரு நாட்டின் நாகரிகச் சிறப்பினை விளக்குவனவற்றுள், அந்நாட்டிற்குரிய இலக்கியங்கள் தலைசிறந்தனவாகும். நாட்டு மக்களின் வாழ்க்கை நல்லநிலையிற் செழித்தோங்கியிருந்தால், அதுபோது தோன்றும் இலக்கியங்களும் செழித்துச் சிறந்தோங்கி விளங்கும். நாட்டு மக்களின் வாழ்க்கை நலிவுற்றுச் சிதைந்து சீரழிந்து போயிருந்தால், அப்போது தோன்றும் இலக்கியங்களும் தரங்குன்றித் தாழ்ந்திழிந்து நிற்கும். இலக்கியங்கள் வளர்ந்தால் நாடும் வளரும்! இலக்கியங்கள் இழிநிலை எய்தினால், நாடும் இழிநிலை எய்தும்! நாட்டு மக்களின் தாழ்வும் தளர்ச்சியும் போக்கி, நலம்பல பெருக்கிச் செழிப்பும் சிறப்புமுறச் செய்ய வல்லவை, சீரிய இலக்கியங்களே யாகும்.

திருஞான சம்பந்தப் பெருமான், தமது காலத்தில் பல வகைப் புதுமை புரட்சி சீர்திருத்தம் மறுமலர்ச்சி ஆகியவை களை நிகழ்த்தியமைக்கு உறுபெரும் சான்றுகளாக, அவர்தம் பாடல்களே அமைந்துள்ளன. ''பல்வேறு கொள்கை களாலும் சூழ்நிலைகளாலும் சிதறுண்டு கிடக்கும் ஒரு நாட்டின் மக்கள்தொகுதியை அவர்கள் பேசும் தாய்மொழியின் வாயி லாகத்தான் ஒற்றுமைப்படுத்தி உணர்ச்சி யூட்டிக் கிளர்ந்தெழச் செய்து முன்னேற்று தல் முடியும்'' என்னும் உயரிய உண்மை யினை உணர்ந்து, நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பிய ஞானசம்பந்தரின் தொண்டு பெரிதும் வியந்து போற்றத் தக்கதாகும். சங்ககால இலக்கியங்களுக்கும், அவற்றிற்குப் பின்னர் அவற்றின் அடிப் படையில் அமைந்து வளர்ந்த சமய இலக் கியங்களுக்குமிடையே, அமைப்பிலும்போக் கிலும் கருத்திலும், நடையிலும், பற்பல புதுமைகளைக் காணலாம். பாரதியார், தமது பாடல்களின் சொல்புதிது, பொருள் புதிது, சுவை புதிது, நடை புதிது என்று குறிப்பிடுதல்போல, நமது திருஞானசம்பந் தப் பெருமான், பாடியருளிய பாடல்களிற் கூட, சொல்லும் பொருளும் சுவையும் நடை யும், புதியனவாகவும், சிறப்புடையனவாக வும் விளங்குதல் அறிந்து மகிழற்பாலது!

''தமிழ்ஞான சம்பந்தன்''

இருண்ட காலத்திற் செயலிழந்து இழிநிலை அடைந்து, உணர்ச்சியற்றுத் தாழ்ந்து கிடந்த தமிழ் மக்களை, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி, திருஞான சம்பந்தர் தட்டியெழுப்பினார். தமிழ், தமிழர் என்னும் உணர்ச்சிகளை முதன் முதலில் தமிழகத்திற் பொங்கியெழுந்து கிளர்ந்தோங்கச் செய்தவர், நம் திரு ஞானசம்பந்தரே எனலாம். வேறு பிற எந்த ஆசிரியரும், தமிழோடு இயைத்துத் தம்மைச் சுட்டிக் கொள்ளாத நிலையில், முதன் முதல் தம்மைத் ''தமிழ்ஞான சம் பந்தன்'' எனப் பலப்பல பதிகங்களில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுக் கொண்ட வர், நம் திருஞான சம்பந்தரேயாவார். அவரே, தமிழ்நாட்டின் மூலை முடுக்கர் எங்கணும், ''கால் தரைதோய நடந்து'' என்றாற்போலச் சென்று, அக்காலத்தில் மக்களிடையில் நிலவிய தவறான பற்பல கொள்கை செயல்களையெல்லாம் கடிந்து களைந்து, முதன் முதலாக அகற்றினார்; தூய நல்ல அறவுரைகளையும் அருளுரை களையும். திறம்படவும் ஆற்றலோடும், பல் லாயிரக்கணக்கான மக்களின் மனங்கவரும் அழகிய வழிகளிலெல்லாம் பரப்பிவளர்த்த திருஞானசம்பந்தரின் செயலாண்மைத் திறம் பெரிதும் வியக்கற்பாலது. திருஞான சம்பந்தரின் அரும்பெரும் சிறப்புக்களை உணர்தற்குரிய வாயில்களுள்,

''புமியதனிற் ப்ரபுவான
புகலியில்வித் தகர்போல
அமிர்தகவித் தொடைபாட
அடிமைதனக் கருள்வாயே''

என்று வாக்கிற் சிறந்த 'அருணகிரிநாதர்' தாமும், வியந்து புகழ்ந்து போற்றி விரும் பும் வண்ணம், அப்பெருமானார் வெவ் வேறு வகையில், வெவ்வேறு நடைகளில், புதிய புதியவாகப் பாடிய பாடல்தொகுதி கள், சிறப்புடையனவாகும். அவைகள், தமிழகத்தின் சமயத்துறையில் மட்டு மன்றி, மொழித்துறை - இலக்கியத்துறை- கவிதைத் துறை -தத்துவத்துறை-முதலிய வற்றிலும்கூட, ஓர் அரிய பெரிய புதுமை யையும் மறுமலர்ச்சியையும் புரட்சியையும் விளைவித்துள்ளன. ஆதலின் திருஞான சம்பந்தப் பெருமான், தமக்கு முன்னரோ பின்னரோ வேறு எவரும் மிகுதியாகப் பாடாத பலவகை அரிய பெரிய கவிதை களை அருளிச் செய்துள்ள திறம்பற்றி, ஈண்டு ஒரு சிறிது இயன்றவரை முயன்று காண்போம்.

(1) மொழிமாற்று

'கலையை மறைத்து வைத்துப் புலப் படுத்துதலிலேயே கலையுள்ளது' (''Art lies in concealing art'') என்னும் உண்மைக்கு ஏற்ப, மொழிகளை மாற்றி யமைத்து மயக்கம் விளைத்துப் பின்னர் வியப்பையளிக்கும் ஒருவகைப் பாடலே மொழிமாற்று எனப்படும்.

''காட தணிகலம் காரரவம்
பதி காலதனில்
தோட தணிகுவர் சுந்தரக்
காதினில் தூச்சிலம்பர்
வேட தணிவர் விசயற் குருவம்
வில்லுங் கொடுப்பர்
பீட தணிமணி மாடப்
பிரமபுரத் தாரே''

எனவரும் திருப்பதிகம் மொழி மாற்று எனப்படும். இதன்கண் ''காடது பதி, கார் அரவம் அணிகலம், கால்அதனில் தூச்சிலம் பர், சுந்தரக் காதினில் தோடது அணி குவர், வேடது உருவம் அணிவர், விசயற்கு வில்லுங் கொடுப்பர்....'' என மொழிகளை மாற்றிப் பொருள்கொள்ள வேண்டியிருந்த லால், இது மொழி மாற்று எனப்படுவ தாயிற்று.

"In any social group, whatever its nature and however large it may be, language plays a role of primary importance. It is the strongest of the bonds uniting the members of the group, and is at the same time the symbol and safe-guard of their common life. What instrument can have greater efficiency than language in affirming the individuality of the group. It is their sign of recognition, and their badge of brotherhood.

—Prof. Vendryes,
Language.

(2) மாலைமாற்று

ஒரு மாலையை மாற்றிப் பிடிப்பது போல, ஒரு செய்யுளின் முதல் வரியைப் படித்துப் பின்னர், அதனையே இறுதியிலிருந்து திருப்பிப் படிக்க, அஃது இரண்டாம் வரியாக அமைவது, மாலைமாற்று எனப்படும். இரண்டு வரிகளால் அமைந்து, முதல்வரியின் ஈறே அடுத்த வரியின் முதலாக மாறி, மாற்றியமைக்கப் பெறினும் பொருள்நலம் சிதைந்து நிற்கும் சிறப்பு மிக்கது, மாலை மாற்று என்னும் இச் சிறந்த திருப்பதிகம்.

''யாமாமாநீ யாமாமா
யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா
மாமாயாநீ மாமாயா''

''சிற்றுயிர்களாகிய யாம், கடவுள் என்பது பொருந்துமோ? நீ ஒருவனுமே கடவுள் என்றல் பொருந்தும்; பொருந்தும். பெருமை மிக்க யாழை ஏந்தியிருப்பவனே! அனைவராலும் விரும்பப்படுபவனே! காண்பதற்கு அழகாகப் பாம்புகளை அணிந்திருப்பவனே! காண முடியாதபடி காமனை எரித்தவனே! சீர்காழிக்குத் தலைவனே! பெரிய மாயைகளைச் செய்தலில் வல்லவனே! கரிய கொடிய உலகியல் ஆகிய மாயையினின்றும் நீக்கி, எம்மைக் காத்தருள்க'' என்பது, இப்பாடலின் திரண்ட பொருள் ஆகும். இத்தகைய பாடல்கள் பதினொன்று கொண்டது, மாலை மாற்று என்னும் இத் திருப்பதிகம்.

(3) வழிமொழித் திருவிராகம்

தாம் தோன்றியருளிய சீர்காழிக்குரிய பன்னிரண்டு பெயர்களும் வந்த வரலாற்றினை, அவ்வழியே மொழிதலினாலும், முடுகிய சந்தம் உடைமையினாலும், பாட்டின் ஒவ்வோர் அடியிலும் எல்லாச் சீர்களிலும் அப்பாட்டில் கூறப்படும் பெயருக்கு ஏற்ற வழிஎதுகை அமையும் செய்யுள் யாப்பமைதியுடைமையாலும், வழிமொழித் திருஇராகம் எனப்பெயர் பெறும்.

''சுரருலகு நரர்கள்பயில் தரணிதலம்
முரண்அழிய, அரணமதில்முப்
புரம்எரிய விரவுவகை சரஇசைகொள்
கரமுடைய பரமன்இடமாம்;
வரம்அருள வரன்முறையின் நிரைநிறைகொள்
வருசுருதி சிரவுரையினால்,
பிரமன்உயர் அரன்எழில்கொள் சரண இணை
பரவவளர், பிரமபுரமே''.

எனவரும் பாடலில் பிரமபுரம் என்னும் பெயருக்குரிய வரலாற்றை மொழிவதுடன், அப்பிரமபுரம் என்னும் பெயருக்கு ஏற்ப, ஒவ்வொரு வரியின் சீரிலும் இரண்டாம் எழுத்தாக ரகரம் அமைக்கப்பட்டிருத்தல் காணலாம். ''தேவருலகமும், மனிதர்கள் வாழும் மண்ணுலகமும், பகைமையற்றுத் திகழும்படி, முப்புரங்கள் எரியுமாறு விரைந்து செல்லும் அம்பினைத் திருக்கையிற் கொண்ட சிவபெருமானின் இடம், தனக்கு வரம் அருளும்வண்ணம் எழுவகைச் சுரங்களும்வரிசைப்படியமைந்த வேதமுடிபாகிய உபநிடத மொழிகளால், சிவபிரானின் இரு திருவடிகளையும், பிரமன் புகழ்ந்து போற்றித் துதித்த பிரமபுரம் என்னும் சீர்காழியாகும்'' என்பது, இப்பாடலின் பொருள். இவ்வாறே வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பிற பெயர்களுக்கும், அவ்வப்பெயர்களுக்கு ஏற்ற எழுத்துக்கள், அவ்வவ் வரியின் ஒவ்வொரு சீரிலும் இரண்டாவது எழுத்தாக அமையும்படி, முழுவதும் அமைத்து அழகுறப் பாடுவது, ''வழிமொழித் திருவிராகம்'' என்னும் பதிகமாகும். இப்பதிகம் இயல்நலமும் இசைநலமும் பெரிதும் அழகுற அமையப் பெற்ற தொன்றாகும்.

(4) ஏகபாதம்

ஒரு பாடலின் முதல் வரியாகிய ஓர் அடியே, ஒருசிறிதும் மாறாமல் ஏனைய மூன்று அடிகளாக முழுவதும் அமைந்து, வெவ்வேறு வகையான வியத்தகு பொருள்களை விளக்கிக் கொண்டு நிற்பது. ஓர் அடியாகிய ஏகபாதமே, ஏனைய மூன்று அடிகளாகவும் மீண்டும் மடங்கி வரப் பாடப்பெறுவதாகலின், இப்பதிகம் ஏகபாதம் எனப்படும்.

''பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்''

''ஞானாகாசம் ஆகிய பராசத்தியின் குறைவிலாப் பெருநிறைவை மிகவும் வியந்து, அதற்கும் அப்பாற்பட்டு நிற்பவன் எந்தப் பெரியோன்? ஓங்கியுயர்ந்த இடமாகிய வானத்தில் ஓடும் கங்கைநதியினைச் சடைமுடியில் தரித்திருப்பவன், எமக்கு உயிர் ஆவான்; பிரமம் ஆகிய பரம் பொருளின் நிலையில் என்னை முத்தியில் உய்க்க, என்னைப் போன்ற மனிதவடிவில் வந்தவன்; பிரமபுரம் என்னும் சீர்காழியில் உறைகின்ற பெருமான், எமது கடவுளாவான்'' என்பது, இப்பாடலின் திரண்ட பொருள். இங்ஙனம் பன்னிரண்டு பாடல்கள் கொண்டது, ''ஏகபாதம்'' என்னும் திருப்பதிகம். இதன்கண் நான்கு வரிகளும் ஒன்றுபோலவே முழுவதும் அமைந்திருப்பினும், இவற்றின் பொருள் நலம் வெவ்வேறு வகையில் சிறப்புறஇனிது அமையும்படி, நயமுறப் பாடியருளிய, நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரின் அற்புதக் கவிதைத்திறம், அறிஞர்கள் வியந்து அகமகிழ்ந்து போற்றுதற்குரியது!

(5) இயமகம்

இயமகம் எனினும், மடக்கு எனினும் பொருள் ஒன்றே. இயமகம் என்னும் வடமொழிப் பெயர், தமிழில் மடக்கு எனப்பெறும். ஒரு செய்யுளில் ஒருகால் பயின்று வந்த சொல்லே மீண்டும் மீண்டும் பலகால் மடங்கி வருதலால், இது 'மடக்கு' என வழங்கும். இங்ஙனம் சொற்கள் செய்யுட்களில் மடங்கிவரும் முறைகள், முந்நூற்றுப் பதினைந்து (315) வகைப்படும் என்பர் இலக்கண நூலார்.

உற்றுமை சேர்வது மெய்யினையே,
உணர்வது நின்னருள் மெய்யினையே;
கற்றவர் காய்வது காமனையே,
கனல்விழி காய்வது காமனையே;
அற்றம் மறைப்பது முன்பணியே,
அமரர்கள் செய்வதும் உன்பணியே;
பெற்றும் உகந்தது கந்தனையே,
பிரமபுரத்தை உகந்தனையே!

இச்செய்யுளின் ஒவ்வொரு வரியிலும் இடையில் வந்த சொல்லே, ஈற்றிலும் திரும்பி மடங்கி வந்து, வெவ்வேறு சிறந்த பொருள்களைத் தந்து நிற்றல் காணலாம். ''உமையம்மையார் பொருந்திச் சேர்ந்திருப்பது நின் திருமேனியையே; சிவஞானிகள் உணர்ந்து வழிபடுவது நின்னுடைய அருளின் உண்மையினையே; கற்றறிந்த பெரியோர்கள் வெறுப்பது பிறன் காவலுக்குரிய மனைவியை விரும்புதலையே; நின்னுடைய நெருப்புமயமான நெற்றிக்கண் சிவந்து எரிப்பது மன்மதனையே; நினது மறைவிடத்தினை மறைத்துக் கொண்டு நிற்பது முன்னேயுள்ள பாம்பே; தேவர்கள் அனைவரும் இயற்றுவது உன்னுடைய திருத்தொண்டே; மகனாகப் பெற்று வாரி எடுத்து அணைத்தது முருகனையே; இத்தகைய நீ பிரமபுரம் என்னும் சீர்காழியினையே விரும்பியருளினாய்'' என்பது இப்பாடலின் திரண்ட பொருள்.

(6) இருக்குக் குறள்

இரு சீரால் இயன்ற அடிகளையுடைய பாடல். வெண்பாவினத்தில் 'குறள்' என்பதொருவகை, இரண்டடிகளான் இயன்றுவருவதுண்டாகலின், அதனின்று இதனைப் பிரித்துக் காட்டுதற்கு, இஃது ''இருக்குக் குறள்'' எனப் பெயர் பெறுவதாயிற்று. ''இருக்கு'' என்பது, வடமொழியில் ஒரு வகைச் செய்யுள் அமைப்புக்குப் பெயர். அதனால் அமைந்தமை பற்றியே ''இருக்கு வேதம்'' எனப் பெயர் வந்தது என்பர். இதனை ஆசிரியர், சேக்கிழார் ''தமிழ் இருக்குக் குறள்'' என்று சிறப்பிப்பார்.

''வாசி தீரவே
காசு நல்குவீர்
மாசின் மிழலையீர்
ஏசல் இல்லையே''

என்பன போன்றுவரும் பல திருப்பதிகங்கள் ''திரு இருக்குக் குறள்'' எனப் பெயர் பெற்று வழங்கும்.

(7) எழு கூற்றிருக்கை

ஏழு கூறுகளால் தேர்போலஅமைத்து, ஒன்றுமுதல் ஏழு வரையில் ஒவ்வோர் எண் மிகுத்தும் குறைத்தும், எண்ணலங்காரம் அமைய, இணைக்குறள் ஆசிரியப் பாவாற் பாடப் பெறுவது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் திருமங்கையாழ்வாரும், பதினொன்றாம் திருமுறையில் நக்கீரதேவ நாயனாரும், திருவெழுகூற்றிருக்கை பாடியுள்ளனர். இதற்குரிய இலக்கணத்தினை, மாறன் அலங்காரம் முதலிய நூல்களிற் காணலாம்.

''......ஒருங்கிய மனத்தோடு
இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறை
முடித்து
நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து, ஆறு அங்க முதலெழுத்துஓதி,
வரன்முறை பயின்று, எழுவான்தனை
வளர்க்கும்
பிரமபுரம் பேணினை......''

இதன்கண் ''ஒருங்கிய-இருபிறப்பு-முப்பொழுது-நான்மறை-ஐவகைவேள்வி- ஆறு அங்கம்-ஏழு வான்'' என்னும் சொற்றொடர்களில், ஒன்றுமுதல்ஏழுவரையுள்ள எண்ணின் பெயர்கள் முறையே வந்திருத்தல் காணலாம். ஏனைய எல்லாத் திருப்பதிகங்களிலும் போலவே, இதன்கண்ணும் இராவணன்-அயன்மால்-சமணபுத்தர் பற்றிய குறிப்புக்களும், பதிகப் பயனும் கூறப்பெற்றிருக்கின்றன. மேலும் சீர்காழிக்குரிய பிரமபுரம் முதலிய பன்னிரண்டு பெயர்களும்கூட, இப்பதிகத்தில் வரிசைமுறை பிறழாமல் குறிக்கப் பெற்றிருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

(8) ஈரடி

இத்திருப்பதிகம் இரண்டு அடிகளால் இயன்று, குறள் வெண்பா முதலியவற்றின் வேறுபட்டு வருவது. ஏனைய விருத்தச் செய்யுட்கள் போல நான்கு அடிகளால் அமையாமல், இரண்டு அடிகளால் வருவதனால், இத்திருப்பதிகம் ஈரடி எனப்பட்டது. இதன் இரண்டாம் அடியில் இறுதிச்சீர் குறைந்து வந்துள்ளது.

''பரசு பாணியர் பாடல்வீணையர்
பட்டினத் துறை பல்லவ னீச்சரத்து,
அரசு பேணி நின்றார்
இவர் தன்மை அறிவார் ஆர்?''

(9) ஈரடி மேல்வைப்பு

செய்யுள்கள் பெரும்பாலும் நான்கு அடிகளால் அமைந்து வருதல் இயல்பு. அங்ஙனமின்றிச் செய்யுளின் நான்கு அடிகளில், முன்னை இரண்டு அடிகள் ஒருவகையாகவும், பின்னை இரண்டு அடிகள் ஒருவகை

யாகவும் அமைந்து, சந்தமும் பொருளும் இணைத்து வைத்ததுபோலக் காணப்படுவது. இவ்வாறு வைப்பாக உள்ள பின்னை இரண்டடிகள் ஒன்றேயாகவேனும், வெவ்வாறாகவேனும் வருவது உண்டு.

''கொட்டமே கமழும் கொள்ளம் பூதூர்
நாட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே''

(10) நாலடி மேல்வைப்பு

'ஈரடி மேல்வைப்பு' என்னும் திருப்பதிகம் போலவே, நான்கு அடிகளுக்கு மேல், இரண்டு அடிகள் சந்தமும் பொருளும் ஒன்ற, இணைத்து வைத்தாற்போல வருவது.

''இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழு
வேன்
கடல்தனில் அமுதொடு கலந்து நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக்
கில்லையேல்
அதுவோஉன தின்னருள் ஆவடுதுறை
அரனே''

(11) சக்கரமாற்று

சீர்காழிக்குரிய பன்னிரண்டு திருப்பெயர்களும், சக்கரத்தின் ஆர்கள்போல முறைமுறையே மாறிமாறிச் சுழன்று அமைந்து வரப் பாடப்பெறுவது. இது சித்திரகவி வகைகளுள் ஒன்று. மதுரை மாநகரில் பாண்டியன், திருஞானசம்பந்தரை நோக்கி 'உமது ஊர் யாது?' என்று வினவியபோது, அதற்கு விடையாகக்கூறும் முறையில், திருஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய திருப்பதிகம், திருச்சக்கர மாற்று என்னும் சித்திரகவி வகையைச் சேர்ந்ததாகும்.

''பிரமனூர் வேணுபுரம் புகலி
வெங்குருப் பெருநீர்த் தோணி
புரம்மன்னு பூந்தராய் பொன்னஞ்
சிரபுரம் புறவம் சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவயம்
உள்ளிட்டங் காதியாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக்
கழுமலம்நாம் பரவுமூரே''

(12) கோமூத்திரி

பசுவானது நடந்து கொண்டே சிறுநீர் பெய்யும்போது, அந்நீர் ஒழுகிய தாரையானது, எவ்வாறு நெளிந்த வடிவுடன், மாறிமாறி வளைந்து காணப்படுமோ, அவ்வாறு பாடப்பெற்ற சித்திரகவி, கோமூத்திரி எனப் பெயர்பெறும்.

''பூமகனூர் புத்தேளுக் கிறைவனூர்
குறைவிலாப் புகலி பூமேல்
மாமகளூர் வெங்குருநற் றோணிபுரம்
பூந்தராய் வாய்ந்தஇஞ்சிச்
சேமமிகு சிரபுரஞ்சீர்ப் புறவம்நிறை
புகழ்ச்சண்பை காழிகொச்சை
காமனைமுன் காய்ந்தநுதற் கண்ணவ
னூர்
கழுமலம்நாங் கருதுமூரே''

இத்திருப்பதிகம் கோமூத்திரி என்னும் சித்திரகவி வகையைச் சார்ந்தது என்பதனை ''வழிமுடக்கும் ஆவின் பாச்சல்'' என்று, திருஞானசம்பந்தப் பெருமானே அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம்.

(13) கூடசதுக்கம்

திருக்கயிலாயம் திருவானைக்கா திருமயேந்திரம் திருவாரூர் என்னும் நான்கு தலங்களின் பெயரும், ஒவ்வொரு பாடலிலும் கூடி அமையும்படி, பாடப்பெற்ற திருப்பதிகம். இது 'கூடற் சதுக்கம்' எனவும் வழங்கப்பெறும்.

''மண்ணது உண்டு அரி மலரோன் காணா
வெண்நாவல் விரும்பும் மயேந்திரரும்
கண்ணது ஓங்கிய கயிலை யாரும்
அண்ணல் ஆரூர் ஆதி ஆனைக்காவே''

(14) திருத்தாளச் சதி

திருஞானசம்பந்தர், நமது செந்தமிழிற் பலவகைச் சந்தநலங்கள் அமைய, அரும்பெரும் கவிதைகளை அழகுறப் பாடிய முதற்பெருங் கவிஞராவர். ''சந்தமெல்லாம் அடிச்சாத்தவல்ல சம்பந்தன்'' என்று, அவரே தம்மைப்பற்றிக் குறிப்பிடுதல் போல, அவரது பாடல்களில் ஏராளமான செந்தமிழ்ச் சந்தநலங்களைக் காணலாம். பலவகையான இன்னோசை நலங்களும், வெவ்வேறு வகையான தாளத்து ஒலிவகைகளும், சம்பந்தரின் திருப்பாடல்களில் அற்புதமாக அமைந்து அழகுறத் திகழும். ''பண்ணும் பதம்ஏழும் பலவோசைத் தமிழ்அவையும், உள்நின்றதொர் சுவையும், உறுதாளத்து ஒலிபலவும்'' திருஞானசம்பந்தப் பெருமானின் தேவாரத் திருப்பதிகங்களில் மிகுதியாக அமைந்து சிறப்புற விளங்குதல், இயலிசை நுணுக்கத் திறங்களையெல்லாம் அறிந்துணர வல்லவர்களுக்கு, ஆராப் பெரு விருந்தாகும். திருஞானசம்பந்தர் திருக்கோலக்காவில் சிவபெருமான்பால் பொற்றாளம் பெற்றவராதலின், தாளக் கணக்கின் பலவகை ஒலிநுட்ப நலங்கள் அனைத்தும் அமையத், தமது தேவாரத் திருப்பாடல்களை அருளிச் செய்துள்ளனர்.

''பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற
உம்பர், அப்
பாலேசேர்வாய்; ஏனோர்கான் பயில்கண
முனிவர்களும்
சிந்தித்தே வந்திப்பச், சிலம்பின்மங்கை தன்
னொடுஞ்

சேர்வார்; நாள்நாள் நீள்கயிலைத் திகழ்தரு பரிசதெலாம்
சந்தித்தே, இந்தப்பார் சனங்கள்நின்று தங்கணால்
தாமேகாணா வாழ்வாரத் தகவுசெய்த வனதிடம்;
கந்தத்தால் எண்டிக்கும் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார்பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே''

என்னும் திருப்பதிகம் ''திருத்தாளச் சதி'' என்னும் சிறப்புப் பெயர்பெற்றதாகும். இத்திருப்பதிகத்தின் சிறப்பினை ''ஏழே ஏழே நாலே மூன்றியலிசை இசையியற்பா'' எனத் திருஞானசம்பந்தப் பெருமானார் தாமே, இதன் இறுதித் திருப்பாடலிற் குறிப்பிட்டுப் புகழ்ந்து போற்றியிருத்தல் நினைந்துணரற்பாலது. ''தேமாங்காய்-தேமாங்காய்-புளிமா - தேமா - கூவிளம்-தேமா-தேமா-தேமாங்காய்- கருவிளம்-கருவிளங்காய்'' என்னும் வாய்பாடு அமைய, இத்திருப்பதிகம் எழிலுற இன்னோசைத் திறம் விளங்கப் பாடப்பெற்றுள்ளது.

(15) யாழ் முரி

இதனை 'யாழ்மூரி' எனவும், 'யாழ் முறி' எனவும்கூட வழங்குவர். தேவாரத் திருப்பதிகங்களின் தெய்விக இசை, எளிய நமது இசைக் கருவிகளின் அளவுக்கு உட்படாத பெருஞ் சிறப்பும், மாட்சிமையும் செறிந்து திகழ்வதுஎன்னும்உண்மையினை, சம்பந்தரோடுஎங்கும்உடன் சென்று ஒருங்குறைந்து, யாழிசைத் தொண்டு புரிந்து வந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரின் சுற்றத்தவர்களும், ஏனைய பிற உலக மக்களும் உணர்ந்து கொள்ளும் பொருட்டு, திருநீலகண்ட யாழ்ப்பாணரின் வேண்டுகோளின்படி, இது திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற சிறந்ததொரு திருப்பதிகம் ஆகும். இப்பதிகம் ''தான-தனத்தனனா - தன - தான - தான தர்னனா-தனா தனா தனா தனா-தனதன தனனா'' என்னும் சந்த அமைப்புக்கொண்டது. இசைப்பாடல்களின் ஒரு பகுதியைச் சேர்ந்தவை என்று இசையாசிரியர்கள் கூறகின்ற முகநிலை-கொச்சகம்-முரி என்பவற்றுள், இப்பதிகம் 'முரி' என்னும் பகுதியைச் சேர்ந்தது என்று கொள்ளலாம். இப்பதிக இசையினை யாழில் இசைக்க இயலாமல், தமது யாழினை முரிப்பதற்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் முயன்றனர் ஆதலின், இது 'யாழ்முரி' எனப் பெயர் பெற்றது என்பர் சிலர். 'மூரி' என்பது மிகுதல், மேற்படுதல் என்னும் பொருளுடையது என்று கொண்டு, யாழின் இசையில் அடங்காமல், அதனின் மிகுதியுற்று மேற்பட்டு நின்றமையின் 'யாழ்மூரி' எனப் பெயரமைந்தது என்றும் சிலர் கூறுவதுண்டு.

''மாதர் மடப்பிடியும் மட அன்னமும் அன்னதோர்
நடையுடைம் மலைமகள் துணையென மகிழ்வர்;
பூத இனப்படை நின்றிசை பாடவும் ஆடுவர்;
அவர் படர் சடைந் நெடு முடியதோர் புனலர்;
வேதமோ டேழிசை பாடுவர்; ஆழ்கடல் வெண்திரை
இரைந் நுரை கரை பொருது விம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங்கும் மலர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயில் தருமபுரம் பதியே''

இயற்றமிழ் நலமும், இசைத்தமிழ் நலமும் ஒருங்கு சேர்ந்து இணைந்திலங்கும் இத்திருப்பதிகத்தின் அருமைபெருமைகள், ஓர்ந்துணர்ந்து பாடியும் கேட்டும்பாராட்டி மகிழற்பாலன.

''மூல இலக்கியம்''

இங்ஙனமெல்லாம், திருஞான சம்பந்தப் பெருமான் அருளிய தேவாரத் திருப்பதிகங்களில், நாம் பலப்பல புதுமைகளையும், வியத்தகு நுட்பங்களையும் காணலாம். ''பழைய முறைகளையே பின்பற்றிச் செல்லும் தன்மையானது புதிது புதிதாகப் படைக்கும் கலைத்திறனுக்குப் பெரும்பாலும் பகையாகவே அமைகின்றது'' (''Conformity is often the enemy of creativity'') எனத் திருவுளம் கொண்டு, தமது காலத்தில் தமிழ்நாட்டில் பலவகைப் புதுமையையும், புரட்சியையும், மறுமலர்ச்சியையும், சீர்திருத்தத்தினையும் விளைவித்து, நம் தமிழ் மக்களுக்குப் பல்லாற்றானும் புத்துணர்ச்சியும் புத்துயிர்ப்பும் ஊட்டியருளிய திருஞான சம்பந்தப் பெருமானின் எல்லையில்லாச் சிறப்பினை உணர்தற்கு, அப்பெருமான் பாடியருளிய இன்னோரனைய பற்பல புதுவகைப் பாடல்களை ஆராய்தலும் ஒரு நெறியாகும்.

சங்ககாலத்தில் புலவர்கள் பலர் சிறந்து விளங்கியிருந்தனரேனும், அவர்கள் சிலபல செய்யுட்களை இயற்றினரேயன்றி, நம் திருஞான சம்பந்தப் பெருமானைப் போன்று, இசைநலம் செறிந்த அழகிய பற்பல அற்புதக் கவிதைகளைக் கலைத்திறமும் உணர்ச்சிப் பெருக்கமும் அமைய, ஆயிரக்கணக்கில், ''உளங்குளிர்ந்தபோதெல்லாம் உவந்துவந்து பாடுவனே'' என்றாற்போலே, உடனுக்குடன் ஒருங்கே பாடினவர் அல்லர். இவ்வுண்மையைச் செவ்விதின் உணர்ந்தால், நம் திருஞான சம்பந்தப் பெருமான்தான், நம் தமிழகத்தில் முதல் முதலாகத் தோன்றிய தலைசிறந்த இயல்இசைப் பெருங் கவிஞராவார் என்பதனை, யாவரும் இனிதுணர்ந்து தெளிதல் கூடும்.

பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பர நாதனார் அவர்கள் எழுதிய ''தமிழ்ச் செய்யுள் இலக்கணத்தில் உயர்தர ஆராய்ச்சிகள்'' (Advanced Studies in Tamil Prosody) என்னும் நூலில், இத்தகைய தேவாரத் திருப்பதிகச் செய்யுள் இலக் கணங்கள், ஒருசிறிது மட்டுமே, சுட்டப் பெற்றுள்ளன. தமிழ்ச் செய்யுள்களின் அமைப்புகள், இலக்கணங்கள் பற்றிய விரி வான ஆராய்ச்சிகள் செய்ய விழைபவர் களுக்கு, நம் திருஞானசம்பந்தப் பெரு மான் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள், ஒப்புயர்வற்றதோர் அரும்பெரும் கலைச் செல்வக் களஞ்சியம் ஆகும்.

மேலைநாட்டு அறிஞர் ஒருவர் ''கிளி யோபேட்ராவின் மூக்கின் அமைப்புச் சிறிது நீண்டோ குறுகியோ மாறியமைந் திருந்தால், உலக வரலாறே முற்றிலும் மாறியமைந்து போயிருக்கக்கூடும்'' ("If Cleopatra's nose had been an inch longer or shorter, all history would have been changed". — Pascal) என்று ஒரு சமயம் கூறிய தாகத் ''தத்துவத்தின் கதை'' (Story of Philosophy) என்னும் நூலில், அதன் ஆசிரி யர் ((Prof. William Durant) குறிப்பிடுவர். அதன் உண்மை எங்ஙனமாயினும், ''ஒரு சிறந்த கவிஞன் என்பவன், காலத்தைப் படைப்பவனும், காலத்தாற் படைக்கப் படுபவனும் ஆவான்'' ("A great poet is the creator and creature of his age"-W.H.Hudson) என்றபடி, தமது காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்பத் திருஞான சம்பந்தப் பெருமான் போன்ற நமது சமய ஆசிரியர்கள் தோன் றாதிருந்திருப்பின், நமது தமிழ்நாட்டின் வரலாறே முற்றிலும் சீர்குலைந்து தட்டு ளுப்புப்பட்டுத் தடுமாறிப்போய் நிலை திரிந்து ஒழிந்திருத்தல் கூடும். அங்ஙனம் மாறிப் போகாமல் தடுத்துக் காத்துநின்று, சங்ககாலத்தில் வழங்காத பற்பல வகை யான அற்புதக் கவிதைகளைச் சொற் பொருட் சுவை நலங்கள் துளும்பி விளங் கும் வண்ணம், மிகமிக வியக்கத்தகும் வகையில் திருவாய்மலர்ந்தருளிச் செய்து, நம் தமிழ் நாகரிகப் பண்பாட்டின் நலங் களையெல்லாம் அழிந்துபடாமற் போற்றி வளர்த்தளித்த அரும்பெரும் சிறப்பு ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர்க்கே உரியதாகும்.'' அது பற்றியே ''திருஞானசம்பந்தன செந் தமிழ்கள்'' பற்றிய அருமை பெருமைகளை யெல்லாம் நன்கினிது ஆராய்ந்துணர்ந்து கைவந்தவராகிய தெய்வக் கவிஞர் சேக் கிழார் பெருமான்,

''செந்தமிழ் மாலை, விகற்பச்
செய்யுட்களால், மொழிமாற்று,
வந்தசொற்சீர் மாலை மாற்று,
வழிமொழி எல்லா மடக்குச்
சந்த இயமகம், ஏகபாதம்,
தமிழ்இருக்குக் குறள் சாத்தி,
எந்தைக்கு எழுகூற் றிருக்கை,
ஈரடி, ஈரடி வைப்பு'' (1)

''நாலடி மேல்வைப்பு, மேன்மை
நடையின் முடுகும் இராகம்,
சால்பினில் சக்கரம்ஆதி,
விகற்பங்கள், சாற்றும் பதிக
மூல இலக்கியம்ஆக, எல்லாப்
பொருள்கோளும் முற்ற,
ஞாலத் துயர்காழி யாரைப்
பாடினார், ஞானசம்பந்தர்'' (2)

என்று, திருஞானசம்பந்தருக்கு முன்னரோ அல்லது அவருக்குப் பின்னரோ, வேறு எவராலும் பாடப்பெறாமல், அவர் ஒருவ ரால் மட்டுமே முதன் முதலாகச் சிறப் புறப் பாடப்பெற்ற, அரிய பெரிய அழகிய அற்புதத் தேவாரத் திருப்பதிகங்களை யெல்லாம், ஒருசேர நம்மனோர்க்குப் பட்டியல் இட்டுத் தொகுத்துக் காட்டி, அவற்றின் நலங்களையெல்லாம் நமக்குத் தெருட்டி அறிவுறுத்தும் முறையில், அவற்றை ''மூல இலக்கியம்'' எனச் சிறந் தெடுத்து விதந்துரைத்துப் புகழ்ந்து போற்றி மகிழ்வாராயினர் என்பது.

முடிவுரை

சைவசமயச் சான்றோர்களாகப் பலர் விளங்கியிருப்பினும், அவர்களிலெல்லாம் திருஞான சம்பந்தப் பெருமானே, தனிப் பெருஞ் சிறப்பும் முதன்மையும் மிக்கு டையவராகச் சான்றோர்களால் மதித் துத் துதித்துப் போற்றப்பெறுகின்றார். சைவத்தமிழ் மக்கள் அனைவருக்கும் திரு ஞானசம்பந்தப் பெருமானே, தன்னிக ரற்ற தனிப் பெரும் தலைமைச் சான் றோர் என்று, வாழையடி வாழையாக வந்த சைவத்தமிழ்ப் பெருமக்கள் அனைவ ருமே ஏற்றுடன்பட்டுப் போற்றியுள்ளனர். அப்பர் சுந்தரர் பட்டினத்தார் நம்பியாண் டார் சேக்கிழார் போன்ற பண்டைப்பெரும் சான்றோர்கள் முதலாக, பிற்காலத் தல புராண நூலாசிரியர்கள் பற்பலரும் ஈறாக, விளங்கிய சைவப் பெருஞ் சான்றோர்கள் எல்லோரும், ஞானசம்பந்தரின் நலங்களை நயந்து வியந்து போற்றிப் புகழ்ந்துள்ள னர். அத்தகைய அளப்பரிய சிறப்புவாய்ந்த வித்தகப் பெருஞ் சான்றோராகிய திரு ஞானசம்பந்தர் அருளிச் செய்த திருப்பதி கங்களாகியதேவாரத் தெய்வத்தீந்தமிழ்ப் பெருங்கடலில், நாம் அனைவரும் அன் புடன் ஈடுபட்டுத் திளைத்துப் பயின்று, ஆய்ந்துணர்ந்து பயன்கொண்டு, இன் புற்று வாழ்ந்து உய்ய முயல்வோமாக!

வெறியார் பொழிற்சண் பையர்
வேந்தர்மெய்ப் பாசுரத்தைக்
குறிஏறிய எல்லை அறிந்து,
கும்பிட்டேன் அல்லேன்;
சிறியேன் அறிவுக்கு அவர்தம்
திருப்பாதம் தந்த
நெறியே சிறிதுயான் அறிநீர்மை
கும்பிட்டேன் அன்பால்!

—சேக்கிழார்

மணவாள மாமுனிகளின் மாட்சி

மகாவித்வான் — பத்மவிபூஷன்

திரு. பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

நம்முடைய திருமால்நெறியின் சம்பிர தாயமானது, ஆழ்வார்களாலும் ஆசாரியர்களாலும் பெருமை பெற்றுப் பொலிகின்றது. இவ்வாழ்வார், ஆசார்ய பரம்பரையானது, பொய்கையாழ்வார் தொடங்கிப் பொய்யிலாத மணவாள மாமுனிகளோடு தலைக்கட்டுகின்றது. இப்பெரியார்கள் நமக்குச் செய்தருளின பேருதவிகளுக்கு நாம் செலுத்த வேண்டிய கைம்மாறு அவர்களுடைய புகழ்களை வாயாரச் சொல்லிப் போற்றுவதொன்றேயாம்.' நாமாகச் சில செய்யுள்களையோ, சுலோகங்களையோ இயற்றிப் போற்றுவதைக் காட்டிலும், முன்னோர்கள் மொழிந்தவற்றைக் கொண்டு போற்றுவது மேம்பட்டதாகும்.

ஆழ்வார்களில் நம்மாழ்வார் ஒருவர்க்கு மட்டுமே, மதுரகவிகள் அருளிய கண்ணிநுண் சிறுத்தாம்பு துதியுள்ளது. மற்றுள்ள ஆழ்வார்களுக்கு அவரவர்களின் திவ்வியப் பிரபந்தத்தனியன்களைத் தவிர, வேறொரு துணுக்கையும் துதியாக அமைந்திலது. இனி ஆசாரியர்களைப் பற்றிப் பேசப் புகுவோமாயின், எம்பெருமானார் ஒருவர்க்குத் தவிர, மற்றை எவர்க்கும் தோத்திர நூல் அமைந்திலது. இராமானுச நூற்றந்தாதியானது, சுவாமியின் காலத்திலேயே அவதரித்து மேன்மை பெற்றது; எதிராசசப்ததி, எதிராசவிம்சதி, எதிராச தண்டகம் முதலானவை பிற்காலத்தில் தோன்றியவை; நிற்க. சமகாலத்தில் தோன்றிய துதிநூல் நூற்றந்தாதி ஒன்றேயாம். வடுகநம்பி என்பவர், எதிராச வைபவம் என்று ஒரு வடமொழி நூல் பணித்தார். எனினும், அது சரித்திர நூலே அன்றித் தோத்திர நூல் அன்று. பல்கலையோர் தாம் மன்ன வந்த இராமா நுசன் திருவடிகளில் ஈடுபட்டிருந்த ஆயிரக் கணக்கான வைணவப் பெருமக்களில், எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகள் என்று பரிகணிதரான மகான்கள் ஒவ்வொருவரும் மிகச் சிறந்த பண்டித உத்தமர்கள்; அவர்களுள்ளும், ஆழ்வான் ஆண்டான் பிள்ளான் அனந்தாழ்வான் அருளாளப்பெருமாள் எம்பெருமானார் எம்பார் என்னும் இவர்கள், பிரசண்டபண்டிதர்கள். இவர்கள் எதிராசர் திறத்தில் பெரிய துதிநூல் எதுவும் பணித்தாகத் தெரியவில்லை. இக்குறையை அமுதனார் தம் நூற்றந்தாதியில், ஒரு பாசுரத்தில் காட்டியும் உள்ளார், ''இந்நீள் நிலத்தே எனை ஆளவந்த இராமாநுசனை இருங்கவிகள் புனையார்'' என்று. இதன் பொருளை நாம் விவரிக்க வேண்டுமோ.?

இராமாநுசர்க்குப் பிற்பட்டவர்களான எம்பார் பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை திருவாய்மொழிப் பிள்ளை முதலான ஆசாரியர்களுக்கு, ஒரு தோத்திர நூலும் திருவவதரிக்கக் கண்டிலேம். இதனால், தோத்திரம் செய்யக்கூடிய பெருமை அவ்வாசிரியர்கள் பக்கலிலே இல்லைஎன்று நாம் சொல்லுவதாகக் கருதலாகாது. தற்போது இங்கு மணவாள மாமுனிகளைப் பற்றி, நாம் விஞ்ஞாபிப்பதை மட்டும் குறிக்கொள்ள வேண்டும்.

''ஏராரும் எதிராசர் என உதித்தான் வாழியே'' என்று வாழ்த்தப்பட்டு வருகின்ற நம் மாமுனிகள், எம்பெருமானாருடைய அபராவதாரர் என்பதில் ஐயமில்லை. இவ்வளவே அன்று; அவர் தம் அவதாரத்திற் காட்டிலும் மிக்க மேம்பாடு உடையது, மாமுனிகள்தம் அவதாரம்! சுவதந்திரமாகப் புதிய நூல்களை அருளிச் செய்வதில் விசேட விருப்பம் அற்று, வியாக்கியான வடிவில் அமைந்த கிரந்தங்களை அருளிச் செய்வதிலேயே, ஊக்கமும் ஊற்றமும் இருவருக்கும் துல்லியமானது. சீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்த சாரம், கீதாபாஷ்யம் என்னும்இவைகள், வியாக்கியான கிரந்தங்களே அன்றோ? அப்படியே மாமுனிகளும், ''சீர்உலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடும் நாள்'' என்கிறபடியே, பிள்ளைலோகாசாரியருடையவும், அவரது திருத்தம்பியாருடையவும் அருமருந்தான திவ்விய இரகசிய நூல்களுக்கு வியாக்கியானங்களை அருளிச் செய்தார். எம்பெருமானார் வேதார்த்த சங்கிரகம், கத்தியத்திரயம், நித்தியம் என்கிற சுவதந்திர கிரந்தங்கள் சிலவற்றையும் அருளிச் செய்தாற்போலே, மாமுனிகளும் எதிராச விம்சதி, தேவராச மங்களம், திவ்வியதேச மங்களா

சாசன பத்தியமாலிகை, உபதேச ரத்தின மாலை முதலிய சுவதந்திர நூல்களையும் அருளினார். இவ்வகையாலே இருவருக்கும் ஒப்புமை என்பது நிற்க.

மாமுனிகளுக்கு எம்பெருமானாரைக் காட்டிலும் மிகுந்த ஆதிக்கியம் கேண்மின். ''ஓர் ஆண்வழியாய்'' என்கிற உபதேச ரத்தினமாலைப் பாசுரத்தின்படி, எம்பெருமானார்க்கு ஓர் ஏற்றம் தெரிந்து கொள்ளுகிறோம். அதாவது, ஆளவந்தார் முதலான முன்னோர்கள் அர்த்தங்களின் சீர்மையைக் கண்டு மறைத்து ஒளித்துப் போந்தார்கள் என்றும், எம்பெருமானார் அங்ஙன் அன்றிக்கே ''பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம், ஆரியர்காள்! கூறும்'' என்று கட்டளையிட்டதாகவும் காண்பதேயாம். இப்படி பிறர்க்குக் கட்டளையிட்ட எம்பெருமானார், முன்னும் தாம் இரகசியார்த்தங்களை ஏடுபடுத்தி விளக்கியிருக்க வேண்டும். பிரம்ம சூத்திரத்திற்குப் பல வியாக்கியானங்கள் இட்டவர், இரகசியப் பொருள்கள் விளக்கமாக ஒரு நூலும் பணித்திலர். அது அவர்க்குப் பெரிய குறையேயாம். அக்குறையைத் தீர்த்துக் கொள்ளுதற்காகவே அவர், தாமே மாமுனிகளாகத் திருக்கோலம் பூண்டார். இவ்வவதாரத்திற் செய்தருளிய காரியங்களே மிகமிகப் புகழத் தக்கவை ஆயின. ஆனது பற்றியே, இவ்வவதாரத் தனியனுக்கும் வாழிகளுக்குமே, நாடும் நகரமும் நன்கறிந்த பெருமை விளைந்து, அது, சந்திரசூரியர்கள் உள்ள வரையில் விளங்குவதாயிற்று. இம்மகோபகாரத்தின் மாண்புகண்டே, மாமுனிகளுக்குத் தோத்திர நூல்கள் மிகமிகத் தோன்றின. வடமொழியில் வரவரமுனி சதகம் என்று, இரண்டு சதக நூல்கள் எல்லையில்லாப் பேரின்ப வெள்ளமே வடிவெடுத்தன என்னும்படி தோன்றியுள்ளன. ஒன்று எறும்பியப்பா பணித்தது, மற்றொன்று அஸ்மத்குல கூடஸ் தர்பணித்தது. அன்றியும் ''பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அட்டப் பிரபந்தங்கள்'' என்னுமா போலே, அட்டதிக்கசாஜாரியர்களின் அட்டப் பிரபந்தங்களும் தமிழில் தோன்றியுள்ளன. எறும்பியப்பா என்னும் ஆசிரியர், வடமொழியில் வரவரமுனி சதகம் ஒன்றேயன்றி வரவரமுனி காவியம், வரவரமுனி சம்பு, வரவரமுனி கர்ணாம்மிருதம், அமிர்தத்தொனி என்பனபோன்ற பலப்பல துதிநூல்களையும் பணித்துள்ளார்.

இத் துதிநூல்கள் எல்லாவற்றிலும் கூறப்பட்டுள்ள விஷயங்களைச் சாரமாக எடுத்துரைப்போமாயின் 'மாமுனிகளின் திருநாவீறு பரமவிலட்சணம்' என்பதொன்றேயாம். இராமாநுச நூற்றந்தாதியின் சாரப்பொருள்—சுவாமி எம்பெருமானார் புறச் சமயிகளின் வாதங்களை வேரறக் களைந்து வெற்றிபெற்றார் என்பது. ''வாதியர்காள்! உங்கள் வாழ்வற்றதே—வாழ்வற்றது தொல்லை இவ்வாதியர்க்கு—தற்கச் சமணரும் சாக்கியப்பேய்களும் நீசரும் மாண்டனர்''—இத்தகைய பாசுரங்களே நூற்றந்தாதியில் அடுத்தடுத்துவரும். விரோதி நிரசன காரியம் அவ்வவதாரத்தில் தலைக் கட்டிற்று. ஆகையாலே, இவ்வவதாரத்தில் அதாவது மணவாள மாமுனிகளாகத் திருவவதாரம் செய்த நிலையில், தாம் அமிர்தபானம் செய்தருள்வதும், தமர்களை அமிர்தபானம் செய்வித்தருள்வதுமாய் நின்றது. இவ்விரண்டு அவதாரங்களையும் உற்றுநோக்கும் அளவில் உடையவரைச் சூரியனாகவும், மாமுனிகளைச் சந்திரனாகவும் அறுதியிடலாம். ஆனால் ஆகாசத்தில் உள்ள சந்திரனுக்குக் கலைகள் குறைவதும் ஏறுவதுமாகவே இருக்கும். மாதத்தில் ஒருநாள்தான் சகலகலா பரிபூரணனாகச் சந்திரனைப் பார்க்க முடியும். வரவரமுனியாகிய நம் சந்திரனுக்கோ, எப்போதும் சகலகலா பரிபூரண நிலையே ஒழிய வேறில்லை. அந்தச் சந்திரனுக்குக் களங்க சம்பந்தமுள்ளது பிரசித்தம், சாத்திர சித்தமுமாம். இந்த வரவர முனியாகிய சந்திரனுக்கு எவ்விதமான களங்கப் பிரசத்தியும் இல்லை. 'விசதவாக் சிகாமணி' என்கிற விருது மணவாளமாமுனிகள் ஒருவருக்கே தனிச் சிறப்பு வாய்ந்தது. கூறியது கூறல், மயங்க வைத்தல், நலிந்து பொருள் கொள்ளுதல், இன்னதுசொல்லிற்று என்று தெரியாதபடி பேசி வைத்தல், பிறர்மனம் நோவப் பேசுதல், வீணாக வளர்த்துதல், முன்னோர் மொழிந்த மொழிகளுக்கு மாறாகப் பேசுதல், முன்பின் முரண்படப் பேசுதல் முதலிய குற்றங்குறைகளை, ஏனைய ஆசிரியர்களின் நூல்களில் பார்க்க இயலும். இங்ஙன் சொல்லுதலால் அபசாரம் நேர்ந்தாலும், இதனை எம்பெருமானும் எம்பெருமானாரும் அபசாரமாகக் கொள்ளார்கள். 'சத்தியமுக்தம்' என்று திருவுள்ளம் பற்றுவர்கள் என்பதில் ஐயமில்லை.

பகவத் விஷயத்திற்கு ஊற்றுவாயாக நம்பிள்ளை தமது நித்திய காலட்சேபத் சேபத்தை அரங்கன் திருமுன்பே நடத்தியிருந்தும் அவரை ஆசாரியராகக் கொள்ளவோ, அவருக்குத் தனியன் விஞ்ஞாபிக்கவோ மனங்கொண்டிலன் மதிளரங்கன், மாமுனிகள் பக்கலிலே சிஷ்யவிருத்தி பண்ணிச் சந்திர சூரியர்கள் உள்ளவரையில், உலகில் ஓங்கி நிற்க, உலகம் புகழும் தனியனை விண்ணப்பம் செய்தது, மிக மிக அற்புதம்.

***

அருள்மிகு மீனாட்சி அம்மை தங்கத்தேர் உலாவிழா

(வித்துவான் திரு. தா. குருசாமி ஓதுவார், மதுரை.)

சீரேறு சொக்கர்மகிழ் மீனாட்சி
செம்பொன்செய் தேரதனில் ஞாயிறன்று
பாரறிய ரௌத்திரிதை இருபத்தெட்டில்
பண்புடனே உலாக்கொண்டாள் பரிவுடனே
ஊரறிய விழாக்கண்டார் குழுத்தலைவர்
வி. என். சி., வீரப்பர் முன்னிலையில்;
நீரேறுவே ளாணமைச்சர் காளிமுத்து
நிறைவோடு தொடக்கிடவே நிகழ்ந்ததுகாண்! (1)

மதுரைநகர் மேயருடன், துணைவேந்தர்
வசுபமா, கலையன்னை உரையாற்ற,
முதிர்ந்தநுண் கலைவனப்பால் ஏ. ஆர். சி.
தொழில்நுட்பத் தங்கத்தேர் தகவுடனே
அதிர்ந்தொளிரும் மின்விளக்கால் பொலிவுபெற
அழகுசேர் திருமுறையும் நாதசுர
உதிர்கான ஒலிமுழங்க உமையம்மை
உலாக்கண்ட கண்பெற்றார் பயன்பெற்றார் (2)

ஆலவாய்க் கயற்கண்ணி ஆடகநற்
பொற்றேரில் பிப்ரவரி எண்பத்தோர்
ஓலமிகும் எட்டாம்நாள் ஞாயிறன்று
ஒளிபரப்பி நான்காடி வீதிதனில்
சீலமுடன் எழுந்தருள மதுரையுளார்
சிந்தனைக்கோர் விருந்தெனவே கும்பிட்டார்
ஞாலம்நின் புகழ்மிகவே வேண்டுமென்ற
வாக்கினைப் புறநிகழ்வால் புதுப்பித்தார்! (3)

ஆக்மநற் செயல்வழியே தலைப்பட்டோம்
அருந்தமிழர் நெறிவழியே காப்போம்காண்
ஏகமுடன் மனமொன்றி அடியர்பணி
என்றென்றும் செய்திடுவோம் என்றுரைத்தே
வேகமுடன் வீரப்பர் விளக்கவுரை
மிகவழங்கி மீனாட்சி 'அடியரானார்
பாகமுடன் கொண்டுள்ள சொக்கநாதர்
பார்போற்றும் திருவருளைப் போற்றினாரே! (4)

தங்கத்தேர் முயற்சிக்குச் சுழியிட்ட
திருவேங்க டசுவாமி மிகவாழி!
அங்கங்கே அலைந்தலைந்தே தேர்ப்பணிக்கு
அயர்விலா முயற்சிசெய்த சிதம்பரனார்
சங்கந்தேர் தமிழ்ானார்! சால்போடு
துணைநின்ற ஆணையரும் புகழுற்றார்!
பொங்கிவருந் தேர்ப்பாட்டால் ஏற்கனவே
கல்நிறுத்திப் புகழ்கொண்டார் மிகவாழி! (5)

முன்னோர்நாள் மருதிருவர் வெள்ளித்தேர்
முழுமனதோ டுவந்தளித்தார் பெருமையுடன்
பின்னோர்நாள் குதிரைமிதி பொன்னாலே
ஆங்கிலேயக் கலெக்டரும் உவந்தளித்தார்
என்சொல்வேன் அன்னைஅருட் கருணையினை
விவிசி முதலியாரும் பல்லக்கை
இன்னாளில் உவந்தளித்தே பி. டி. ஆர்.
வைரமுடி தலைக்கணிந்தே புகழ்பெற்றார் (6)

திருப்பணிகள் பலசெய்த திருவாளர்
திருப்பணிமா லையினிலே பாக்கொண்டார்!
திருப்பணியாம் வரலாற்றின் பொன்னேடு
திகழ்தங்கத் தேர்உலாவின் எழுச்சிவிழா!
விருப்போடு பணிசெய்த விழுமியார்கள்
விதிஉலா சொக்கர்க்கும் எடுக்காமல்
அருட்பணியில் தலைப்பட்டார் அப்பணியும்
திருவருளால் முற்றுறவே வாழ்த்துகின்றேன் (7)

தங்கத்தேர் உலாவரற்கு உறுபணிகள்
நிர்வாக அரங்கசாமி சுப்பராயன்
அங்கமெனப் பணிசெய்யும் உள்துறைவாழ்
கணிப்பாளர் சண்முகனார் நாகராசத்
தங்கம்நிகர் பார்வையினில் மிகச்செய்தார்
தங்கத்தேர் அச்சாணி இன்னவரே!
பொங்கிவரும் பணிஒன்றே கடன்கொண்டார்
புகழ்வேண்டார் பணியுமுண்டு! வாழியவே! (8)

'தேனூறு செஞ்சொல்'

"சித்தாந்தக் கலைமணி", "மகாவித்துவான்"
திரு சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

தித்திக்கும் பொருள்களில் தேன்மிகச் சிறப்புடையது. தித்தித்தல் மட்டுமன்றி நோய் நீக்கி வலிமையைத் தருதல் தேனுக்கு உள்ள ஒரு தனிச் சிறப்பு. தித்திக்கும் பொருள்கள் பெரும்பாலும் பின்பு நோயைத் தருவனவாய் உள்ளன. தேன் அவ்வாறின்றி, அதற்கு மாறாக நோயைப் போக்குவதாய் உள்ளது. இதனால்,இனிய பொருள்களைத் தேனோடு ஒப்பிட்டுக் கூறுதல் வழக்கமாக உள்ளது.

நூல்களில் மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகத்தைப் பெரியோர்கள் 'தேன்' என்றே கூறிப் போற்றியுள்ளார்கள்.

''தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே-எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்''

என்னும் தனிப்பாடலை யாவரும் அறிவர். 'நால்வர் நான்மணிமாலை' என்னும் நூலை அருளிச் செய்த சிவப்பிரகாச அடிகளும், திருவாசகத்தை ''ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்-மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேன்'' என்றே கூறுகின்றார். திருவாசகத்தை இங்ஙனம், 'தேன்' என்று பலகாலும் சொல்லிவரும் பழக்கத்தால், அதனை அருளிச்செய்த ஆளுடைய அடிகளைச் சிறப்பித்து ஏத்தும் திருக்களிற்றுப் படிச் செய்யுள் ஒன்றின், ''திருவாத வூராளும் தே'' என்னும் பாடத்தையும், ''திருவாதவூராளும் தேன்'' என்றே மக்கள் ஓதுவாராயினர்.

''பாய்பரியோன் தந்த பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலரால் சொற்செய்து-மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளும் தேன்''
—திருக்களிற்றுப்படியார்—73

வாதவூரடிகள் அருளிச் செய்த திருவாசகம், அவர் பெற்ற பரமானந்தப் பயன் வடிவாகவே விளங்கி, அதனை ஓதுமிடத்துச் சுவைகள் பலவற்றினும் மேம்பட்ட பத்திச் சுவையை மிகப் பயந்து, கருங்கல் மனமும் கரைந்துருக, கண்கள் தொடு ணற் கேணியிற் சுரந்து நீர்பாய, மெய்ம் மயிர் பொடிப்பச் சித்தத்துள் தித்தித்து யாவரையும் அரனடிக்கு அன்பராகும் வண்ணம் செய்துவிடுதலால் அதனைத் 'தேன்' என்றது மிகமிகப் பொருத்தமே. எனினும், அவர் அருளிச் செய்த 'திருக்கோவையார்' என்னும் மற்றொரு பகுதி, வேறொரு தனிச்சிறப்புடையதாய்விளங்குகிறது. அஃதாவது, திருவாசகமும் விலைமதிப்பற்ற மணிவார்த்தைகளாலாய செந்தமிழ்ப் பாமாலையேயாயினும், அது சிவபெருமானுக்கு அடியவராயினார் ஓதி உணர்ந்து இன்புறுதற்குரிய தோத்திர மாவதன்றி, ஏனையோர் பலரும் ஓதி இன்புறுதற்குரிய இலக்கியமன்று. திருக்கோவையார் அவ்வாறின்றி இலக்கியத்தை விரும்புவோர் ஓதி உணர்ந்து இன்புறுதற்குரிய ஓர் அரிய இலக்கியமாகும்.

பழந்தமிழ் முறைப்படி கூறப்படும் 'அகப்பாட்டு, புறப்பாட்டு' என்னும் இரு வகைப் பாட்டுக்களில், அகப்பாட்டு, 'இலக்கியம்' எனச் சிறந்தெடுத்துக் கூறப்படுவது என்பது அனைவரும் அறிந்தது. அம்முறையில் அமைந்த இலக்கியங்கள் தமிழ்மொழியில் பல உளவாயினும், அவையெல்லாம் இம்மை மறுமை இன்பங்களை மட்டுமே பயக்கும் அற இலக்கியங்களாம். ஆளுடைய அடிகள் அருளிச் செய்த திருக்கோவையார், இறைவன் அடிநிழல் இன்பத்தை அருளும் அருள் இலக்கியமாகும். அதனால், திருவாசகத்தைத் 'தேன்' என்று கூறிய ஆன்றோர், திருக்கோவையாரைத் தேன் சுரக்கும் ஊற்றாக அமைந்த செஞ்சொற்களையுடைய நூலாகக் குறித்தனர். அதனை,

''எண்ணிறைந்த தில்லை
எழுகோ புரந்திகழக்
கண்ணிறைந்து நின்றருளும்
கற்பகமே-நண்ணியசீர்த்
தேனூறு செஞ்சொல்
திருக்கோவை என்கின்ற
நானூறும் என்மனத்தே நல்கு''

என்ற தனிப்பாடலால் அறிகின்றோம். ''திருவாசகம் என்னும் தேன்'' என்பதிலும், ''தேனூறு செஞ்சொல் திருக்

கோவை'' என்பதிலும் 'தேன்' என்பது சிவபெருமானது திருவருட் சிறப்பேயாம். அது திருவாசகத்தில் வடித்தெடுத்து நிறைத்து வைக்கப்பட்டுள்ளது. திருக் கோவையாரில் செஞ்சொல் இலக்கியத் திடையே கசிந்து ஊறிப் பொசிகின்றது. நிறைத்து வைக்கப்பட்டுள்ள தேனை எடுத்துத் தெவிட்டாது, நிரம்பப் பருகும் ஆற்றலுடையோர் ஒரு சிலரே. ஆனால், கசிந்து ஊறும் தேனை யாவரும் தெவிட் டாது சுவைத்து இன்புறுதல் கூடும். அங் ஙனம் இன்புறுமாறு ஊறும் செஞ்சொற் களாகிய அம்மலர்கள் நானூற்றில் அத் தேன் எத்துணை அழகாகக் கசிந்து ஊறு கின்றது!

''அணியும் அமிழ்தும் என் ஆவியும் ஆயவன், தில்லைச் சிந்தாமணி, உணர்ந் தார்க்கு உணர்வரியோன், கூம்பலங் கைத் தலத்து அன்பர் என்பு ஊடுருகக் குனிக்கும் பாம்பலங்காரப் பரன், புணர்ப்போன் நிலனும் விசும்பும் பொருப்பும் தன் பூங் கழலின் துணர்ப்போது எனக் கணியாக் கும் தொல்லோன், சிறைவான் புனற் றில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தை யுள்ளும் உறைவான், ஆலத்தினால் அமிர் தாக்கிய கோன், முதுவானவர்தம் முடித் தொகைகள் கழியாக் கழல் தில்லைக்கூத் தன், தாழச் செய்தார் முடி தன்னடிக் கீழ்வைத்து அவரை விண்ணோர் சூழச் செய்தான், சூளாமணி உம்பர்க்காயவன், பொய்யுடையார்க்கு அரன்போல் அகலும் மெய்யுடையார்க்கு அவன் அம்பலம்போல் மிக நணுகும், பிழைகொண்டு ஒருவிக் கெடாது அன்பு செய்யின் பிறவி என்னும் முழைகொண்டு ஒருவன் செல்லாமைநின்று அம்பலத்தாடும் முன்னோன், மறந்தும் மற்றப் பொய் வானவரிற் புகாது தன் பொற்கழற்கே அடியேன் உய்வான் புக ஒளிர்தில்லை நின்றோன், யாவையுமாம் ஏகத்து ஒருவன், பொருளா எனைப் புகுந்து ஆண்டு புரந்தரன் மால் அயன் பால் இருளாயிருக்கும் ஒளி, என் பிறவி கெட்டு இன்று அழிகின்ற தாக்கிய தாள் அம்பல வன், அடிச்சந்தம் மால் கண்டிலாதன காட்டி வந்து ஆண்டுகொண்டு தன் முடிச் சந்த மாமலராக்கும் முன்னோன், என் தொல் பிறவி ஏழும் எழுதாவகை சிதைத் தோன், கள்ளப் படிறர்க்கு அருளா அரன், உருகுதலைச் சென்ற உள்ளத்தும் அம்ப லத்தும் ஒளியே பெருகுதலைச் சென்று நின்றோன், பாசத்தளை அறுத்து ஆண்டு கொண்டோன், இப்பிறப்பில் அழுந்தா வகை எனை ஆண்டவன், என் சிரத்தில் உறுகால் பிறர்க்கு அரியோன், உள்ள லரைக் கீடம் செய்து என் பிறப்புக் கெட நீள் தில்லை நின்றோன், தன் சேவடிக்கே ஆய்தந்த அன்புதந்து ஆட்கொண்ட அம் பலவன், நினைவித்துத் தன்னை என் நெஞ்சத்திருந்து அம்பலத்து நின்று புனை வித்த ஈசன், பொதுவினில் தீர்த்து என்னை ஆண்டோன், ஆனந்தமாக்கடல், மலவன் குரம்பையை மாற்றி அம்மால் முதல்வானவர்க்கு அப்பால் செல அன்பர்க் கோக்கும் சிவன், முன்னும் ஒருவர் இரும் பொழில் மூன்றற்கும் முற்றும் இற்றால் பின்னும் ஒருவர், அழுந்தேன் நரகத்து யான் என்றிருப்ப வந்து ஆண்டுகொண்ட செழுந்தேன், சோத்து உன் அடியம் என் றாரைக் குழுமித் தொல்வானவர் சூழ்ந்து ஏத்தும்படி நிற்பவன், பற்றொன்றிலார் பற்றும் தில்லைப் பரன், உள்ளம் உருகி உரோமம் சிலிர்ப்ப உடையவன் ஆட்கொள் ளும் அவரில் ஓர் கூட்டம் தந்தான், பற்றற் றவர்க்குப் புகலோன், புகுநர்க்குப் போக் கரியோன், எவரும் புகலத் தகவோன், என்னைத் தன் தொழும்பிற் கழியாஅருள் வைத்த சிற்றம்பலவன், இருவர் உயர்ந்தும் பணிந்தும் உணரான், என்னுடைய வாயும் மனமும் பிரியா இறை, மனக்களியாய் இன்று யான் மகிழ் தூங்கத் தன்வார் கழல்கள் எனக்கு அளியா நிற்கும் அம்பலத் தோன், தெய்வம் பணிகழலோன், ஆனந்த வெள்ளத்து அறைகழலோன், ஓரளவில்லா ஒருவன், மூப்பான்; இளையவன்; முன்ன வன்; பின்னவன்; முப்புரங்கள் வீப்பான், மிக்க விருப்புறுவோரை விண்ணோரின் மிகுத்து நண்ணார் கழியத் திருப்புறு சூலத்தினோன், நாய் வயினுள்ள குணமும் இல்லேனை நற்றொண்டு கொண்ட தீவ யின் மேனியன், தேவாசுரர் இறைஞ்சும் கழலோன், அம்பலத்து அடியார் என் பிடை வந்து அமிழ்தூற நின்றாடி, சென்று அன்பர் சிந்தைக் கழுமிய கூத்தர்'' என்ப வற்றைச் சிறந்தெடுத்துச் சுவைத்துப் பேரி ரின்பம் எய்தலாம்.

பாவைப் பாட்டுள் நீராடும் மகளிர் கூற்றாக, நீர் மடுவை, 'எங்கள் பிராட்டி யும் எங்கோனும் போன்றிசைந்தபொங்கு மடு' என்று பாடி மகிழ்ந்த அடிகள், கோவைப் பாட்டில் தலைவன் தலைவி முதலானார் கூற்றாக எவ்வெப்பொருள் களை இறைவனோடு தொடர்பு படுத்தி இன்புறுகின்றார்!

தலைவியது கண்ணழகைத் தலைவன் சிறப்பித்துக் கூறுமிடத்து அக்கண்ணின் அகற்சியையும், கருமையையும், வெண்மை யையும், நீளத்தையும், ஒளியையும் தனித் தனியே புகழ்ந்து கூறும்முறை வியக்கத் தக்கது. தலைவியது கண்ணின் அகலம், தலைவன் சிவபிரானிடத்துக் கொண்ட அன்பின் அகலம் போன்றதாம்; கருமை அப்பெருமான் அவனிடத்தினின்றும் வாங் கிய அஞ்ஞானத்தின் கருமைபோன்றதாம். வெண்மை, அப்பெருமானது திருமேனியில் பூசப்பட்டுள்ள திருநீற்றின் வெண்மையை ஒத்ததாம். நீளம், அடியார்கள் அப்பெரு மானது புகழை எடுத்துரைக்கும் பேச்சின் நீளம் போன்றதாம். ஒளி, அப்பெரு மானது தில்லையின் ஒளி நிகர்த்ததாம். என்னே வியப்பு!

''ஈசற்கு யான்வைத்த அன்பின் அகன்று,
அவன் வாங்கியஎன்
பாசத்திற் காரென்று, அவன்தில்லையின்
ஒளிபோன்று, அவன்தோள்
பூசத் திருநீ றெனவெளுத்து,
ஆங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு
நீளம் பெருங் கண்களே!''

இவ்வாறே, தலைவியது தனங்களின் பூரிப்பையும், இறுமாப்பையும் சிவபெருமான் தன் அடியார்கள் இன்பத்தால் எய்துகின்ற பூரிப்போடும், இறுமாப்போடும் உவமித்து, ''புலியூர் அம்பவலர்க்கு உற்ற பத்தியர்போல் பணைத்து இறுமாந்த பயோதரத்தோர் பித்தி'' எனச் செவிலி கூறியவாறாக அருளுகின்றார். இவ்வாறு திருக்கோவையாரின் தேனூறு செஞ்சொற் கிளவிகளின்வழி இலக்கிய இன்பத்துடன் இறையருள் இன்பத்தையும் ஒருங்கு நுகர்வதற்குப் பிற இலக்கியங்களும் இலக்கியமாய்த் தோன்றுமோ! இறைவனுக்குங் கூடத் திருவாதவூரடிகளது திருக்கோவையார் என்னும் இலக்கியத்தைப் போலப் பிற இலக்கியங்கள் இனியவாகுமோ! ஆகா என்பதனை, நம்பியாண்டார் நம்பிகள், தமது கோயில் திருப்பண்ணியர் விருத்தத்துள்,

''வருவா சகத்தினில் முற்றுணர்ந்
தோனைவண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன்
செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண்
டேயும்மற் றப்பொருளைத்
தெருளாத உள்ளத் தவர் கவி
பாடிச் சிரிப்பிப்பரே''

என விளக்கியருள்கின்றார். இத்தகைய தேனூறு செஞ்சொல் திருக்கோவையாரின் வழிச் சிவனருள் இன்பத்தில் திளைத்தல், செந்தமிழ் இன்பம் தெரிந்தார் அனைவரும் ஒருதலையாகச் செயற்பாலது ஒன்றன்றோ!

பெரியாழ்வார்

பாண்டி நாட்டில், திரு வில்லிபுத்தூர் என்னும் திவ்விய தேசத்தில், வேயர் குலத்தில், பதுமையாருக்கும், முகுந்தாச் சாரியாருக்கும், ஆனி மாதத்தில் சுவாதி நட்சத்திரத்தில், கருட அம்சராகத் தோன்றியருளினர். இவர் தமது சித்தத்தில் எப்பொழுதும் இடையறாது விஷ்ணுவைத் தியானித்து அன்புடன் வழிபட்டு வந்தவராதலின் இவருக்கு விஷ்ணுசித்தர் என்னும் பெயர் அமைந்தது

பாண்டியனின் அரசவையில் பரதத்துவ நிச்சயம் செய்து நாராயணனே பரம் பொருள் என்று நிறுவிப் பொற்கிழி அறுத்து, சகலவேத சாத்திர ஞானச் செல்வராகத் திகழ்ந்தமையினால் ''பட்டர்பிரான்'' என்ற பெயரும் இவருக்கு வழங்கும். இவர் திருவில்லிபுத்தூர் வடபெருங்கோயிலுடையானுக்கு மிக்க அன்புபூண்டு, திருமாலைகள் புனைந்து சாத்தி வழிபட்டு வந்தவர். திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி என்னும் இரண்டும், இவர் அருளிச் செய்த பிரபந்தங்களாகும். பெருமாளுக்குப் பல்லாண்டு பாடி மங்களாசாசனம் செய்த பரிவின் மிகுதியினால், ஏனை ஆழ்வார்களினும் பெருமை பெற்றவராகலின் இவருக்குப் பெரியாழ்வார் என்னும் திருப்பெயர் ஏற்பட்டது.

தொண்டரடிப் பொடியாழ்வார்

இவர் திருக்குடந்தைக்கு அருகிலுள்ள திருமண்டங்குடி என்னும் தலத்தில் மாழ்கழிக் கேட்டையில், திருமாலின் வனமாலையின் அம்சமாய், வேதம் வல்ல ஒரு பிராமணரின் குடியில் தோன்றியவர்; இவரது இயற்பெயர் விப்பிரநாராயணர் என்பது. இவர் திருமால் அடியவர்களுக்கு அடிமை பூண்டு ஒழுகி, அவர்களின் திருவடிகளுக்குத் தொண்டு செய்து மகிழ்வதையே, ஒரு பெரும் பேறாகக் கருதியிருந்தார். ஆகையால் இவருக்குத் தொண்டரடிப் பொடியாழ்வார் (அன்ர்தாள் தூளி) என்னும் பெயர் ஏற்பட்டது. இவர் திருவரங்கப் பெருமாளையேதம் வழிபடு கடவுளாகக் கொண்டவர். திருவரங்கத்தில் அழகிய மணவாளனுக்குத் திருநந்தவனப் பணிபுரிந்து வந்தவர். திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்னும் இரண்டு பிரபந்தங்களை இவர் அருளிச் செய்துள்ளார்.

பரஞ்சோதி முனிவர் பாடற்றிறன்

(ந. ரா. முருகவேள், M.A.M.O.L.)

முன்னுரை :

சிவபெருமானின் மூன்று கண்களைப் போன்று, சிவநெறிப் புராணங்களுள் பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம் என்னும் மூன்றும் சிறப்புடையன என்பர். இவற்றுள், திருவிளையாடற்புராணத்தினை இயற்றி அளித்த ஆசிரியரே, பரஞ்சோதி முனிவராவர். செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி, இலம்பூர் வீமநாதபண்டிதர், வாயற்பதி அனதாரியப்பர் என்னும் வேறு பிறர் பலரும்கூட, ஆலவாய்ச் சொக்கரின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் விதந்து புகழ்ந்து, நூல்கள் இயற்றியுள்ளனராயினும், இன்று 'திருவிளையாடற்புராணம்' எனக் கேட்டதுணையானே, எவரும் நினைவுகூரச்சிறந்து நிற்பது, பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணமேயாகும். இதனால், அதனை இயற்றியருளிய பரஞ்சோதி முனிவரின் பாடற்றிறன், எத்தகையதாக இருத்தல் வேண்டும் என்பதனை, எவரும் இனிதுணரலாம். பிற திருவிளையாடல் நூல்கள் எதுவும் பெறாத சிறப்பினை இந் நூல் பெற்றிருப்பதற்கு, வேறு பிறிதெதனையும் விடப் பரஞ்சோதி முனிவரின் சிறந்துயர்ந்த பாடற்றிறனே காரணம் ஆகும்.

பாடற்றிறன் :

பரஞ்சோதியாரின் பாடற்றிறன் தனிப்பெருஞ் சிறப்பும் சுவையும்வாய்ந்து, பயில்வார் உள்ளமெல்லாம் கொள்ளை கொள்ளும் பான்மையிற் சிறந்து திகழ்கின்றது. பயில்வார் மனங்கவரும் பான்மைத்தாய்த் திகழ்தலே, சிறந்த பாடற்றிறனுக்குச் செவ்விய இலக்கணமாகும். இவ்வுண்மையினைப் பின்வரும் 'தண்டியலங்காரச் செய்யுள்' இரட்டுற மொழிதலால் ஓராற்றால் சுவைமிக விளக்குதல் உணர்ந்தின்புறற்பாலது.

''செந்திருவும் திங்களும் பூவும் தலைசிறப்பச்
சந்தத் தொடையோ டணிதழுவிச்-செந்தமிழ்
கற்றார் இயற்றும் கவிபோல் மனம்கவரும்
முற்றா நலத்தாள் முகம்''

பரஞ்சோதி முனிவரின் பாடல்களிற் சொல்வளமும், கற்பனை நலமும், ஓசை நயமும் செறிந்தொன்றித் திகழ்கின்றன. தமக்கு முன்னர் விளங்கிய பண்டைப் பெருஞ் சான்றோர்களின் நூல்களையெல்லாம் முறையாகத் துறைபோகக் கற்றுணர்ந்து, அவ்வுணர்வில் தோய்ந்து ஒன்றிய அருங்கலையுள்ளத்தினராக நின்று, தாம் கற்றுத் தேர்ந்து சுவைத்து மகிழ்ந்த கலை நூல்களின் சாயல்கள் பலவும், ஆங்காங்கே நிழலாடித் திகழும் வண்ணம், பரஞ்சோதி முனிவர் தமது நூலைப் பாடியுள்ளார்! அதனால், அவர்தம் பாடல்கள் சொற்பொருட் செறிவும் சுவையும் மிகுந்து பயில்வார்க்கு நாவூறலை விளைக்கும் நலங்கெழுமிச் சுடர்விட்டொளிர்கின்றன! பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்கள், பரஞ்சோதி முனிவரின் பாடல் நலங்களிற் பெரிதும் ஈடுபாடு கொண்டு, அதன்கண் ஒரு சில பாடல்களையேனும் நாடோறும் ஓதி மகிழும் பழக்கத்தினைப் பல ஆண்டுகளாகத் தாம் கடைப்பிடித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.* இங்ஙனம் பேரறிஞர்கள் பற்பலரின் உள்ளங் கவர்ந்த பாடற்றிறனுடையவர் பரஞ்சோதி முனிவர். சிறந்த கவிதைகளை இயற்றும் திறம்பெற விழைவோர், பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணப் பாடல்களைப் பலகாற் பயின்றோதி வந்தால், அத்திறத்தினை எளிதிற் கைவரப் பெறலாம் எனப் பெரியவர்கள் பலர்கூறுவதுண்டு. அத்தகைய பெருஞ் சிறப்பினராகிய பரஞ்சோதி முனிவரின் பாடல்களில், ஒரு சிலவற்றை ஈண்டுக் கண்டு சுவைத்தின்புறுவோம்.

இயற்கைப் புனைவு :

ஒரு நல்லிசைக் கவிஞரின் கவிதைச் சிறப்பினை அளந்தறிந்து சுவைத்து மகிழ்வதற்குப் பல வழிகள் உண்டு. அவற்றுள், அவர் இயற்கைப் பொருள் நிகழ்ச்சிகளையும், காட்சிகளையும் எங்ஙனம் திறம்படப்

* "It is not possible in this connection to open an explicit discussion on the historical value of the Tiruvilaiyadal Purana. I mean no disparagement to the Purana as a literary work. So charming is its diction and so great its powers of clear description, that for years together, I have been in the habit of reading a few stanzas of it every day.''

—Prof. P. Sundaram Pillai, M.A.

புனைந்துரைத்து விளக்கியுள்ளார் எனக் கண்டறிவதும் ஒரு வழியாகும். இயற்கையில் ஈடுபாடும், அதனைப் புனைந்துரைக்கும் ஆர்வமும் கவிஞர்கள்பாற் பொதுவாகக் காணப்படும் சிறப்பியல்பாகும். "கவிஞனின் கண்ணானது, மிகச் சிறந்ததோர் உள்ளெழுச்சியினால் விண்ணிலிருந்து மண்ணையும், மண்ணிலிருந்து விண்ணையும் சுற்றிச் சுழன்று பார்வையிடுகின்றது; காணவும் அறியவும் படாத பொருள்களின் இயல்புகளைக் கற்பனையுணர்வானது உருவாக்கித் தந்து கொண்டிருக்க, அவைகளைக் கவிஞனின் எழுதுகோல் எழில்கனிந்த கலையோவியங்களாக இனிது வடித்துக் கொடுக்கின்றது; காற்றென நுண்ணியவாய்க், காணப்படாமையில் இல்லனவாய் விளங்கும் அவற்றிற்கு, ஓர் உறைவிடமும் பெயரும் அளிக்கின்றது"* எனச் செகப்பிரியர், கவிஞர்களின் இயல்பினை இனிதெடுத்து விளக்குகின்றார். அதனால், கவிஞர்களின் கவித்திறனுக்கும் இயற்கைப் புனைவிற்கும் மிக்க பெருந்தொடர்புண்மை இனிது பெறப்படும்.

பொதியமும் பொருநையும் :

பரஞ்சோதி முனிவர் இயற்கை நலனைப் புனைந்து பாடுதலிற் சிறந்து திகழ்கின்றார். பண்டைச் சங்ககாலப் புலவர்கள் எங்ஙனம் இயற்கைப் பொருள்களில் மிக்க ஈடுபாடு உடையராய் விளங்கி, அவற்றைத் தமது பாடல்களில் இனிதெடுத்துப் பாடினரோ, அங்ஙனமே பரஞ்சோதி முனிவரும் பாடுகின்றார். பிற்காலப் புலவர் என்னும் காரணம் பற்றிப் பரஞ்சோதி முனிவரின் பாடற்றிறனை நாம் எளிதாக எண்ணிவிடுதற்கில்லை. 'ஒரு பொருளை அவர் புனைந்து பாடும் பொழுது, நாம் அதனை நேரே காண்பதைக் காட்டிலும் மிக விளக்கமாகக் காண்கின்றோம்; அது மட்டுமன்று, உற்றும் தொட்டுங்கூட உணரப் பெறுகின்றோம்' ("When he describes any thing, you more than see it; you feel it too".

—Dryden on **Shakespeare**)

'பொதியமலையிலிருந்து பொருநையாறு தோன்றுகின்றது' என்னும்செய்தியினைப் பரஞ்சோதியார் எத்துணைச் சுவையமையப் பாடுகின்றார், பார்மின்கள் !

''கருநிற மேகம் என்னும்
கச்சுஅணி சிகரக் கொங்கை,
அருவியாம் தீம்பால் சோர,
அகன்சுனை என்னும் கொப்பூழ்ப்
பொருவில்வேய் என்னும் மென்தோட்
பொதியமாம் சைலப் பாவை,
பெருகுதண் பொருநை என்னும்
பெண்மகப் பெற்றாள் அன்றே''

பொதியமலை ஒரு பெண். அதன் சிகரங்கள் கொங்கைகள். மலைச் சிகரங்களில் மேகம் படிதல், அப்பெண் கச்சு அணிந்திருத்தல் போலக் காணப்படுகின்றது. மலையினின்று அருவிகள் பெருகுதல், தீம்பால் பெருகுதலை ஒத்துத் திகழ்கின்றது. சுனைகள் கொப்பூழை நினைவூட்டுகின்றன. மூங்கில்கள் தோள்களைப் போன்றுள்ளன. இத்தகைய மலையினின்று ஆறு தோன்றுதல், ஒரு தாய் ஒரு பெண்குழந்தையைப் பெற்றெடுப்பது போன்றுளது, எனச் சுவைகெழும விரித்துரைத்துப் பாடுகின்றார் பரஞ்சோதியார்!

கடலிற் கலத்தல் :

இங்ஙனமே, பொருநையாறு கடலிற் சென்று கலக்கின்றது என்னும் சுருங்கிய கருத்தினை, மிகவும் சுவை பொருந்தும் படி அவர் பாடியருள்கின்றார்.

''பன்மலர் மாலை வேய்ந்து,
பால்நுரைப் போர்வை போர்த்துத்,
தென்மலைத் தேய்ந்த சாந்தம்,
மான்மதச் சேறு பூசிப்,
பொன்மணி ஆரம் தாங்கிப்
பொருநையாம் கன்னி, முந்நீர்த்
தன்மகிழ் கிழவன் ஆகம்
தழீஇக்கொடு கலந்த தன்றே''.

கணவனை மணந்து சேரும் கன்னிப் பெண்கள் அழகுக்காக, மலர்மாலைகள் சூடுவர். நாணத்தால் முகத்தை மறைக்கத் தலையிற் போர்வை போர்ப்பர். சந்தனம் களபம் முதலிய நறுமணப் பொருள்களை உடலிற் பூசுவர். பொன்னும் மணியும் முதலியவற்றால் இயன்ற பலவகை விலையுயர்ந்த அணிவகைகளைப் பூண்டு கொள்வர். இம்முறையே, பொருநை ஆறாகிய கன்னிப்பெண்ணும் மலர்மாலை வேய்ந்து, நுரைப் போர்வை போர்த்துச், சந்தனம் முதலியன பூசிப், பொன்மணி ஆரம் தாங்கிச் சென்று, கடலாகிய தன் கணவனின் மார்பினைத் தழுவிக் கலந்து இன்புற்றது எனப் பரஞ்சோதியார் கூறும் திறம், எத்துணை அழகியதாக உள்ளது!

மரங்கள் மலர்தல் :

இளவேனிற் காலத்தின் இயல்புகளைப் பரஞ்சோதியார் பாடுதற்குரிய ஓர் இடம் நேர்கின்றது. அங்கே தமது புலமைநலம் முற்றும் பொலிந்து திகழும்படி பரஞ்சோதியார் பல பாடல்களால் இளவேனிற் கால நிகழ்ச்சிகளை இனிது பாடுகின்றார்!

---

* "The poets eye, in a fine frenzy rolling,
Doth glance from heaven to earth, from earth to heaven
And as imagination bodi s forth
The form of things unknown, the poet's pen
Turns them to shap:s, and gives to airy nothing
A local habitation and a name"

—Shakespeare

இளவேனிற் காலத்தில் மா செருந்தி பலாசம் காஞ்சி மரவம் காயா ஞாழல் புன்னை முதலிய மரங்கள் அழகுற மலரும். அவ்இயற்கை நிகழ்ச்சியினை அரும்பெரும் கவிஞராகிய நமது பரஞ்சோதி முனிவர் அவர்கள், கற்பனை நலம் திகழவும், பின் வரும் கருத்துக்கள் அமையவும் பாடியிருப்பது பயின்று மகிழ்தற்குரியது.

(1) தேவருலகத்தில் உள்ள கற்பக மரத்தின்மீது சினம்கொண்டு சிவந்து, அதனைப் பொருதற்கு மேலெழுந்து சென்றதுபோல, மாமரங்கள் செந்நிறம் கொண்ட தளிர்களை ஈன்று, வானத்தைத் தொடுவது போன்று, உயர்ந்தோங்கி நின்றன; காசுகளைக் கொண்டு இடையிடையே பதித்துச் செய்த குழைகளை அணிந்த பெண்களைப் போல, வண்டுகள் தங்கள்பால் வந்து தங்கும்படி, செருந்தி மரங்கள் பொன் போலப் பூத்து நின்றன.

''அண்டர்வான் தருமேற் சீறிச்
சிவந்தெழுந் தாங்குத், தேமாத்
தண்டளிர் ஈன்று, வானந்
தைவர, நிவந்த; காசு
கொண்டிடை அழுத்திச் செய்த
குழையணி மகளிர் போல,
வண்டிறை கொள்ளப் பூத்து
மலர்ந்தன, செருந்தி யெல்லாம்''

(2) பலாசம் என்னும் முள்முருக்கு மரங்கள், சூரியனைப் போலச் சிவந்த நிறமுடைய மலர்களைப் பூத்தன; காஞ்சி மரங்கள் தேவேந்திரனைப்போலப் பொன் வண்ணமாகப் பொலிந்து மலர்ந்தன; மரவ மரங்கள் சந்திரனைப் போல வெண்மையான மலர்களை அரும்பின; காயா மரங்கள் கையிற் சக்கரத்தைக் கொண்ட திருமால் போலக் கருமை நிறமுள்ள மலர்களைக் கொண்டு திகழ்ந்தன.

''செங்கதிர் மேனி யான்போல்
அவிழ்ந்தன செழும்ப லாசம்!
மங்குலூர் செல்வன் போல
மலர்ந்தன காஞ்சி; திங்கட்
புங்கவன் போலப் பூத்த
பூஞ்சினை மரவம்; செங்கை
அங்கதிர் ஆழி யான்போல்
அலர்ந்தன விரிந்த காயா''

(3) ஞாழல் மரங்கள், வைகையாற்றின் மணல்மேடுகள் ஆகிய கடி தடத்தில், அழகிய மேகலை என்னும் அணிகலன் சுற்றி அணியப் பெற்றதுபோல, அழகிய மலர்களைப் பூத்து, மகரந்தத் துகள்களை உகுத்தன; புன்னை மரங்கள் மரகதம் போற் பச்சை நிறம் வாய்ந்த அழகிய தழைகள் தளிர்த்து, வெண்முத்துக்கள் போன்ற அரும்புகளைத் தோற்றுவித்து, பொன்னிறம் வாய்ந்த மலர்களால் பொலிந்து, கடலிற் பரவலாகப் படர்ந்து வளர்கின்ற பவளக்காடு போலச் சிவந்து விளங்கின.

''தரைகிழித் தெழுநீர் வைகைத்
தடங்கரை எக்கர் அல்குல்,
அரவமே கலைசூழ்ந் தென்ன,
அலர்ந்துதா துகுப்ப ஞாழல்;
மரகதம் தழைத்து, வெண்முத்து,
அரும்பிப் பொன்மலர்ந்து, வாங்கும்
திரைகடற் பவளக் காடு
செய்வன, கன்னிப் புன்னை''

உலகியல் உவமைகள் :

இளவேனிற் காலம் தோன்றுதற்கு முன்னே மரங்கள்இலையை உதிர்க்கும். இலையுதிர்ந்த பின்னரே மரங்கள் புதிதாகத் தளிர்விடும்; பசுமை நிறம்அடைந்து தழைக்கும்; தேன்மிக்க மலர்களைப் பூக்கும். இவ்வியற்கை நிகழ்ச்சிகளைப் பரஞ்சோதியார் உலகியல் வாழ்க்கை நிகழ்ச்சிகளை உவமை காட்டிச் சுவை துளும்பப் பாடுகின்றார்.

கணவனிடத்தில் ஊடல் கொண்ட பெண்கள், தம் அணிகலன்களையெல்லாம் சினந்து கழற்றி எறிவர்; அதுபோல மரங்கள் இலைகளை யுதிர்க்கின்றன. இலையுதிர்ந்த மரங்கள் பின்னர்க் குழைவரத் தழைக்கும்; அச்செயல், மகளிர் தமது கணவனை ஊடல் நீங்கிய பின்னர்க் குழைந்து புல்லி, உவகையால் உடல்பூரிப்பது போன்றுள்ளது. கணவனைப் பிரிந்த பெண்கள், கண்ணீர் பெருக உடலிற்பசலையுற்று நிற்பர்; அதுபோல் மரங்கள் கள்நீர் பெருகப் பசுமை நிறம் எய்தித் திகழ்கின்றன. களவொழுக்கத்திற் காதல் கைம்மிக்குத் திளைக்கும் மகளிர், ஊரவரால் அலர் தூற்றப்படுவர்; அதுபோலமரங்கள் யாவும் இளவேனிலில் அலர்பூத்து நெருங்கி அடர்ந்துள்ளன.

''ஊடினார் போல வெம்பி
இலையுதிர்த்து ; உயிர்அன் னாரைக்
கூடினார் போல எங்கும்
குழைவரத் தழைத்து; நீங்கி
வாடினார் போலக் கண்ணீர்
வாரமெய் பசந்து; மையல்
நீடினார் அலர்போற் பூத்து,
நெருங்கின மரங்கள் எல்லாம்''.

கற்புடை மகளிரும், கொடிகளும் :

கோடைகால வெப்பத்தால் மரங்கள் இலையுதிர்ந்து வாடுகின்றன. பின்னர்த் தழைக்கின்றன. அச்சமயங்களில் மரங்களைச் சுற்றிப் படர்ந்துள்ள கொடிகளும், முறையே வாடியும் தழைத்தும்நிற்கின்றன. இக்காட்சி, கணவன் துன்புறுங்கால்தாமும் துன்புற்று, கணவன் மகிழுங்கால் தாமும் மகிழ்ந்து நிற்கின்ற, கற்புடைய மகளிரின் செயலைப் போன்றுள்ளது.

''விழைதரு காத லார்தாம்
மெலிவுற மெலிந்து, நெஞ்சம்
குழைவுறக் குழைந்து நிற்கும்
கோறிலாக் கற்பி னார்போல்,

மழையறும் கோடை தீப்ப
மரந்தலை வாட, வாடித்
தழைவுறத் தழைத்து நின்று,
தழீஇயபைங் கொடிகள் எல்லாம்''

கொடிகளும் நடனமும் :

இளவேனிலில் தென்றல் வீசுகின்றது. மலர்களில் தேன்நிறைந்து சிதறுகின்றது. தும்பிகள் தேனையுண்டு இசை முரல்கின் றன. தென்றற் காற்று வீசுதலால் பூங் கொம்புகள் அசைந்து ஆடுகின்றன. இக் காட்சியானது, நடன ஆசிரியர் ஆட்டு விக்க, முகத்தினின்று வியர்வைத் துளிகள் சிந்துமாறு, இசைபாடிக்கொண்டு, அழகிய இளம் பெண்கள் அசைந்தாடும் நடனக் காட்சியை நினைவூட்டுகின்றது.

''சேட்டிகைத் தென்கால் தள்ளத்
தெண்மதுச் சிதறத், தும்பி
நீட்டிசை முரலச், சாயா
நின்றுபூங் கொம்பர் ஆடல்,
நாட்டியப் புலவன் ஆட்ட,
நகைமுகம் வியர்வை சிந்தப்,
பாட்டிசைத் தாடா நின்ற
பாவைமார் போன்ற அன்றே''

மலர்களும் வள்ளன்மையும் :

செவ்வந்தி மலர்களும், மகிழம் பூக் களும் கீழே உதிர்ந்து கிடக்கின்றன. ஆயினும், அவற்றில் இருக்கும் சிறிதளவு தேனை விரும்பி வந்து, வண்டுகள் உண்டு களிக்கின்றன. அக்காட்சி, நல்லவர் செல் வம் குறைந்து வறுமை அடைந்தாலும், தமது வள்ளன்மையிற் குறையமாட் டார்கள் என்னும் உண்மையைப் புலப் படுத்துகின்றது.

''மலர்ந்தசெவ் வந்திப் போதும்
வகுளமும் உதிர்ந்து, வாடி
உலர்ந்துமொய்த் தளிதேன் நக்கக்
கிடப்பன; உள்ளம் மிக்க
குலந்தரு நல்லோர் செல்வம்
குன்றினும், தம்பால் இல்லென்று
அலந்தவர்க் குயிரை மாறி
யாயினும், கொடுப்பர் அன்றோ?''

தென்றலும் மாணவனும் :

சோலைகளில் தென்றல் வீசுகின்றது. அஃது, அங்குள்ள பொய்கைகளில் மலர்ந்து திகழும் தாமரையைத் துழாவுகின்றது; இருவாட்சி முல்லை மல்லிகை முதலிய பூப்பந்தர்களிற் சென்று தாவி அம்மலர் களின் மணத்தினை நன்கினிது கூட்டுண் கின்றது. அதனாற் குளிர்ச்சியுற்று மெல் லென்று இனிமையாக வீசி இயங்குகின்றது தென்றல்! தென்றலின் இந்தச் செய்கை யானது எங்கெங்கே அறிவுநூற் கலைகள் வளர்கின்றனவோ, அங்கங்கெல்லாம் சென்று அவற்றை ஆராய்ந்து கற்று மகி ழும் ஒரு சிறந்த மாணவனின் செயல் போலக் காணப்படுகின்றது.

''பொங்கரின் நுழைந்து, வாவி
புகுந்து, பங்கயம் துழாவிப்
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவிக்,
கொங்கலர் மணம்கூட் டுண்டு,
குளிர்ந்து மெல்லென்று தென்றல்,
அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன்போல், இயங்கும் அன்றே''

இளவேனிற் கோமகன் :

இத்தகைய இயற்கை நிகழ்ச்சிகள் யாவும் நடைபெறுதற்குக் காரணமாகத் திகழும் இளவேனிற் காலத்தின் சிறப்பை என்னென்பது? அதனை ஓர் அரசனுக்கு ஒப்பிட்டுச் சிறப்பித்து உரைப்பதே மிகப் பொருத்தமாகும். இளவேனிற் காலமாகிய அரசன் முடிசூடி வீற்றிருக்கும் திருவோலக் கமண்டபம், சோலைகளே எனலாம். அரச னின் திருவோலக்க மண்டபத்தில் ஏவலர் சிலர் களாஞ்சி ஏந்தி நிற்பர். முழவம் முதலிய இசைக்கருவிகள் ஒலிக்கும். பெண்கள் மங்கலப் பாடல்கள் பாடிவாழ்த் தெடுப்பர். வீரர்கள் வாளேந்தி நின்று காவல்புரிவர். அங்ஙனமே, இளவேனில் ஆகிய அரசனுக்குச் சோலையாகிய ஓலக்க மண்டபத்தில், தாமரைகள் களாஞ்சி தாங்குகின்றன. குயில்கள் முழவம் முதலி யனபோல ஒலிக்கின்றன. கிளிகள் மங் கலம் இயம்புகின்றன. தும்பிகள் இசை பாடுகின்றன. தாழைமலர்கள் வாளேந்தி நிற்கின்றன.

''தாமரை களாஞ்சி தாங்கத்,
தண்குயில் முழவம் ஏங்க,
மாமருது அமருங் கிள்ளை,
மங்கலம் இயம்பத், தும்பி,
காமரம் இசைப்ப, முள்வாய்க்
கைதைவாள் எடுப்ப, வேனிற்
கோமகன் மகுடம் சூடி,
இருப்பதக் குளிர்பூஞ் சோலை''

செஞ்சொற் கவியின்பம் :

உலகியற்கைப் பொருள்களிற் காணப் படும் பலதிற அமைதியின்ப அழகினை ஆழ்ந்து ஆராய்ந்துணரும் சான்றோர் களுக்கும், மனித வாழ்க்கையின் மூலை முடுக்கர்களில் ஒதுங்கி மறைந்து கிடக்கும் நுண்பொருள்களை நுனித்தறிய முயலும் அறிஞர்களுக்கும், சமயத்துறையிலும் தத் துவநெறியிலும் உயர்ந்துயர்ந்து சென்று ஈடுபட்டுத் திளைக்கும் மெய்யுணர்வாளர் களுக்கும், ஒழுக்கத் தூய்மையிலும் இறை யருளுணர்விலும் சிறந்து, அவற்றின் அமைதியின்ப நலத்தினையே விழைந்து நிற்கும் அருளாளர்கட்கும், நிலைத்த அழ குடையதாய், நெஞ்சம் கவரும் சிறப்பும் பயனும் வாய்ந்து, மிகவும் பேரின்பத் தினை விளைவிக்கும் செயல், நலம் நிறைந்த சிறந்த கவிதைதளைப் படித்து மகிழ்தலைவிட வேறு பிறிதொன்றில்லை.

''கவிதை இன்பமானது அரசாட்சி இன்பத்தினை விட மிகப் பெரிதும் உயர்வுடையதாகும் என்று சிவபெருமான் சான்றாக யான் துணிந்து கூறுவேன்!'' என்னும் பொருள் அமைய,

அர, சாட்சி யாக அறைவேன்; கவியின் (பு)

அரசாட்சி இன்பின்உயர் வாம்

என முதுபெரும் புலவர் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் அவர்கள் கட்டுரைத்துச் சொல்கின்றார். அம்முறையில் ஆராய்ந்தால், பரஞ்சோதியாரின் பாடற்றிறன் நம்மனோர்க்குப் பேரின்பம் பயக்க வல்ல தென்பதில் ஐயமில்லை. அவரனைய சிறந்த பெருங் கவிஞர்களின் பாடல்களையெல்லாம் பயின்று ஓதி, நாம் அனைவரும் நலம் பெற்றுய்ய முயல்வோமாக!

நூல்கள் அறிமுகம்

(1) புண்ணிய பூமியில் புனித யாத்திரை :

இந்நூல் மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. வி. என். **சிதம்பரம்** அவர்கள் எழுதியனவாகும். தம் நண்பர்கள் சிலருடன், பாரதம் முழுவதும் யாத்திரை சென்று, தாம் அங்கங்கே கண்ட தலங்களையும் நகரங்களையும், யாத்திரையில் தாம் பெற்ற அனுபவங்களையும், ஆசிரியர் எளிய, இனிய தமிழில், மிகவும் அழகுற எழுதியுள்ளார். இந்நூலுக்குத் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்கள். இந்த நூல் வானதி பதிப்பகத்தாரால், சிறந்த முறையில் அழகுறப் பதிக்கப்பட்டுள்ளது. யாத்திரை செய்ய விரும்பும் அன்பர்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடிய நல்ல நூல். விலை ரூ. 5/-

கிடைக்குமிடம் : வானதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை-600 017.

(2) ஐயப்பன் தத்துவங்கள் :

இந்நூலில் திரு. வி. என். **சிதம்பரம்** அவர்கள் தாம் சபரிமலை சென்று வந்ததையும், அங்குத் தாம் பெற்ற அனுபவங்களையும் ஐயப்பனின் வரலாறு, தத்துவ நுட்பங்கள் முதலியவற்றையும் எளிய இனிய விறுவிறுப்பான நடையில் சிறப்பாக எழுதியுள்ளார். காஞ்சி காமகோடி பீடம் ஜயேந்திர சரசுவதி சுவாமிகள், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், இராஜா. சர். மு. அ. முத்தையா செட்டியார், கவியரசு கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோர் இந்நூலுக்கு வாழ்த்துரை, அணிந்துரை, பாராட்டுரை ஆகியன வழங்கிச் சிறப்பித்துள்ளனர். நூல் இடையிடையே பல நல்ல கருத்தமைந்த படங்களுடன்' அழகுறப் பதிக்கப்பட்டுள்ளது. ஐயப்ப சுவாமி பக்தர்கள், இந்நூலைப் படித்துப் பயன் பெறலாம். விலை ரூ. 3/- கிடைக்குமிடம் : வானதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை-600 017.

(3) சிவஞான பாடங்கள் :

இந்நூல் குலசேகரன்பட்டினம் சித்தாந்த வித்தகர் திரு. வீ. குமாரவேலுப்பிள்ளை அவர்களால் எழுதப்பெற்றது. சைவசித்தாந்த சாத்திரக் கருத்துக்களையும், அவற்றையொட்டிய பல்வேறு தத்துவக் கருத்துக்களையும், வெவ்வேறு தலைப்புக்களில், இந்நூலாசிரியர் எளிய இனிய தமிழில் சிறப்புற எழுதியுள்ளார். சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய பெருநூல்களைப் படித்துணர்வதற்கு, இந்நூல் நல்லதொரு துணையாக அமையும். ஆசிரியரின் செந்தமிழ் நலமும், சிவநலமும், சைவசித்தாந்தப் பெரும்புலமையும், சான்றாண்மை நலங்களும், இந்நூலில் சிறப்புற விளங்குகின்றன. சமய நூல்களைக் கற்க விரும்புபவர்களுக்கு, இத்தகைய நூல்கள் பெரிதும் பயன்படுவனவாகும். இந்நூலுக்குச் சித்தாந்த கலாநிதி ''உரைவேந்தர்'' திரு. அவ்வை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள் சிறப்புரை வழங்கியுள்ளார்கள். நூல் கிடைக்குமிடம் : திரு. வீ. குமாரவேலுபிள்ளை, 'வேல்மன்றம்', சிதம்பரம் நகர், தூத்துக்குடி.

—ஆசிரியர்

திருவிருத்தம்

திரு. என். எஸ். தாத்தாசாரியார்,

தஞ்சை.

முன்னுரை :

'விண்ணுளாரிலும் சீரியர்' என அழைக்கப்படும் செந்தமிழ்த் தெய்வப் புலவர்களே ஆழ்வாராவார்கள். இவர்கள் ஆன்ற முனிவர்களை விட ஒருவகையில் சிறந்தவர்கள் என்பதை, நிகமாந்த மகாதேசிகன் என்ற மாபெரும் ஆசிரியர், 'மாசில் மனம் தெளி முனிவர் வகுத்தவெல்லாம், மானுகந்த வாசிரியர் வார்த்தைக்கு ஒவ்வா'' என்று குறிப்பிட்டார். இவர் காட்டித் தந்த வார்த்தையே மெய்ம்மைப் பெரு வார்த்தை, மறைகளும் காணா மாதவன் திருவுருவத்தைக் காணும் அளவிற்கு எம் பெருமானால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள், இவர்கள் காட்டித் தந்த சமயமே ஸ்ரீ வைஷ்ணவமாகும்.

இவர்கள் பன்னிருவர்களின் வரிசையில் நம்மாழ்வார் என்ற தமிழ் மறை முனிவர், பல காரணங்களை முன்னிட்டு முதன்மை பெற்றார் இவருக்குச் சடகோபர், சடாரி, பராங்குசர், வகுளாபரணர், காரிமாறன், திருநாவீறுடையவர் என்றெல்லாம் சிறப்புப் பெயர்கள் அமையும். இவர் தமக்கே இட்டுக் கொண்ட புனிதத் திருப்பெயரே இன்பமாரி என்பதாகும். திருவரங்கம் பெரிய பெருமாள் தாமே, அருளால் இவருக்கு நம்மாழ்வார் என்ற திருப்பெயரைச் சூட்டினார். அதனடியாகவே பின்புளார்களான சில ஆசிரியர்களுக்கு நம் சீயர், நம்பிள்ளை என்றெல்லாம் திருப்பெயர்கள் வழங்கப்பட்டன. அரங்கநகர் அப்பனும் நம்பெருமாள் ஆகிவிட்டார். இவர் அருளிச் செய்த நான்கு வேதங்களின் சாரமான நான்கு திவ்வியப் பிரபந்தங்களுள் மிகவும் சிறந்தது ''திருவாய்மொழி'' என்பதாகும். இச்சொல்லுக்கு வேதமொழி, வாய்மை பெற்ற மொழி, பொய்யாமொழி, திருவைப் பற்றிய மொழி, திருவருளால் தாமே வந்த மொழி என்ற புடையில் பல பொருள்கள் உண்டு. கம்பனும், ''தேவிற் சிறந்த திருமாற்குத் தக்க தெய்வக் கவிஞன் பாவிற் சிறந்த திருவாய்மொழி பகர் பண்டிதனே'' என்றார். இப்பாவில் வரும் ''பகர் பண்டிதன்'' என்ற சொல்லுக்கு நயம் உண்டு. ஆயினும் இவர் இயற்றிய முதற் பிரபந்தமான திருவிருத்தத்துக்குத் தனியான ஒரு சிறப்பிடமும் உண்டு. அதில் 15-வது பாசுர விளக்கமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

ஆழ்வாரின் பெண்மை :

படைப்புக் கடவுளாகிய பிரமன் தனது நான்கு முகங்களைக் கொண்டு நான்கு வேதங்களை வெளியிட்டதுபோல், ஆழ்வாரும் பேசும் வகையில் நான்கு முகங்களைக் கொண்டு நான்கு பிரபந்தங்களை அருளிச் செய்தார். அவையாவன, ஆழ்வார் தாமான ஆண்மை நிலையிலிருந்து 73 பதிகங்களும், பெண்மையை ஏற்றுத் தலைமகளாக 17 பதிகங்களும், தாயாக நின்று 7 பதிகங்களும், தோழியாக 3 பதிகங்களும் திருவாய் மொழியில் வெளியிட்டார். இதனை அகத்துறை இலக்கணத்தின்கண்ணே ஒருமைப்படுத்தியும், எம்பெருமானான புருஷோத்தமனை ஒரு சீவன் என்றும், அவனே எல்லாம் என்ற பெருந்தன்மையை மேற்கொள்வதேமுறை என்ற உண்மையை அமைத்தும், இதனை உலகியலில் காணும் சாதாரண இன்பச் சுவையில் கணக்கிடுவது கூடாது என்பர்.

திருவிருத்தம் :

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில், மூன்றாவது அல்லது நான்காவது ஆயிரமான இயற்பா என்ற பகுதியில் ஐந்தாவது பிரபந்தமாக, 100 கட்டளைக் கலித்துறைப் பாக்களில் அமைந்த நூலே திருவிருத்தமாகும். ஆழ்வார் தமது அன்பு மிகுதியைக் காட்டிச் செய்திகளை எம்பெருமான் முன்னிலையில் விண்ணப்பம் செய்யும் நூலானதால் இதற்குத் திருவிருத்தம் எனப் பெயர் சூட்டப்பட்டது. இச்சொல் ஒரு காரியவாகு பெயராய் அமைந்தது. இதேபோல் அப்பர் பெருமான் அருளிய தேவாரத் திருமுறையும், திருவிருத்தம் என்றே அழைக்கப்படும் என்பர். இதற்கிணங்க ஆழ்வாரும் முதல் பாசுரத்தி

லேயே ''அடியேன் செய்யும் விண்ணப்பம்'' என்று அருளிச் செய்தததை நோக்கலாம். அன்றியும் இப்பிரபந்தத்தில் முதல், கடைப் பாசுரங்கள் நீங்கலாக, யாவும் பெண் தன்மை எய்தி (பிராட்டி)த் தமது மன நிலையை—விருத்தத்தை— எம்பெருமான் பக்கலில் எடுத்து இயம்புவதாலும், அஃ தின்றியும் திருமகளின் நிகழ்ச்சியைக் கூறு கின்றார் என்ற படியாலும், இப்பிரபந்தத் திற்குத் திருவிருத்தம் என்ற பெயர் ஏற் பட்டதென்பர்.

இப்பிரபந்தம் அகத்துறையின் அமைப்பில் அருமையாக அமைந்துள் ளது. மாணிக்கவாசகர் அருளிய திருச்சிற் றம்பலக் கோவையாரும் இந்நூலும் கருத் தொற்றுமையில் நிழலிடுகின்றன. இந்நூ லின் சிறப்பை வைணவப் பேராசிரிய ரான கிடாம்பி ஆச்சான் என்பவர் தமது தனியன் பாசுரத்தில் ''மக்களே நீங்கள் தாயின் கருவில் இருந்து வெளிவந்த பின் உலகச் சிற்றின்பப் படுகுழியிலே விழுந்து உழலும் நிலையில் நும் உயிர் இடையூ றின்றி நற்பயன் பெறுவதற்குக் குருகை வந்த குருநாதன் ஆழ்வாரின் திருவிருத்தத் தில் ஒரு பாசுரத்தையாவது கற்று நற் பதம் பெறுவீர்'' என்றார்.

''கயலோ நும்கண்கள் என்றுகளிறு
வினவிநிற்றீர்
அயலோர் அறியிலும் ஈதென்ன வார்த்தை;
கடல் கவர்ந்த
புயலோடு உலாம் சொண்டல்வண்ணன்
புனவேங் கடத்துஎம்மொடும்
பயலோ இலீர் கொல்லைகாக்கின்ற நாளும்
பலபலவே

சங்க இலக்கியங்களில் கூறப்படும் கலை மான்வினாதல், வழிவினாதல், பதிவினா தல், என்ற வகைகளில் 'களிறுவினாதல்' என்ற வகையில் இப்பாசுரம் அமைந்தது. இதனை வேழம் வினாதல் என்றும் கூறு வர். திருக்கோவையாரிலும் இது வேழம் வினாதல் என்று வரையப்பட்டுள்ளது. ''இவ்விடத்து ஒரு மதயானை வரக் கண் டீரோ?'' என வேழம் வினவா நிற்றல் என்ற அடியால் திருக்கோவையார் உரை காட்டியது. இதனைப் பற்றிப் பெரிய வாச்சான் பிள்ளை ஈட்டுரையில் 'இயற் கையிலே கலந்து, பிரிந்த தலைமகன் இரண்டாம் கூட்டத்துக்காகப் புனத்திலே வந்து, கிட்டக் கடவதாகக் குறிவரவிட்டுப் போய்க் காலாதிக்ரமம் பிறந்த பின்பு, அங்கே சென்று கிட்டினவன் இவர்களைக் கண்டு கலங்கி ...பிடியை இழந்ததொரு களிறு தன் ஆற்றாமையாலே அமணானை பட்டு, திரியுமாப்போல இவர்களை இழந்து... அந்யாபதேசத்தாலேஅவிஷ்கரிக் கிறான்' என. புனவேங்கடம்—பல தோட் டங்களை உடைய திருவேங்கடம் என்னும் மலை. எம்மோடும் பயலோ இலீர்—எங்க ளுடன் தாங்கள் சம்பந்தப்பட்டவரல்லீர்.

தலைவன் ஒருவன் தலைவியுடன் களவு வழியில் புணர்ந்து நீங்கிப் பிறகு குறிப் பிட்ட நேரத்தில் வாராமல் காலம் தாழ்த் தித் தலைவியை மறுமுறை அடைய விழைகிறான். அந்நேரத்தில் தலைமகளும் தோழியும் திருவேங்கடமலையில் உள்ள ஒரு தோட்டத்தில் தங்கிக் கொல்லை காத்து இருக்கிறார்கள். தலைவியைக் கண் டதும் காமுற்ற தலைவன், தலைவியின் எண்ணமறிந்து கூட எண்ணி, அருகேவந்து காட்டில் தப்பிச் சென்ற களிறு ஒன்றைக் கண்டீர்களோ என்று பேச்சுக்கொடுத்து இடையில் வார்த்தை தடுமாறி, தன் உள் ளத்தில் உள்ள கிடக்கையை மறைக்க முடி யாமல் எடுத்த எடுப்பிலே ''நும் கண்கள் கயலோ'' என்றான். இதனைக் கேட்ட தோழியானவள் எதிர்பார்த்த தலைவன் மீண்டும் வந்த மகிழ்ச்சியை மறைத்துக் கொண்டு அவனைக் கேலி செய்து மறைப் பது போல், ஐயனே 'யானை ஒன்று இவ்வழி வரக்கண்டீரோ?' என்று வினவத் தொடங்கி, உடனே எம் தலைவியின் கண் ணழகைக் குறிப்பிடுகிறீரே! இது என்ன தடு மாற்றம் உள்ள சொற்றொடை! அயலவர் யாராவது நும் சொல்லைக் கேட்டால் சிரிப் பார்களே. கடல் நீரை முற்றிலும் உண்டு உடல் கறுத்து மழை பெய்து கொண்டு உலாவும் முகில் போன்ற நிறம் கொண்ட எங்கள் முகில்வண்ண னாகிய திருவேங் கடவன் தோட்டத்திலே, நாங்கள் பல நாட்கள் கொல்லை காக்கும் இத்தொழி லைச் செய்து வருகிறோம். நாங்கள் இங்கு இருக்கும் நாட்களில் தங்களுக்கும் எங்க ளுக்கும் பரிச்சயமுமில்லை, தொடர்பும் இல்லை. போய் வாரீர். என்றாள். இது ஒரு தோழி பாசுரமாகும்.

கயலோ நுமகண்கள் என்று களிறு வினவி நிற்றீர் :

இதற்கு இரு வகையில் பொருள் கூறு வார்கள், 'நீர் யானையைப் பற்றிக் கேட்க வந்தவர் ஆயின் யானையைப் பற்றிப் பேசுவதுடன் நில்லாது தனிமையில் உள்ள பெண்களிடம் தகாத முறையில் எங்களது கண்ணழகைப் புகழ்கின்றீரே. பிறர் கேட் பின் எங்களைப் பற்றி என்ன நினைப் பார்கள்? இப்பெண்களுக்கு இத்தலைவ னுடன் ஏதோ உறவு உண்டு போலும்?என எங்களைத் தவறாக நினைக்க மாட்டார் களா? போதும் பேச்சை நிறுத்தும். மற் றோர் வகையில் பொருள்: இனி ''நும் கண்கள் கயலோ'' என எங்கள் கண் அழ கில் ஈடுபட்டீர்கள். எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. அதற்கு மேலே யானையைப் பற்றிக் கேட்டீரே. அது எதற்கு? எங்க ளிடம் ஆசையுடன் வந்திருக்கிறீர் என நாங்கள் மகிழ்வதைத் தடுப்பது போல், நான் வேட்டைக்கு வந்து தப்பிச் சென்ற தொரு யானையைத் தேடி வந்தேன். உங் களைக் காண வரவில்லை என்ற கருத்தை வெளியிட்டீரோ? அது அழகன்று. அயலார் என்ன நினைத்தாலும் அதற்கு நாங்கள் வருந்துவோம் அல்லோம். நாங்கள் உங் களுக்கு அயலார் இல்லை என்றபடி.

பயலோ இலம் :

எங்களோடு உங்களுக்குக் கூட்டுப் பயிர் இல்லையே. கூட்டுப்பயிராவது தொடர்பு ஆதலால் கூட்டுப் பயிர்த் தொழில் இல்லாத பொழுது இங்கு எதற்கு வந்தீர்? பயிலோ இலீர் என்று பாடமாயின் பழக்க முடைய ரல்லீர் எனப் பொருள்.

கொல்லைக் காக்கின்ற நாளும் பலபலவே :

நாங்கள் பல நாட்களாக இங்குக் கொல்லை காத்து வருகிறோம். நெடுநாள் பழகியதுபோல் இங்குத் தனிமையில் எங்களுடன் பேசிக்கொண்டிருப்பது தகாது, என்று மேலெழுந்தவாரியாகக் கூறி, ''எம்மோடு கூட்டுறவு கொள்ள நீர் ஆசை கொள்ளவில்லையே, எத்தனை நாட்கள் பழகினாலும் முன்பு கர்ணாதது போன்ற புதிய அழகு படைத்த தலைவரே, எங்கள் தலைமகள் தங்கள் நல்வரவை நோக்கிக் காத்திருக்கிறாள். வம்மின் என்று தலைவியின் காதலை எடுத்துத் தோழி இயம்புகிறாள்.

ஆழ்வார் தம்மை நாடிவந்த திருவேங்கடமுடையானாகிய தலைவன்பால் தமது அடங்காத காதலை வெட்கத்தினாலோ, அல்லது தம்மை வஞ்சித்தானே என்ற சினத்தினாலோ, நேரிடையாகக் கூறக் கூசித் தோழியின் மூலமாய் வெளியிடுகிறார் என்றவாறு. அகத்துறை இலக்கிய வழியைத் தெய்வ நன்னூல் துறையில் பேசும் ஆழ்வாரது அருளிச் செயல் அமுதப்பெருக்கன்றி மற்றிது எது?

The following particulars are furnished regarding the OWNERSHIP of "THIRUKKOIL" the monthly newspaper, published as called for, by Rule 8 of Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

(See Rule 8)

1.	Place of Publication	..	119, Nungambakkam, High Road, Madras - 600 034.
2.	Periodicity of Publication	..	Monthly
3.	Printer's Name	..	**M. N. Shanmugam**, L.P.T., Assistant Works Manager
	Nationality	..	Indian
	Address	..	Tamil Arasu Press, Government Estate, Madras - 600 002.
4.	Publisher's Name	..	**U. Subramanyan**, Commissioner, H. R. & C. E. Admn. Department,
	Nationality	..	Indian
	Address	..	Commissioner, H. R. & C. E Admn. Department, Madras - 600 034.
5.	Editor's Name	..	**N. R. Murugavell**, M.A.M.O.L.
	Nationality	..	Indian
	Address	..	H. R. & C. E. Admn. Department, 119, Nungambakkam High Road, Madras - 600 034.
6.	Name and Address of the individuals who own the newspaper and partners or share holders holding more than one percent of the total capital	..	Govt. Publication

I, U. Subramanyan, Commissioner, H. R. & C. E. Admn. Department, Madras - 600 034, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Sd/- U. SUBRAMANYAN.
Publisher

திருஞானசம்பந்தர் அருளிய

திரு மாலைமாற்றுப் பதிகம்

(மூலமும் உரையும்)

ந.ரா. முருகவேள், M. A., M. O. L.

முன்னுரை :

திருஞானசம்பந்தர் அருளிய திருப் பதிகங்கள் பலவற்றுள் ''மாலை மாற்றுப் பதிகம்'' என்பதும் ஒன்று. இஃது, ஒரு மாலையின் நுனியை மாற்றிப் பிடிப்பது போல, ஒரு பாடலின் முதல் வரியைத் தொடக்கத்திலிருந்து இறுதிவரை படித்து, அதனையே பின்னர் இறுதியிலிருந்து தொடக்கம் வரையில் மாற்றிப் படிக்க, இரண்டாம் வரியாக அமையும் ஒருவகைச் செய்யுள்! இதுபோல்வனவற்றைச் 'சித்திர கவிகள்' என்பர்.

இராபர்ட் பிரவுனிங் என்னும் ஆங்கிலக் கவிஞர், தம்மிடம் வந்து தாம் இயற்றிய கவிதை ஒன்றின் பொருள் குறித்து வினவிய நண்பர் ஒருவருக்கு, ''ஒருகாலத்தில் அப்பாடலின் பொருளை அறிந்தவர்கள் இருவர் இருந்தனர். ஒருவர் கடவுள்; இன்னொருவர் இராபர்ட் பிரவுனிங். ஆனால் இப்பொழுதோ கடவுள் ஒருவருக்குத்தான் அப்பாடலின் பொருள் வெளிச்சம்'' (''Once there were two people who knew it; God and Robert Browning. But now God only knows it'') என்று மறுமொழி பகர்ந்ததாக அறிஞர்கள் கூறுவர். அதுபோலப் பாடிய கவிஞர்களே கூட, சில சமயங்களில் தாம் பாடிய பாடலின் பொருளை யுணரவும் கூறவும் முடியாமற் போவது உண்டு.

அம்முறையில், பாடுபவரும் வருத்தப் பட்டு முயன்று அரிதிற் பாட, அதற்குப் பொருள் காண்பவரும் வருத்தப்பட்டு அரிதின் முயற்சி செய்ய வேண்டும்படி, அமையும் சித்திரகவிச் செய்யுட்கள் சிற்சில உண்டு. இத்தகைய கடினமான சித்திரகவிப் பாடல்களை இயற்றுந்திறம், மிகவும் சிறந்த புலமை வித்தகம் உடையவர்களுக்கே இயலுவதாகும்.

கி. பி. 6-7-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்திருந்து காவ்யாதர்சம் எழுதிய தண்டியும், கிராதார்ச்சுனீயம் இயற்றிய பாரவியும், சிசுபாலவதம் பாடிய மாககவியும் போன்ற வடமொழிப் புலவர்கள், இன்னோரனைய சொல்வித்தகம் (Verbal legerdemain) மிக்க பாடல்களை இயற்றுதலில் மிக்க ஆர்வம் காட்டி வந்தனர்.

எனவே, நம்பியாண்டார் நம்பிகள் கூறுமாறுபோல, ''ஆறதேறும் சடையான் அருள்மேவ அவனியர்க்கு வீறதேறும் தமிழால் வழிகண்டவர்'' ஆகிய திருஞானசம்பந்தப் பெருமான், தாமும் தாம் வாழ்ந்திருந்த காலத்தின் நிலைமைக்கு ஏற்பக் கி. பி. 6-7-ஆம் நூற்றாண்டுகளில், அங்ஙனம் தமிழிற் சிலவகைப் பதிகங்களைப் பாடியருளினர். அவற்றுள் இம் 'மாலை மாற்றுப் பதிகம்' சிறப்புடையதொன்றாகத் திகழ்கின்றது. மிகக் கடினமும் சிக்கலும் வாய்ந்து, பொருள் உணர்தற்கு அரிதாக இருக்கும் பதிகங்களுள் இதுவும் ஒன்று. இதன் பொருளை ஈண்டு இயன்ற அளவு, ஒரு சிறிது சுருங்கக் காண்போம்.

யாமாமாநீ யாமாமா
யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா
மாமாயாநீ மாமாயா

இதன் பொருள் :

யாம்-சிற்றுயிர்கள் ஆகிய நாங்கள் ;
ஆமா-கடவுள் என்பது பொருந்துமோ?
நீ-நீ ஒருவனுமே, (கடவுள் என்றல்)
ஆம் ஆம்-பொருந்தும், பொருந்தும்;
மா-பெரிய
யாழீ-யாழை ஏந்தி யிருப்பவனே!
காமா-அனைவராலும்விரும்பப்படுபவனே!
காண் நாகா-காணத்தகுந்தவாறு பாம்புகளை அணிந்துள்ளவனே!
காணா-காண முடியாதவாறு
காமா-மன்மதனை (அனங்கனாக)ச் செய்தவனே!
காழீயா-சீர்காழிக்குத் தலைவனே!
மாமாயா-பெரிய மாயைகளைச் செய்தலில் வல்லவனே!
மா-கரிய(கொடிய)
மாயா-மாயையினின்றும்.
நீ-நீக்கி எம்மைக் காத்தருள்வாயாக!

விளக்கக் குறிப்பு :

'பிரமமே உயிர், உயிரே பிரமம்' எனத் துணிந்து, 'யாங்களே கடவுள்' என்று கூறுவோரும் உளராகலின் ''யாம் ஆமா? நீ ஆம் ஆம்'' என வலியுறுத்திக் கூறியருளினார். ''வேதத்தொலிகொண்டு

வீணை கேட்பார் வெண்காடு மேவிய விகிர்தனாரே'' எனவும், ''வருங்கடல் மீள நின்று எம் இறை நல்வீணை வாசிக்குமே'' எனவும், தேவாரப் பாடல்களில் வருதலின், இறைவன் யாழ் அல்லதுவீணை ஏந்தியுள்ள திறம் உணரப்படும். ''வீணா தட்சிணாமூர்த்தி'' என்னும் திருவுருவம் உள்ளமையும் கருதுக. இனி 'யாளி' என்னும் சொல் 'யாழி' எனத் திரிந்து, விளி வேற்றுமையில் 'யாழீ' என வந்தது எனினுமாம். யாளி போன்றவனே என்பது அதற்குப் பொருள். காமம்-விருப்பம். காமர்-அழகு. வியத்தகு பல திருவருட் செயல்களைச் செய்தலின் இறைவனை ''மா மாயா'' என்றார். மா-பெருமை, மாயன்-திருமால் எனக் கொண்டு, திருமாலைத் திருவுருவின் ஒரு பகுதியிற் கொண்டுள்ளவனே! எனவும் பொருள் கூறலாம். நீ-நீக்கு. (1).

யாகாயாழீ காயாகா
தாயாராரா தாயாயா
யாயாதாரா ராயாதா
காயாகாழி யாகாயா

இதன் பொருள் :

யாகா-வேள்விப் பயனாக விளங்குபவனே!
யாழீ-யாழ் இசைப்பவனே!

காயா-அருளுருவத் திருமேனிகள் எடுப்பவனே
காதா-'காதுதல்' ஆகிய அழித்தற்றொழிலைச் செய்பவனே
யார்ஆர்-எத்தகையவர்களுக்கும்
ஆதாய் ஆயாய்-ஆகின்ற தாய் ஆயினவனே
ஆயா-ஆராய முடியாத
தார் ஆர் ஆயா-ஆத்திப் பூவை மாலையாகக் கொண்டவனே
தாகா ஆயா-வேட்கையுற்ற தாருகவனத்து முனிபத்தினியர் ஆகிய கூட்டத்தை யுடையவனே!
காழீயா-சீர்காழி இறைவனே
யா-(துன்பங்கள்) எவற்றினின்றும்
கா-எம்மைக் காத்தருள்க.

விளக்கக் குறிப்பு :

யாகம்-வேள்வி. காயம்-உடம்பு, திருமேனி. காதுதல்-கொல்லுதல். ஆர்-ஆத்திப்பூ. தார்-மாலை. தாகம்-வேட்கை. ஆயம்-கூட்டம். 'தாக ஆயா' என்பது 'தாகாயா' என வந்தது. (2).

தாவாழவா தாசாகா
ழீநாதாநீ யாமாமா
மாமாயாநீ தாநாழீ
காசாதாவா மூவாதா

இதன் பொருள் :

தாவா-அழியாத
மூவா-முதுமை அடையாத
தாசா-தசகாரியங்கள் என்பவற்றால் அடையும் பொருளாக உள்ளவனே
காழீநாதா-சீர்காழிக்குத் தலைவனே
நீ-அஞ்சி நீங்கத்தகுந்த (சுடுகாட்டில்),
யாமா-யாமம் ஆகிய நள்ளிரவில் நடனம் புரிபவனே.
மா-பெருமை மிகுந்தவனே!
மா மா-மாண்புமிக்க ஐராவணம் என்னும் யானையின் மேல்
யாநீ-ஏறி வருபவனே
தாநஆழீ-கொடைத் தன்மையிற் கடல் போன்றவனே
சா கா-சாதலினின்று காத்தருள்க
காசா-பொன்போன்ற ஒளியையுடையவனே
தா-எல்லா வரங்களும் தருக
வா-எங்கள் முன்னே வருக
மூ-எல்லாவற்றுக்கும் முற்பட்டவனே
வாதா-காற்று முதலாகிய ஐம்பூதங்களின் வடிவாய் விளங்குபவனே!

விளக்கக் குறிப்பு :

தசம்-பத்து. 'தாசா' என்னும் சொல் அதனினின்றும் தோன்றியது. தத்துவரூபம் தத்துவதரிசனம் தத்துவசுத்தி ஆன்மரூபம் ஆன்மதரிசனம் ஆன்மசுத்தி சிவரூபம் சிவதரிசனம் சிவயோகம் சிவபோகம் என்பன தசகாரியங்கள் எனப்படும். இப்பத்து வகைச் செயல்கள் மூலமாக இறைவன் அடையப்படுவானாதலின் 'தாசா' என்றார். மா மா-பெருமை உடைய விலங்கு. அஃது இங்கு ஐராவணம் என்னும் யானையைக் குறித்தது. யாநம்-ஊர்தி, வாகனம். யாநீ-வாகனத்தை யுடைவனே. 'தாநம் ஆழி' தாநாழி என வந்தது. காசு-பொன், மணி. வாதம்-காற்று. (3).

நீவாவாயா காயாழீ
காவாவானோ வாராமே
மேராவானோ வாவாகா
ழீயாகாயா வாவாநீ

இதன் பொருள் :

நீவா-நீங்குதல் இல்லாத
வாயா-மெய்ப்பொருளானவனே
கா-காவுகின்ற
யாழீ-யாழை யுடையவனே
வான்நோ-கொடிதாகிய பிறவித் துன்பம்
வாராமே-எங்களை அடையாமல்
காவா-வந்து காப்பாற்றுக
வான் நோவா வா-தேவர்கள்வருந்தாதபடி
மேரா-மேருமலையை வில்லாக ஏந்தியவனே
காழீயா-சீர்காழி இறைவனே
காயா-ஆகாய வடிவினனே
வாவாநீ-நீ விரைந்து வருவாயாக!

விளக்கக் குறிப்பு :

நீவுதல்-நீங்குதல், அதனினின்று 'நீவா' என்னும் எதிர்மறைப் பெயரெச்சச் சொல் அமைந்தது. வாய்மை-மெய்ம்மை,

மெய்ப்பொருள். வாய்மைப்பொருள் ஆகிய இறைவனை ஈண்டு 'வாயா' என விளித்தார். கா-காவுதல், சுமத்தல்; முதனிலைத் தொழிற்பெயர். 'கா யாழ்' என்பது சுமக்கப் பெறுகின்ற யாழ் எனப் பொருள்தரும். பிறவித் துன்பத்தின் கொடுமைபற்றி 'வான்நோவா வா(று)' என விதந்தார். வான்-தேவர்கள், ஆகுபெயர். மேரு மலையை வில்லாக ஏந்தித் திரிபுரம் எரித்தமையினால் இறைவனை 'மேரா' என்றார். 'காயா' என்பது ஆகாயா என்பதன் முதற்குறை. (4)

யாகாலாமே யாகாழீ
யாமேதாவீ தாயாவீ
வீயாதாவீ தாமேயா
ழீகாயாமே லாகாயா

இதன் பொருள் :

யா-எப்பொருள்களுக்கும்
காலா-காலவடிவமாக உள்ளவனே
மேயா-(எல்லாவற்றிலும்) மேவி யிருப்பவனே
மேதாவீ-அறிவில் மேம்பாடு மிக்கவனே
தாய்ஆவி-(எல்லோருக்கும்) தாயாகவும், உயிராகவும் விளங்குபவனே
வீயாதா-எக்காலத்தும் அழிவு இல்லாதவனே
வீ தாமே-கின்னரம் என்னும் பறவைகள் தாமே (இசையில் மயங்கி வந்து விழுமாறு),
யாழீ-யாழை மீட்பவனே
யாம்-யாங்கள்
மேல்-மேற்கொண்டு
ஆகு-ஆவனவற்றிற்காக
ஆயா-ஆராய்ந்து வருந்தாதபடி
கா-காத்தருள்க

விளக்கக் குறிப்பு :

'யா' என்னும் வினாப்பெயர் ஈண்டு எஞ்சாமைக் குறிப்பின் வந்து, எல்லாப் பொருள்களையும் உணர்த்திற்று. 'காலன்' ஈண்டு இயமனைக் குறிக்காமல், கால தத்துவத்தை இயக்கி நிற்கும் இறைவனையுணர்த்திற்று. 'மேவியவா' என்பது 'மேவா' என மருவி வந்தது. 'மேதாவி' என்பது விளிப்பொருளில் நீண்டது. இறைவன் அனைத்துயிர்களுக்கும் தாயாகவும், ஆவியாகவும் விளங்கி வருதலின் 'தாய்ஆவீ' என்றார். 'வீதாமே யாழீ' என்றது, இறைவன் மீட்டியருளும் யாழின் இசையைக் கேட்டு, கின்னரம் அசுணம் முதலிய பறவைகள் தாமே வந்து கூடி, இன்னிசை கேட்டு உருகி மயங்கி மகிழும் திறம் உணர்த்தியவாறு. வீ - பறவைகள். மே-மேவுகின்ற. (5)

மேலேபோகா மேதேழீ
காலாலே காலானாயே
யேனாலாகா லேலாகா
ழீதேமேகா போலேமே

இதன் பொருள் :

மேலே-மார்க்கண்டேயரின் மீது
போகாமே-கூற்றுவன் வெகுண்டு செல்லாமல்
தேழீ-அதட்டித் தெழித்தருளியவனே
காலாலே-திருவடியினாலே
கால்ஆனாயே-காலனுக்கும் காலனாக விளங்கினையே
ஏல்-ஏற்றுக் கொள்ளத்தகுந்த
நால்-சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் என்னும் நான்கு முனிவர்களுக்கும்
ஆகு-ஞானாசிரியராக எழுந்தருளி
ஆல்-கல்லால மர நிழலில்
ஏலா-அவர்களை ஏற்றருளியவனே
காழீதே-சீர்காழியில் விளங்கும் முழுமுதற் றெய்வமே
மேகா-மேகம்போன்ற கொடைத்தன்மை உடையவனே
போலேமே-அடியோங்கள் நின்தொண்டர் திரளில் ஒருவரைப்போல் ஆக மாட்டோமா?

விளக்கக் குறிப்பு :

தெழித்தல் - அதட்டுதல். தெழீ-தேழீ என வந்தது. விளிவேற்றுமை. ஆகு ஆல் ஏலா—ஆகாலேலா என வந்தது. ஏல்-ஏற்றல், முதல்நிலைத் தொழிற்பெயர். ஏலா-ஏற்றருளியவனே. மேகா-மேகத்தை மழை பொழியுமாறு செய்பவனே எனினுமாம். 'பயிர்விளைக்கும் புயல் அவன் காண்' என்பது தேவாரம். போலேமே-போல ஆகமாட்டோமா? ஆகும்படி செய்தருள்க என்பது கருத்து. (6)

நீயாமாநீ யேயாமா
தாவேழீகா நீதானே
நேதாநீகா ழீவேதாமா
யாயேநீ மாயாநீ

இதன் பொருள் :

நீயா-நீங்குதல் இல்லாத
மாநீ-உமாதேவியை உடையவனே
ஏயா-ஒப்பில்லாத
மாதா-தாயாக விளங்குபவனே
ஏழீ-ஏழு இசையின் வடிவாகத் திகழ்பவனே
கா நீ தானே-நீயே எளிவந்து எம்மைக் காப்பாற்றுக
நே-நேயம் மிகுந்த நெஞ்சினையே
தாநீ-இடமாகக் கொண்டருள்பவனே
காழீ-சீர்காழியில் விளங்கும்
வேதா-வேதங்களின் பொருளானவனே
மாய்-எங்களைக் கொல்லவரும்
ஆநீ-துன்பங்களை
மாயாயே நீ-நீ மாய்த்தருள மாட்டாயா?

விளக்கக் குறிப்பு :

நீ-நீத்தல், நீங்குதல். நீயா-நீங்குதல் இல்லாத. மாநீ-மாநி, மானி என்பதன்

விளிவேற்றுமை, மானம் உடையவள் மானி எனப்படுவள். கற்பின் மிக்க பெண்கள் அனைவரையும் குறிக்கும் இச் சொல், இங்கு உமாதேவியாரைக் குறித்து வந்தது. ஏய்தல்-பொருந்துதல்; ஒத்தி ருத்தல். ஏயா-ஒப்பில்லாத. ஏழிசை-குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்பன. நே-நேயம், அன்பு; அஃது ஆகுபெயராய் நெஞ்சத்தைக் குறித் தது. தாநீ-ஸ்தாநத்தை உடையவன்; ஸ்தானம், தானம்-இடம். ஆநீ-ஹாநி, ஆனி-துன்பம். (7)

நேணவராவிழ யாசைழியே
வேகதளேரிய ளாயுழிகா
காழியுளாயரி ளேதகவே
யேழிசையாழவி ராவணனே

இதன் பொருள் :

நே-நேயம் மிகுந்து
அணவர்-திருவடியை நெருங்கி நிற்கும் மெய்யடியார்களின்
ஆ-ஆவிகள்
விழ-தம் வயமற்றுக் கிடக்க
யா-யாத்துக் கட்டிய
சை-ஆசையாகிய கயிற்றினை
ழியே-(அருளால்) அவிழ்த்தருள்பவனே
வேக-வேகத்தினையுடைய புலியின்
அதள்ஏரி-தோலினை அழகுபெற அணிந்தருள்பவனே
அளாய-துன்பங்கள் கலந்த
உழி-இடங்களில்
கா-எம்மைக் காத்தருள்க
காழியுளாய்-சீர்காழிப்பதியில் வீற்றிருப்ப வனே
அரு-மன்னிப்பதற்கரிய
ஏது-குற்றங்களை
இளவு-எம் சிறுமைத் தன்மையினால் யாம் செய்துவிட்டோம்.
அகவே-(ஆதலின்) அவை நின்னால் பொறுத்தருளத் தக்கனவேஆகுக
ஏழிசை-ஏழிசைகளும் பாடுதலில் வல்ல
இராவணனே-இராவணனும்கூடத் தான் செய்த பெரும்பிழைகள் நின்னாற் பொறுக்கப்பட்டனன் அல்லனோ?

விளக்கக் குறிப்பு :

அணவர்-அண்மையில் உள்ளவர்கள்; அடியார்கள். அண்மை-அருகு, சமீபம். ஆ-ஆவி, ஆன்மா. விழ-அவிழ; முதற் குறை. சை-ஆசை; முதற்குறை. ழியே-அவிழியே, அவிழ்த்தருள்பவனே; முதற் குறை. வேகம்-வேகமாகப் பாயும் புலியைக் குறித்தது. அதள்-தோல். ஏரி-ஏர் (அழகு) என்னும் சொல்லடியாகப் பிறந்தது: அழகு பெற அணிந்தருள்பவன் என்னும் பொரு ளைக் குறித்தது. ஏது-ஏதம், குற்றம்; கடைக்குறை. இளவு-இளமைத் தன்மை, சிறுமை, அற்பத்தனம். அஃகுதல்-நுணுகு தல், சிறியதாதல், பொறுக்கப்படுதல். 'அஃகவே' என்பது 'அகவே' என இடைக் குறைந்தது. யாழ-முன்னிலை அசைச் சொல். (8)

காலேமேலே காணீகா
ழீகாலே மாலேமேபூ
பூமேலேமா லேகாழீ
காணீகாலே மேலேகா

இதன் பொருள் :

காலேமேலே-எல்லாப் பொருள்களுக்கும் முதலும் முடிவுமாக இருப்பவனே
காணீ-அடியார்களுக்குப் பெரும் செல்வ மாக விளங்குபவனே
காழி-காழிப்பதியில் உள்ளவனே
மாலே-எல்லோரையும் மயக்கம்செய்பவனே
மேபூ-மேன்மையுடன் பூத்த
பூமேலே-தாமரையின் மேலேவீற்றிருக்கும் பிரமதேவனும்
மாலே-திருமாலும்
காலேமேலே-திருவடியும் திருமுடியையும்
காண் நீ காழி-காண்பதை நீக்கிய உறுதிப் பாடு உடையவனே
கா-எம்மைக் காத்தருள்க.

விளக்கக் குறிப்பு :

கால் மேல்-முதலும் முடிவும். காணி-நிலம், சொத்து, பெரும் செல்வம். மால்-மயக்கம், மயக்கம் செய்பவன். பூமேல் ஏ(ய்)-தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன். காழ்-மரத்திலுள்ள வயிரம்: உறுதிப்பாடு. நீ-நீத்தல், நீக்குதல். பூமேல்ஏ(ய்)-தாமரை மலரில் வீற்றிருக் கும் பிரமனும். மாலே-திருமாலும் ஆக விளங்குபவனே. காழீ-அடியார்களைக் காத்தலில் உறுதிப்பாடு மிக்கவனே. காண்-எம்மைக் கடைக்கணித்தருள்; கண்டு கொள். ஈ காலே-நின் திருவடிகளைஎமக்கு ஈந்தருள்க. மேலேகா-மேற்கொண்டும் (மேற்பிறவிகளிலும்)எம்மைக்காப்பாற்றுக எனவும், பொருள் கொள்ளலாம். (9)

வேரியுமேணவ காழியொயே
யேனைநிணேமட ளோகரதே
தேரகளோடம ணேநினையே
யேயொழிகாவண மேயுரிவே

இதன் பொருள் :

வேரியும்-வாசனையும்
ஏண்-பெருமையும்
நவம்-புதுமையும் கொண்ட
காழியொயே-சீர்காழிப் பதியில் உள்ள வனே
ஏனை-பிறிதாகிய வெறுப்பையும்
நிள்நேம்-நீண்ட நேயத்தையும்
அடு-அடுத்தலும்
அள்-அள்ளுதலும்,
ஓகரது ஏ-யோகிகளினுடைய செயலே யாகும்.
தேரகளோடு-புத்தர்களின் சொற்களையும்
அமணே-சமணர்களின் சொற்களையும்

நினை-நினைத்தலையும்
ஏய்-அவர்களுடன் கூடுதலையும்
ஒழி-ஒழியும்படி செய்து
காவணம் (ஏ)-அந்நெறிகளில் யாம் சேரா மல் எம்மைக் காக்கும் தன்மைகள்
உரிவே-உமக்கு உரியனவேயாகும்.

விளக்கக் குறிப்பு :

'காழியோயே' என்பது 'காழியொயே' என வந்தது. ஏனை-ஏனையது, மற்றையது, பிறிது; அஃது ஈண்டு வெறுப்பைச் சுட்டி வந்தது. நேம்-நேயம், இடைக்குறை. வெறுப்பை நீக்குதலும், நேயத்தைப் பெருக்குதலும் யோகிகளின் செயல்கள் என்பது கருத்து. யோகர் என்பது ஓகர் என மருவி வந்தது; ''யோக்கிய சக்தி'' என்னும் தொடர் ''ஒக்கிய சத்தி'' எனச் சிவஞானசித்தி (சுபக்கம் 138)யின்கண் வந்தாற்போல. தேரர்கள் என்பது தேரகள் என நின்றது. அடு-அள்-நினை- ஏய் என்னும் முதனிலைகள், அடுதல் அள்ளுதல் நினைத்தல் ஏய்தல் என்னும் தொழிற் பெயர்ப் பொருளில் வந்தன. கா-வ(ண்)ணம்-காக்குந்தன்மை; இடைக்குறை. (பந்தலைக் குறிக்கும் காவணம் என்பது பிறிதொரு சொல்). உரியவே என்பது 'உரிவே' என மருவிற்று. (10)

நேரகழாமித யாசழிதா
யேனனியேனனி ளாயுழிகா
காழியுளானின யேனினயே
தாழிசயாதமி ழாகரனே

இதன் பொருள் :

நேர்-நேர்மைக் குணத்தினை
அகழ்ஆம்-அகழ்ந்து கல்லி எறிவது ஆகிய
இதயஆசு-மனத்தின்கண் எழும் காம வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றங்களையும்
அழி-அழிக்க வல்லவனே, (அழித்தருள்க எனினுமாம்)
தாய்ஏல்-உலகுக்கெல்லாம் தாயாகும் தன்மையை ஏற்கத் தக்கவன்
நல்நீயே-நல்லவன் ஆகியநீ ஒருவனேயாம்
நல்-நன்மை புரிவதில்
நீள்-உயர்வு மிக்கவனே
ஆய் உழி கா-தளர்ச்சி நேரும் இடத்து எம்மைக் காத்தருள்க
காழியுளா்னின்-சீர்காழிப் பகுதியில் உள்ள சிவபிரானைப் பற்றிய
நையே-மன உருக்கத்தைத் தரும் இப்பாடல்களையே
நினையே-நினைப்பாயாக.
தாழ் இசையா-(அதனால்), உமக்கு ஒரு குறையும் உண்டாகாது.
தமிழ் ஆகரனே-தமிழுக்கு உறைவிடம் போன்ற திருஞானசம்பந்தன் உறுதி கூறுவது இது!

விளக்கக் குறிப்பு :

இதய-ஆசு-அழி—இதயாசழி என வந்தது. தாய் ஏல் நல் நீயே—தாயேனனியே என அமைந்தது. 'நீயே' என்பது 'நியே' எனக் குறுகியது. நல்—நீள்-'னனிள்' எனப் புணர்ந்து குறுகியது. ஆய், ஆய்தல்-தளர்தல், துன்புறுதல். உழி-இடம், சமயம். ஆய்உழி கா-தளர்ந்த இடத்துக் காப்பாற்றுக. நைவு-மனஉருக்கம்; பாடல்களுக்குப் பெயராயிற்று. 'காழியுளானின்'—'நையே நினையே' என்பது 'காழியுளா னினயே னினயே' எனப் புணர்ந்து நின்றது. தாழ்வு இசையா-தாழிசயா என அமைந்தது. ஆகரம்—உறைவிடம், நிலைக்களம். தமிழாகரன்-திருஞானசம்பந்தர் தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ளும் ஒரு பெயர். இத்திருப்பதிகம் ஓதுபவர்க்கு உண்டாகும் பயன் கூறியவாறு. இவ்விறுதிப்பாடல் 'திருக்கடைக்காப்பு' எனப்படும்.

**

நூல்கள் அறிமுகம்

திருச்செந்தூர் முருகன்கோயில் வரலாறு : இந்நூல், திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு ந. கல்யாணசுந்தரம், எம்.ஏ., பிஎச்.டி., அவர்கள், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் ''டாக்டர்'' பட்டம் பெறுவதற்காகப் பெரிதும் உழைத்து எழுதிய அரிய ஆய்வுரையாகும். இதன்கண், கோயிலின் இருப்பிடம்-பெயர்கள் காரணங்கள்-ஆலய அமைப்பு-அதன் வளர்ச்சிகள்-தெய்வத் திருவுருவங்கள்-நாள்வழிபாடு நிகழும் காலங்கள்-பலவேறு திருவிழாக்களின் விபரங்கள்-போற்றிமார்கள்-சிவாசாரியர்கள்-பட்டர்கள்-ஓதுவார்கள் -கோயிற்பணியாளர்கள்-பல்வேறு அறக்கட்டளைகள்-கட்டளை நிறுவியவர்கள்-அணிகலன்கள்-வாகனங்கள் என்பனபோன்று, திருச்செந்தூர் கோயிலைப் பற்றிய எல்லாச் செய்திகளும் தகவல்களும் இதன்கண் தொகுக்கப்பெற்றிருக்கின்றன. கோயிலின் பதிவேடுகள், கோயிலைப்பற்றிய பல்வேறுவகை நூல்கள், ஏட்டுச் சுவடிகள், இதழ்கள், கும்பாபிடேக மலர்கள், செப்பேடுகள், கல்வெட்டுகள், செவிவழிச் செய்திகள், தக்கோர் வாய்மொழித் தகவல்கள் என்னும் எல்லாவற்றையும் ஆராய்ந்து தொகுத்து, ஆசிரியர் இந்நூலைப் பெரிதும் முயன்று உருவாக்கிப் படைத்து உதவியுள்ளார். பயன்மிக்க நல்ல சிறந்த ஆராய்ச்சித் தொகுப்புநூல். கிடைக்குமிடம்: திருக்குமரன் பதிப்பகம், 66, சபாபதிபுரம் தெரு, திருச்செந்தூர்-628215. விலை ரூ. 25/-. கோயில்களின் நூலகங்களுக்கு மட்டும் ரூ. 15/-.

தில்லையுலா

திரு. மு. அருணாசலம்

மிகவும் பழமையான உலாப் பிரபந்தங்களில் ஒன்று என்று நாம் கருதுகின்ற இந்நூல், இன்று முழுமையும் கிடைக்கவில்லை. ஆசிரியர் பெயரும் வரலாறும் காலமும் விளங்கவில்லை. இவற்றை வரையறை செய்து நூலை அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தலைவன் வீதியிற் பவனி வருதல் பெருங்காப்பியங்களிற் சிறப்பித்துச் சொல்லப்பெறும். அவ்வாறு வரும்போது எழு பருவ மகளிரும் கண்டு மயங்குவதாகப் புலவராற் புகழ்ந்து பாடப்பெறும் தனி நூல்வகை, உலா எனப்பெறும். இது கலிவெண்பாவால் இயன்றது. புறத்தே வருகின்ற உலாவாதலால் புறவுலா, உலாப்புறம் எனவும் வழங்கும். குலமகளிர் மயங்குவது அறமன்று ஆதலால், பொது மகளிரே (பரத்தையர்) இவ்வாறு மயங்கினர் என்று ஆன்றோர் நூல் செய்வர். பிற்காலத்தில் 96 வகை என்று கணக்கிடப்பட்ட பிரபந்த வகையுள் இது மிகவும் பழமையான ஒரு வகையாகும்.

எட்டாம் நூற்றாண்டில் சேரமான் பெருமாள் பாடிய திருக்கயிலாய ஞான உலாவே காலத்தால் மிகவும் பழையது; இது பற்றி இது ஆதியுலா என்றும் சொல்லப்பெறும்; திருவுலாமாலை என்றும் சொல்வதுண்டு. இறைவன் உலாவரும் போது தலவரலாறு, சிறப்பு, பெருமானுக்குரிய ஆராதனை, தேருக்கு எழுந்தருளுதல், உடன் வருவோர், மகளிர் குழாங்கள் கண்டு காமுறுதல் என்ற செய்திகள், உலாவின் பொருளாக அமையும். இப்பகுதியைக் கூறும் உலாப்பகுதி முதல்நிலை எனப் பெயர் பெறும்.

குடிநெறி மரபு கொளல்கொடை விடியல்
நன்னீ ராடல் நல்லணி அணிதல்
தொன்னகர் எதிர்கொளல் நன்னெடு வீதியில்
மதகளிறு ஊர்தல் முதல்நிலை ஆகும்

என்று பன்னிரு பாட்டியல் இதைக் குறிப்பிடும். எழுபருவ மகளிராவார் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்போர். இப்பருவங்களுக்குரிய வயதும் இலக்கணங்கள் கூறும்.

''உலகியலை அறியாத இளம்பருவம் பேதைப் பருவம் என்றும், உலகியலை ஒருவாறு உணர்ந்தும் உணராமலும் உள்ள நிலை பெதும்பைப் பருவமென்றும், காம நுகர்ச்சிக்கு ஏற்புடையது மங்கைப் பருவமென்றும், அந்த நுகர்ச்சியில் பயின்றது மடந்தைப் பருவமென்றும், முதிர்ந்தது அரிவைப் பருவமென்றும், மகப்பேற்றையுடைய நிலை தெரிவைப்பருவமென்றும், காம நுகர்ச்சி தளரும் நிலை பேரிளம் பெண் பருவமென்றும், ஒருவாறு அவற்றின் இயல்புகளைக் கூறலாம்.''

திருக்கயிலாய ஞானவுலாவை அடுத்து வந்தது, நம்பியாண்டார் நம்பி பாடிய ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை (10-11-ஆம் நூற்றாண்டு). இவ்விரண்டும் பதினோராம் திருமுறையில் காணப்பெறும். அடுத்து வந்தவை, விக்கிரம சோழன், அவன்மகன் இரண்டாம் குலோத்துங்கன், அவன் மகன் இரண்டாம் இராசராசன் ஆகிய சோழ மன்னர் மூவர் மீதும் ஒட்டக்கூத்தர் பாடிய மூன்று உலாக்கள். தலைப்பில் குறிப்பிட்ட தில்லையுலா, இவ்வுலாக்களின் காலத்திலேயே தோன்றிய ஒரு சிறப்பான உலா என்று இனி நாம் காணலாம்.

தில்லையுலா நூல் முழுமையும் இன்று கிடைக்கவில்லை; 244 கண்ணிகளே கிடைத்திருக்கின்றன; இவை தொடக்கத்திலிருந்து அரிவைப் பருவத் தொடக்கம் 9 கண்ணிவரை; எஞ்சிய அரிவைப்பகுதி, தெரிவைப் பருவம், பேரிளம் பெண்பருவக் கண்ணிகள் ஆகியன கிடைக்கவில்லை. இப்பகுதியைப் பண்டிதர் உலகநாதபிள்ளை தஞ்சை சரசுவதி மகால் சுவடி நிலையத்தில் இருந்த அபூர்த்தியான ஓர் ஏட்டிலிருந்து பிரதி செய்து தமிழ்ப் பொழில் பத்திரிகையில் வெளியிட்டார். கிடைத்த இந்நூற் பகுதியானது, உலாப் பிரபந்த வரிசையில் மிகவும் சிறப்பான இடம் பெறுதற்குரியது. நூல் பலர் கண்ணில் படாமையால் போலும், இதற்குத் தக்க ஆட்சி ஏற்படவில்லை.

இந்த நூல் மூன்று வகைகளில் சிறப்புடையது. ஒன்று, இது ஆசிரியரின் இணையற்ற சிவபக்தியை எடுத்துக் காட்டுகிறது. இரண்டு, சில சரித்திர நிகழ்ச்சிகளுக்குச் சான்று பகர்கிறது. மூன்று சிறப்பான பண்டைய ஒழுகலாறுகள் பல வேறெங்கும் காண்பதற்கு இல்லாதவை-எடுத்துக்

கூறுகிறது. இவ்வியல்புகளை மேலே குறிப்பிடுவோம்.

கிடைத்த நூற்பகுதியில் காப்புச் செய்யுள் இல்லை. முதல்வரியிலேயே சிவகாமசுந்தரியின் பெயர் வருகிறது. அம்மையார் தாளமிட, பெருமான் தாண்டவமாடுவதை அறிந்து இரு முனிவரும் மாயனும் பிரமனும் கண்டு வணங்கி, 'பல்லுயிருங் காண நடித்தருள்' என்று ஏத்த, பெருமான் தில்லை வனத்தில் நடித்தார். நூபுர ஒலிகேட்டு இமையோர் வந்து இறைஞ்சி, அஞ்செழுத்தெழுதிய கனக ஓடு அம்பலத்தில் வேய்ந்தார்கள்.

''தில்லை வனத்து
ஆனந்த நூபுரம் நின்று
ஆர்க்கும் ஒலிகேட்டு
வானின் நிமை யோர்கள்
வந்திறைஞ்சி-நான்மறையில்
ஆய்ந்த பொருளான
அஞ்செழுத்தைச் செங்கனகப்
பூந்தகடு தோறும்
புறத்தெழுதி—வேய்ந்து
திசைவிளங்கு நாமத்
திருவம் பலத்தே
இசைவிளங்க நின்றாடும் ஈசன்.''

பன்றியைத் துரத்தி வந்த அரசன் தில்லை வனம் அடைந்ததும், பன்றியும் குதிரையும் தானும் பொன்னானமை கண்டு, இங்கு மாமறையோர் மூவாயிரவரைக் கொண்டு வந்து குடியேற்றினான்; அவருள் ஒருவர் காணாது போகவே, பெருமான் தாமே தில்லை மூவாயிரத்தொருவர் என்று காட்டினார். இப்பெருமான் நால்வர் முதலானோர்க்குத் தம்பிரான். திருநீற்றினொளி விளங்கச் சோழன் கண்டதிருநாளில் ஒருநாள், சிவாகமப்படி பூசை பெற்று, எதிரம்பலத்தில் அம்பிகையுடன் தங்கியிருந்து பின் பள்ளியுணர்ந்து, அணிகளும் மாலையும் புனைந்தார். திருமாலும் சண்டேசரும் தேவரும் போற்ற, மூவாயிரவர் முதலியோர் துதிக்கத் திருவாடு தண்டேறி மூன்று வாசலுங் கடந்து, திருத்தேரேறினார். மாலோன், குபேரன், வேலன், வேதா, ஐங்கரன், மாரன் முதலியோர் தத்தம் ஊர்திகளில் உடன் வந்தார்கள். நால்வரும், முப்பத்து முக்கோடி தேவரும் விறன்மிண்டர் முதலான நாற்பத்தெண்ணாயிரம் திருநீற்றுத் தொண்டர் சேரமான் வரகுணன் ஆகியோரும் வந்தார்கள்; திருநீற்றுச் சோழன் படிவமும் குதிரைமீது வந்தது; கண்டமகளிர் பெருமானைக் காமுற்றுப் பலவாறாக அரற்றுகிறார்கள்.

இவ்வாறு சொல்லி முடித்துப் பின் ஆசிரியர் பேதை முதலான ஏழுபருவ மகளிரின் நிலையை வருணிக்கிறார். பேதையின் வருணனையும், பெதும்பையின் வருணனையும் சிறப்பானவை. பெதும்பைப் பருவத்துக் கழங்காடலையும், மங்கைப் பருவத்துத் தசாங்கத்தையும் கூறுகிறார். இதுவே இந்நூலின் மேற்போக்கான பொருளமைதி.

ஆசிரியர் தமது சிவபக்தி முதிர்ச்சியைப் பல இடங்களில் புலப்படுத்திச் செல்கிறார். ஆலகால விடத்தைச் சிவபிரான் உண்ண மனம் ஒருப்பட்டதேவர் செயலைப் பொறுக்கலாற்றாது., ''ஆழிவாய்-ஒப்பற்ற வல்விடத்தை ஊட்ட மனமிசைந்த-முப்பத்துமுக்கோடி மூர்க்கர்'' என்கிறார். சமயாசாரியர் நால்வரையும் மிக்க அழகாகப் போற்றுகிறார். சம்பந்தர்-புகலிப் பிள்ளை, கவுணியன், பரசமயவாதுவென்ற பிள்ளை, திருமுத்தின் பந்தர்க் கீழ்வந்த பாலன்; அப்பர்-வாகீசர், வஞ்சனைகள் வென்றார்; சுந்தரர்-தூது சென்றுவா என்ற தோழர், சேரன்தன் நண்பர், சுந்தரர்க்குத் தன்னந் தனித்தூது தாள் சிவக்கப் போனார்; மாணிக்கவாசகர்-கோதிலியாம், தென்னற்கு வாய்த்த திருவாதவூரர், பாரிற் பெருவாழ்வையெல்லாம் பெருந்துறையில் நீத்த திருவாசகப் புலவன், மூவர் உரைத்த தமிழ் என்பார். தில்லை வாழந்தணரைப் பலமுறை குறிப்பிடுகிறார். சண்டேசரைத் தந்தையிருதாள் துணித்த சைவத்தவமுனி என்பார். சேரமான்-ஆதியுலாச் சொன்ன நரபதி, தெய்வ உலாச் சேரன்; வரகுண பாண்டியனை இரண்டிடங்களில் சிறப்பித்துக் கூறுகிறார். காரைக்கால் அம்மையையும் குறிப்பிடுகின்றார். இந்நூலாசிரியர் சிறுத்தொண்டர் சரித்திரத்தில் பெரிதும் ஈடுபட்டவர் போலும்.

''முடித்தொண்டன்
கொண்டிருந்த பாலகனைக்
கூசாமல் கூறாக்கக்
கண்டிருந்த செங்கமலக்
கண்மூன்றும்—''

என்று, பெதும்பை கழங்காடுமிடத்து மூன்று என்ற எண்ணுக்குரிய பொருளைக் கூறியவர், மீண்டும் மங்கைப் பருவம் கூறுங்கால், மங்கையின் துயரம் அறியாதவர் என்று கூறும் தாயின் கூற்றாகப் பின் வருமாறு பாடுகிறார்: (196-202)

''பைங்காட்டி லஞ்சப் பரிபுரம்நின்
றோலமிடச்
செங்காட்டில் முன்போன சேவடியும்-முன்
காட்டில்
மாதவம் செய்திருந்து வாழ்வா ரகத்திற்
போய்ப்
பாதகம் செய்த பவளமும்-காதலித்துப்
பெற்றோர் பிடித்தரியும் பிள்ளைக்காற்
பூச்சதங்கைச்
சிற்றோசை கேளாத் திருச்செவியும்-
பெற்றோர்
சிறுசந்து மென்குறங்கு செய்தார்க ளென்றும்
கறிகண்டு கூசாத கண்ணும்-பிறவிதனில்
பற்றினோர்க் கெல்லாம் படைக்கும்
தலையிறைச்சி
பெற்றிலோ மென்னும் பெரும்பசியும்—
சற்றிரங்கா
வன்னெஞ்சமும் உடையார் வல்வினையேன்
பெற்றெடுத்த
அன்னம் படுவ தறிவரோ-முன்னம்
அரிந்த மகவை அழைப்பித்தார் மீண்டும்
புரிந்து நகைசெய்து போனார்''

இங்ஙனமே மடந்தையை வருணிக்கும்போது சிவபிரான் பற்றிய செய்திகளை உவமையாக வைத்தே வருணிக்கிறார்; சங்கரன் சடா முடிமேல் திங்கள் அனைய திருநுதலாள், புலியூர் போற்றலர்தம் நெஞ்சினும் இருண்ட கார்க்குழலாள், கண்ணிகள்தோறும் இவ்வாறே பக்திச் சுவை ததும்புகின்ற கருத்துக்களையும் சொல்-தொடர்களையும் காண்கிறோம். திருநீற்றுச் சோழன் - முதற்குலோத்துங்க சோழன். இவர் திருநீற்றினிடத்திலே அன்பு மிக்கவர் என்பதைப் பல இடத்தும் காண்கிறோம். சோழமன்னன் பெயர்களில் பல இருக்க, திருநீற்றுச் சோழன் என்ற பெயரையே இவர் ஆளுகிறார். விறன்மிண்டரைக் குறித்த இடத்தில் அடியார்களைத் திருநீற்றுத் தொண்டர் என்கிறார். சீர்காழியைக் குறிப்பிட எண்ணிய இவர்,

''—திருநீற்றின்
வென்றி விரும்பி மீனவர்கோன் நன்னாட்டில்
சென்ற புலவன் திருப்பதி—''

என்று பாடுகிறார்.

அடுத்து இந்நூலால் தெரியவரும் பல புதிய வழக்காறுகளும் ஒழுகலாறுகளும் பெருமானை மன்றுடையான், ஆதிரையான் என்று கூறும் இவர், சில இடங்களில் ஊருடையான் என்று, வேறு அடை எதுவும் இன்றியே குறிப்பிடுகிறார். ஊர் எனப்படுவது உறையூர் என்பது பழஞ்சொல்; இவருக்கு ஊர் எனப்படுவது புலியூர் ஆகிய தில்லையாயிற்று. உடன் வந்தோரைக் கூறுமிடத்து சம்பந்தர் முத்துப் பந்தர் நிழற்றவும், மற்ற மூவரும் பொற்றேர் மீதும் வந்தனர் என்று கூறுகிறார். திருநீற்றுச் சோழனை இரண்டிடங்களில் குறிப்பிடுகின்றார். உடன் வந்தோருள் ஒருவனாகத் திருநீற்றுச் சோழனைக் கூறுகிறார்; இங்குச் சோழன் படிவம் குதிரை வாகனத்தின்மீது எழுந்தருளுவிக்கப் பெற்றதென்று கருதவேண்டும். திருநீற்றுச் சோழன்-முதற்குலோத்துங்க சோழன்.

உடன்வந்தோருள் திரு வேளைக்காரரைக் குறிப்பிடுகிறார். வேளைக்காரராவர், மெய்காப்பாளர்; தலைவனுக்குத் துன்பம் வருங்காலத்து உயிரையும்விடத் துணிந்தவர்கள். ஓரிடத்தில் விறன்மிண்ட நாயனாரைக் குறிப்பிடுகிறார். இந்நாயனார் தேவாசிரிய மண்டபத்திருந்தசிவனடியார்களை வணங்காது சென்ற சுந்தர மூர்த்தியைக் கண்ணுற்று, ''இவ்வாறு சென்ற வன்தொண்டனும் புறகு அவனையாட்கொண்ட சிவபிரானும் புறகு'' என்று கூறினார்.

—தப்புரைக்கில்
நாதனையும் பின்னென்னும்
நாற்பத் தெண்ணாயிரவர்
கோதில் திருநீற்றுத் தொண்டரும்''

என்பார். இங்கு மண்டபத்திலிருந்த தொண்டர் நாற்பத்தெண்ணாயிரம் என்பது பெரியபுராணத்தில் காணாத புதுச் செய்தி. 'நாற்பத்தெண்ணாயிரம்இருடிகள்' என ஒரு வழக்கு உண்டு.

இனி, முதல்பராந்தக சோழன் தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்தான் என்று சரித்திரம் கூறும். இவ்வுலா ஆசிரியர், இமையோர்வந்து இறைஞ்சி வேதத்தின் பொருளான திருவைந்தெழுத்தையும் பொற்றகட்டிலே எழுதி அம்பலத்தே வேய்ந்தார்கள் என்று கூறுகிறார். தில்லைவனத்து நூபுரம் ஆர்க்கும் ஒலி கேட்டு இமையோர் அஞ்செழுத்தைச் செங்கனகப் பூந்தகடுதோறும் எழுதிப் புறத்து வேய்ந்தார்கள் என்ற அடிகள் முன் காட்டப்பட்டன. மற்றோரிடத்திலும், ''திருவெழுத்தால் சேணாடர்பொன் வேய்ந்த சிற்றம்பலம்'' என்று கூறுகிறார். இவ்வாறு இவர் குறிப்பிடுவது மிகவும் சிறப்பான ஒரு புதிய செய்தி.

காலம் :

இனி சரித்திரக் கண்கொண்டு நோக்கும்போது இவ்வுலாவின் காலத்தை நிச்சயிப்பதற்கும்; சோழர் வரலாற்றுச் செய்திகளுக்கு ஆதரவு அளிப்பதற்குமான சில செய்திகள் இதன்கண் காணப்படுகின்றன. சிறப்பான ஒரு குறிப்பு தில்லைத் திருமாலைக் கடலிற் கிடத்திய செய்தி ;

''தண்துழாய்
மாலைத்திகிரி மரகதமே கந்துயில
நீலக் கடலளித்த நேரியனும்'' (64.5)

'துழாய் மாலையணிந்த சக்கரமேந்திய பச்சைப் பசுங்கொண்டல் துயிலும்படி நீலக்கடலுக்கு அனுப்பிய சோழன்' என்று ஆசிரியர் திருமாலை அழகான சொற்களால் குறிப்பிட்டுப்பாடுகிறார். தில்லைத் திருமன்றத்தின் இடம் போதாமையால் அங்கிருந்த திருமாலை இரண்டாம்குலோத்துங்கன் பெயர்த்துக் கடலில் எறியச் செய்தான் என்பது ஒரு சரித்திர நிகழ்ச்சி. அக்காலத்தில் எழுந்த எல்லா நூல்களும் இந்நிகழ்ச்சியைச் சிறப்பித்தே கூறுகின்றன. உடன் இருந்தவரான ஒட்டக்கூத்தர், தாம் பாடிய குலோத்துங்க சோழன் உலாவிலும் இராசராசன் உலாவிலும் தக்கயாகப் பரணியிலும் இதனை விளங்கப் பாடுகிறார்.

''தில்லைத் திருமன்றின் முன்றில்சிறு
தெய்வத்
தொல்லைக் குறும்பு தொலைத் தெடுத்து—''

என்பது குலோத்துங்க சோழன் உலா, கண்ணி 39; இனி இராசராசன் உலா 38;

''பொன்னிற் குயிற்றும் புறம்பிற்
குறும்பனைத்தும்
முன்னர்க் கடலகழின் மூழ்குவித்த—சென்னி;'

தக்கயாகப்பரணி, தாழிசை 777 இதை இன்னும் நன்றாய்க் கூறும்.

''முன்னிற்கிடந்த் கருங்கடல் போய்
முன்னைக்கடல்புகப் பின்னைத்தில்லை
மன்றிற் கிடங்கண்ட கொண்டல் மைந்தன்
மரகதமேருவை வாழ்த்தினவே''

இங்குக் கொண்டல் குலோத்துங்கன்; மேரு-அவன் மைந்தனான இரண்டாம் இராசராசன். ''விஷ்ணுக்கள் கடலிலே யோக நித்திரை கொண்டருளும்வரை சூரபன்மாவைச் சுட்டி தேவசேனாபதிப் பிள்ளையார் கடலைக் கலக்கிப் புறப்பட விடக் கடலிற் சிலுகற்றது. இன்னம் அக் கடலை எனக்கே தர வேண்டும் என்று திருச்சிற்றம்பலத் திருமுற்றத்திலே இடங் கெடாமே, வரமும் பெற்றதாக இடமும் விரிந்ததாகப் பின்னையும் அக்கடலிலே போகவிட்ட குலோத்துங்க சோழ தேவர்'' என்ற அதன் நயமான உரையும் காண்க. இச்செய்தியை இராமானுசாசார்ய திவ் விய சரிதை பின்வருமாறு கூறும் :

அம்பொற் கொடைச்சகர
னாயிரத்தின் மேனாற்பத்
தொன்பதாம் வர்ஷத்
துயர்தில்லைத்-தென்பாலிற்
சென்னி குலோத்துங்கன்
சித்திர கூடத்திருமால்
தன்னை யலையெறி நாடான்

இது நிகழ்ந்த காலம் 1049 என இந் நூல் கூறுகின்றது. அஃதாவது கி. பி. 1127 ஆகும். இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத் தொடக்கம் கி. பி. 1133 என்று ஆராய்ச்சியாளர் முடிவு செய்திருக் கிறார்கள். எனவே சரிதை குறிப்பிடும் ஆண்டு எல்லையில் ஏதேனும் பிழைஇருத் தல் கூடும். சரித்திரச் செய்தியில் பிழை இல்லை.

இவ்வாறு தில்லையுலா ஆசிரியர் திருமாலுக்குக் கடலளித்த நேரியனும் வந்து அடிபோற்றுமாறு பெருமான் எழுந் தருளினார் என்று கூறும்போது, தாம் நேரே கண்ட செய்தியைப் பாடுகிறார் எனவே நாம் கருதவேண்டும். இது பழங் காலக் கதையன்று, உடன் நிகழ்ச்சியே யாகும். ஆதலால் இவ்வுலாப் பாடினார் இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தே வாழ்ந்தவர் என்று முடிவு செய்ய வேண்டும்.

இனி உலா, திருநீற்றுச் சோழன் என்று இரண்டிடங்களில் குறிப்பிடுகிறது. முதல் இடம் முன்னரே குறிப்பிட்டோம். திருநீற்றுச் சோழன் படிமம் போர்மாவின் மீது வந்தது; மற்றோரிடத்தில் கருடன் மிசையே திருமாலும் துங்கப்பரிமிசையே சோழனும், ஓதிமத்தின் மீதேநான்முகனும் வந்தனர் என்று கூறும்போதும், திருமால் சோழன் நான்முகன் ஆகியோர் படிமங்கள் என்றே பொருள் கொள்ள வேண்டும். இங்குக் குறிப்பிடப்பட்ட சோழன் திரு நீற்றுச் சோழன் என்று முதலில் பெயர் பெற்றிருந்த முதற் குலோத்துங்க சோழ னாவான்.

மற்றோரிடத்தில் அரசர் மூவருக்கும் தம்பிரான் என்று கூறும்போது வரகுண னாம் செய்ய தமிழ்மாறன் தெய்வவுலாச் சேரன் துய்ய திருநீற்றுச் சோழன் என்று கூறுகிறார். இவற்றால் இவர் சோழ பரம்பரையில் கொண்டிருந்த பேரன்பு நன்கு புலப்படுகிறது. இக்குலோத்துங்க சோழனுடைய பேரனாய் வாழ்ந்த இரண் டாங் குலோத்துங்கன் காலத்தே சேக் கிழார் பெரியபுராணம் பாடினார். அவ னும் திருநீற்றுச் சோழன் எனப் பெயர் தரித்துக் கொண்டான்; எனினும், முதற் குலோத்துங்கனுக்கு இப்பெயர் அதிகமாய் வழங்கிற்று; திருநீற்றுச் சோழநல்லூர் என்றே அவன்பால் வீரர்களுக்கும் பெய ரிட்ட செய்தி சாசனங்களால் அறியலாம். ஆகவே இவ்வாறு அக்காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த பெயரை, இச்சோழன் பேர னான இவனும் தான் மேற்கொண்டான். கொண்டதோடு பாட்டன் உருவச்சிலையை நடராசப் பெருமான் விழாவில் உலா வரவும் செய்தான் என்று இப்போது அறி கிறோம்.

மேலும், இரண்டாம் குலோத்துங் கன் தில்லை அம்பலவாணரிடம் எல்லை யற்ற பேரன்பு பூண்டவன் என்பதை ஒட் டக்கூத்தர் உலாவிலும் பிள்ளைத்தமிழி லும் பல முறை கூறுகிறார். ''தில்லை நடராசப் பெருமான் திருவடித் தாமரை யிலுள்ள தேனைப் பருகும் வண்டுபோன்ற வன்'' என்று திருவாரூர்க் கல்வெட்டுக் கூறும். சமயாசாரியர் திருவுருவங்களைத் திருவாரூர்க் கோவிலில் எழுந்தருளிவித்து மிகுதியாக நிபந்தங்களும் அமைத்தான். உலா ஆசிரியர், பேதையை வருணிக்கும் போது தில்லையைப் பாட வந்தவர் ''சென்னிப் பெருக்காறுடைய பெருமான் தென் ஆரூர்த் திருக்காவணத்துலவாத் தென்றல்'' என்று கூறுகிறார். இக் குலோத்துங்கன் ஆரூரில் செய்த பணிகளை யும் உணர்ந்த ஆசிரியரே இவ்வாறு பாடு கிறார் என்று நாம் முடிவு செய்வது பொருந்தும்.

அன்றியும், பேரம்பலத்தை இவர் எதிரம்பலம் என்று கூறுவதும் (44) கருதத் தக்கது. இவ்வழக்கு சோழர் காலத்தில் இருந்தது; பின்னர் இல்லை. இந்நூலில் முதலியார் என்ற சொல் பயின்றிருப்பது குறிப்பிடத்தகுந்தது.

''முன்நின் றமர்ரெல்லாம்
சேவிப்ப முதலியார்
பொன்னின் திருத்தேர்மேல்
போதுதலும்—நன்னுதல் தன்
அங்கை மலர்சிவப்ப
ஆடுங் கழங்கொழிந்து
செங்கனக வீதியின்கட்
சென்றணுகி'' (138—9)

இங்கு முதலியார்-நடராசப் பெருமான், முதலியார் இறைவன் என்ற பொருளில் வருவது ஓர் அரிய பிரயோகம். இச்சொல் லுக்கு இன்றுள்ள பொருளை நாம் அறி வோம். ''மூவாத பேரன்பின் மூவர் முதலிகள் தேவாரம் செய்த திருப்பாட் டும்'' என்பது ஏகாம்பர நாதருலா; (14-ஆம் நூற்றாண்டு). திருவானைக்கா வுலா வில் காளமேகப் புலவர், ''பதினெண் மடத்திற் பயிலும் முதலிகளும்'' (159) என்று பாடுகிறார். (14-15 நூ). இவற் றுக்கு முன்னமே, சேக்கிழார் கண்ணப்ப நாயனார் புராணத்தில், ''எங்கள் முன் பெரு முதலியல்லையோ'' என்று காடன் கண்ணப்பரை வினாவுவதாகப் பாடுகிறார் (12 நூ.). இங்கு முதலி-முதல்வன். இத் தில்லையுலாவில் முதலியார் என்ற சொல் இறைவனையே குறிப்பதாக வந்துள்ளது. இஃது ஒரு பழைமையான பிரயோகமென் பதில் ஐயமில்லை: இஃது இந்நூலின் காலம் சேக்கிழார் காலத்தை யொட்டி யிருக்கலாம் என்ற கருத்தை வலியுறுத்து கிறது.

தில்லை உலாவானது திருநீற்றுச் சோழனைக் குறிப்பிட்டமையால், நூல் முதற் குலோத்துங்க சோழனுக்குப் பிற்பட்டது. விக்கிரம சோழன் இரண் டாம் குலோத்துங்க சோழன் ஆகியோரு டைய தில்லைத் திருப்பணிகள் கூறாமை யால் இவர்களுக்கு முற்பட்டது; சிறுத் தொண்டர், கோட்புலி, பரவைக்காகத் தூது சென்றமை, சம்பந்தர் பாண்டிநாடு சென்றமை ஆகியவைகளை இந்நூல் குறிப் பிடுதலால் சேக்கிழார் இந்நூலைப்படித்தே தம் புராணத்துக்கு வேண்டிய சில செய்தி களைத் தெரிந்து கொண்டார் என்று, டாக்டர் இராசமாணிக்கனார் தமது சேக் கிழார் என்ற நூலில் எழுதியிருக்கிறார்.

நூல் முழுமையும் கிடைக்காமை யினாலும், காப்புச் செய்யுள் இறுதிப் பகுதி போன்றனவும் கிடைக்காமையினா லும், நூலாசிரியரைக் குறித்து யாதும் சொல்வதற்கில்லை: எனினும், ஒரு குறிப் புச் சொல்லத் தகுந்தது. பாடிய ஆசிரியர் குலோத்துங்க சோழனுக்கு உடன் காலத் தவர். சிவ பக்தி மிக்கவர்; சோழனிடத் தும் ஈடுபாடு உள்ளவர். இவ்வாறிருந்து பிரபந்தங்கள் பாடிய பெரும் புலவர் ஒட்டக்கூத்தர் 'கோவையுலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்' என்ற புகழ் பெற்றவர். அவர் பாடிய பிற உலாக்கள் மூன்று கிடைத்துள்ளன. அவரே இதையும் பாடி யிருத்தல் கூடும். அவருடைய சிவபக்திச் சிறப்பைத் தக்கயாகப் பரணி நன்கு எடுத் துக் காட்டுகிறது. எனினும் வேறு ஆதா ரங்கள் கிடைக்காமையால் இதைத் துணிந்து சொல்ல முடியவில்லை.

இதுகாறும் கூறியவற்றால், தில்லை யுலா 12-ஆம் நூற்றாண்டுக்குரிய ஒரு சிறப்பான பழமை வாய்ந்த உலாப் பிர பந்தம், சரித்திரச் செய்தி கொண்டது என்பதை நாம் நன்கு உணரலாம்.

நூல் அறிமுகம் !

ஞானதீபம் : இந்நூல், இவ்விருபதாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற சிறந்த தொரு செந்தமிழ்க் கவிதைத் தெய்வநெறி இலக்கியமாகும். இதனை இயற்றியவர் ''கவிஞர் கலை வாணன்'' (திருவானைக்கா - சேக்கிழார் இல்லம் - முதுபெரும்புலவர் **திரு. க. அப்புலிங்கம் பிள்ளை**) அவர்களாவர். இந்நூல், தருமையா தீனத்தினை முதன்முதல் நிறுவியருளிய குருஞான சம்பந்தர் வரலாற்றினைச் சிறந்த இனிய செந்தமிழ்க் கவிதைகளால் அழகுற விரித்துரைத்து விளக்குகின்றது. புத்தூர்க் காண்டம், மதுரைக் காண்டம், ஆரூர்க்காண்டம், தருமைக்காண்டம் என நான்கு காண்டங்களாக அமைந்து, இந்நூல் 692 பாடல்களால் இயன்றுள்ளது. இலக்கணச் செறிவும், இலக்கிய வளமும், வரலாற்றுச் சிறப்பும், தத்துவ விளக்கமும், கவிதை எழிலும், கற்பனை நலமும், சிறந்துயர்ந்ததெய்விக இயல்பும், இந்நூலின்கண் நிறைந்து காணப்பெறு கின்றன. நூலாசிரியரின் பழுத்த தமிழ்ப்புலமையும், பண்பட்ட கவிதைத் திறனும், பக்திமை யுணர்வும், இந்நூலின்கண் சுடர்விட்டு ஒளிவீசித் திகழ்கின்றன. நூலாசிரியரின் செந்தமிழ்ப் புலமையும், சிறந்துயர்ந்த கவிதைத் திறனும், தெய்விகச் சிந்தனையும், சைவசித்தாந்தத் தத்துவ நுண்ணுணர்வும், பரந்து விரிந்த பல்கலைப் பயிற்சியும், பண்பட்டுப் பழுத்த உல கியல் அனுபவத் தெளிவுநலங்களும் பிறவும், இந்நூலின்கண் எங்கும் நிறைந்து காணப்படுகின் றன. அருளியற் பெரும்புலவர், கலைவாணர் திரு. க. அப்புலிங்கனார் அவர்களின் செந் தமிழ்ச் சைவசித்தாந்தப் பெருநலங்கள், அறிஞர்களால் பெரிதும் நயந்து வியந்து போற்றிப் புகழ்ந்து மகிழ்தற்குரியன. விலை ரூ. 10- கிடைக்குமிடம்: கலைவாணன் பதிப்பகம், சேக் கிழார் இல்லம், திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி-620005.

— ஆசிரியர்

கண்ணனூர் மாரியம்மன் தாலாட்டு

திரு. புலவர். பா. அன்பரசு, M.A., B.T., சேலம்.

முன்னுரை :

ஒரு மனிதனுடைய முதல் ஆசிரியர் அவனுடைய தாய் என்றால் மிகையாகாது. குழந்தையின் பார்வை தெரியாக் காலத்திலேயே, அது தாயின் குரலைக் கேட்டவுடன் அழுகையை நிறுத்துவதை இன்றும் காணலாம். குழந்தையின் அழுகையை அடக்க, ஓசை நயமுள்ள சில ஒலிகளும், அதன் பிறகு கையசைவுகளும் பயன்படுவதை நாம் அறிவோம்.

ஒரு பெண்ணை வளர்த்து, உருவாக்கி ஒருவனுக்கு மணம் முடித்து, அவளுடன் சில சீர்ப்பொருள்களையும் அனுப்பலாம்; ஆனால் அவையெல்லாம் புறக்காட்சிக்கே இனிமையையும், மன நிறைவையும் தருவன. கண்ணுக்குப் புலப்படாத அகப் பண்பாட்டை உணர்த்தும் செல்வங்கள் பல. அவற்றுள் ஒன்றே 'தாலாட்டு'. ஒவ்வொரு தாயும் தாலாட்டுப் பாடித் தனது குழந்தையைத் தூங்க வைக்கத் தெரிந்து வைத்திருந்தாள். இக்கருத்தை இன்று ஏற்க நாம் மறுக்கலாம். தாலாட்டுப் பாடிக் குழந்தையைத் தூங்கச் செய்வது என்றால் உடனே 'திரைப்படத் தாலாட்டுப் பாடலா?' என்று கேட்கும் அளவிற்கு இன்றைய நிலை உள்ளது.

காலம் காலமாக அன்னையரின் வாயிலிருந்து வெளிவந்த, ஏட்டில் எழுதாத தாலாட்டுப் பாடல்கள்தாம் இன்று புதிய இசை மெருகுடன் நமது செவிகளில் விழுந்து கொண்டிருக்கின்றன. ஏட்டில் எழுதப்படாத தாலாட்டுப் பாடல்கள் இன்று மொழியாராய்ச்சிக்காக ஏட்டில் எழுதப்பட்டு அனைவருக்கும் பயன்பட்டு வருகின்றன. தாய்க்கும், குழந்தைக்கும் அன்புப் பாலத்தை உண்டாக்குவது தாலாட்டு.

''நாடோடி இலக்கியமாக இருந்த தாலாட்டினை முதன் முதலில் இலக்கியத்தில் ஏற்றியவர்கள் ஆழ்வார்கள். கண்ணனைக் குழந்தையாகக் கருதிப் பாட வேண்டிய காரணத்தினால் தாலாட்ட வேண்டிய அவசியம் இவர்களுக்கு ஏற்பட்டது. வாய்மொழித் தாலாட்டுப் பாடல்கள் இலக்கியத்தில் ஏறிய காலம் கி. பி. ஆறாம் நூற்றாண்டு'' என்பார் தமிழண்ணல்.

ஒருவன் குழந்தைப் பருவத்தில் தனது தாயிடம் கேட்ட தாலாட்டுப் பாடல்களில் பொதிந்துள்ள கருத்துக்கள் அப்போது அவனுக்குப் பயன்படாவிட்டாலும், அவை குழந்தையின் ஆழ்மனதில் சேமிக்கப்பட்டு பெரியவன் ஆனதும் அவனுக்கும், அவன் மூலமாகச் சமுதாயத்திற்கும் பயன்படுகின்றன.

தால் + ஆட்டு—தாலாட்டு. தால்—நாக்கு, தாய் தனது இதழ்களைக் குவியச் செய்து, நாக்கினை அசைத்து, ஓசையெழுப்புவதே தாலாட்டு எனப்படும். தாலாட்டு என்னும் சொல் காலப்போக்கில் 'தாராட்டு' என்று மருவி வழங்கப் பட்டு வந்தது. ''தேரை தாலாட்டும் பண்ணை'' என்பார் கம்பர்.

தாலாட்டுப் பாடல்களில் பொருள் செறிவும், இலக்கிய நயமும், வாழ்க்கையில் தாய் பெற்ற அனுபவச் செய்திகளும், உவமை நயமும், இயற்கையாக வந்து அமையும் எதுகை மோனைகளும் அமைந்திருக்கக் காணலாம். தனது கற்பனையைத் தாய் இசையோடு ஒன்றச் செய்து பாடுகிறாள். ஆகவே அவளைப் 'பிறவிக் கவிஞர்' என்று அழைப்பதில் என்ன தவறு? தாலாட்டுப் பாடல்களை ஆங்கிலத்தில் ('Cradle songs') என்று கூறுவர்.

ஆடிப்பெருக்கின் அரவணைப்புக்கும் அக்கினி தேவனின் அரும்பசிக்கும், அன்னியர் கரங்களுக்கும் சிக்கிய பழம்பெருஞ் சுவடிகள் கணக்கற்றவை. இவ்வின்னல்களுக்குத் தப்பிப் பிழைத்தவையே இன்றைய தமிழ் இலக்கியங்கள். நமது கவனக் குறைவாலும், பழம்பொருள்களைப் போற்றாமை காரணமாகவும் நம்மிடமிருந்து ஒழிந்த ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்ட செய்திகள் எவையென்றும் யாம் அறியோம். அருங்கலைகள் சிலவற்றின் திறம் கூறும் நூல்களின் பெயர்கள் மட்டும் நமக்குக் கிட்டிய வேறு நூல்களின் வாயிலாக அறிய இயலுகிறது.

சுமார் 200 ஆண்டுகள் பழமையுடைய தாலாட்டுப் பாடல் அடங்கிய ஓலைச்சுவடியொன்று தருமபுரி மாவட்டம் அரூர்வட்டம், சில்லார அள்ளி (சிலைக்காரப்பட்டி) என்னும் சிற்றூரில் இருந்து அண்மையில் கிடைத்துள்ளது. இச்சுவடி,

கண்ணனூரில் கோயில் கொண்டுள்ள மாரியம்மனின் பெயரில், இராகவன்செட்டி என்னும் கவிஞரால் எழுதப்பட்டது. சிறந்த கற்பனை வளமும், இலக்கிய நயமும், சொல் ஆட்சியும், இயற்கையான எதுகைமோனை நயமும், உவமை நயமும் கொண்டு திகழ்கிறது. இரண்டு வரிகளில் அமைந்ததாகிய முப்பத்தேழுகண்ணிகளையுடையது. இத் தாலாட்டை எழுதிய புலவர் பெயரைத் தவிர, அவரைப்பற்றி வேறு ஒன்றும் அறிந்து கொள்ள இயலவில்லை. கண்ணனூர் மாரியம்மனின்மேல் இவர் கொண்ட பக்தியின் காரணமாகஇந் நூலைப் பாடியதாகத் தெரிகிறது.

நூல் அமைதி :

கண்ணனூர் மாரியம்மன் தாலாட்டு, தாலாட்டுப் பாடலுக்குரிய சந்தத்துடன் இயற்றப்பட்டுள்ளது. பல இடங்களில் இயற்கையான முறையில் எதுகையும், மோனையும் அமைந்துள்ளன. பேச்சுத் தமிழும், வழக்குச் சொற்களும் தாராளமாகக் கையாண்டிருப்பது, மக்கள் எளிதில் இதனைப் புரிந்து கொள்ளும் பொருட்டே என்று கருத இடமுண்டு. ஒவ்வொரு அடியிலும் பெரும்பாலும் நான்கு நான்கு சீர்கள் இடம் பெற்றுள்ளன. சில கண்ணிகளின் இரண்டாம் அடியில் மூன்று சீர்கள் இடம் பெற்றுள்ளன. கலிவெண்பா என்னும் செய்யுள் வகையில் இதனைச் சேர்க்க முயற்சிக்கலாம். நூலின் சில இடங்களில் ஓசைநயம் மட்டும் முக்கியமாகக் கொண்டு அதற்கேற்ற முறையில் சொற்கள் இடப்பட்டு உள்ளன. சில இடங்களில் ஓரடிக்கும், அதன் அடுத்த அடிக்கும் பொருள்தொடர்பு அற்றுக் காணப்படுகிறது.

விநாயகர் வணக்கம் .

'பேழைத்திரு வயிறுடைய
பெரிய வினாயகனோ,
வேழ முகமாகி
விளையாடி வந்தாளோ''

'பேழைத் திருவயிறுடைய பெரிய விநாயகனாக வேழமுகத்துடன் விளையாடி வந்தது இந்த மாரியம்மன் தானோ' என்றுநூலைத் தொடங்குகிறார் கவிஞர். அந்த விநாயகனைக் கந்தன் கைதொழுது தாலாட்டுகிறானாம்.

பரிவாரமும் ஊர்வலமும் :

மாரியின் பரிவாரங்களைச் சற்றுப் பார்ப்போம். காத்தான், கறுப்பன், காட்டேரி, பூதப்பிசாசுகள், சங்கிலி வேட்டை நாய்கள் இவையே மாரியைச் சூழ்ந்துள்ளன. அத்தனையும் கிராம மக்கள் பூசிக்கும் சிறு தெய்வங்கள். அவர்களுக்கெல்லாம் தலைவியாக விளங்குகிறாள் மாரி. வேட்டைநாய்கள் அவளை, கோட்டைச் சுவர்போலப் பாதுகாத்து வருகின்றனவாம்.

'வேதனும் மாலும்
விண்ணோரும் கொண்டாட
மா தபசு பண்ணி
மகமாயி வந்தாளோ'' (க.19

என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். அதாவது பிரம்மனும், மாலும், விண்ணகத் தேவர்களும் பெருந்தவம் செய்ய மாரி என்னும் மகமாயி வந்தாளாம். உண்மை தானே. மாரி என்பது மழை. மழைபெய்ய வேண்டிய பருவம் தவறினால் தேவர்களுக்கும் பூசனைகள் செல்லாது என்றல்லவா வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார். மாரியம்மனுக்கு நாகம் குடைபிடிக்கின்றதாம்; நல்ல பாம்பு தாலாட்டுகின்றதாம். இதனை

''நாகன் குடைபிடிக்க
நல்ல பாம்பு தாலாட்ட
பாகம் பெரியவளோ,
பாருலகை வந்தாளோ'' (க:15

என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.

பல்லக்கும் இரதமும் :

''பூம்பல்லக்கேறிப்
புல்லாங்குழல் ஊதி
நாள்தோறும் வீதியிலே
நலம் பார்க்க வந்தாளோ'' (க:9)

''வெள்ளி ரதமேறி
வெண்சாமரை வீச
அன்ன நடையழகி
ஆய்முகத்து வந்தாளோ'' (க:10)

அவள் கும்பத்து மாரியாம்; கொலுவில் அலங்காரியாம்.

''ஆனைமேல் சப்பரமும்
அசைந்தாடும் ஊஞ்சல்களும்
தானவர்கள் கூட்டமும்
சாரிவலம் வந்தாளோ'' (க:31)

யானையின் மேல் அழகிய சப்பரம் காணப்படுகிறது. ஊர்வலத்திலோ அசைந்தாடும் ஊஞ்சல்கள் காணப்படுகின்றன. சப்பரத்தில் வீற்றிருக்கும் மாரியின் ஒப்பனை அழகினைப் பிறகு காணலாம். தேவர்களின் கூட்டம் சாரி சாரியாக வருகின்றது. அவர்களுடைய ஓசை கோடானுகோடி இடி ஓசை போலக் கேட்கிறது. நாட்டுமக்கள் இவ்வோசையைக் கேட்டு நடுக்கம் அடைய நகர் வலம் வருகிறாள் மாரி. ஊர்வலம் என்றால் விளக்கொளி வேண்டுமே.

''பத்து லட்சம் பந்தம்
பகல் வத்தி தீவட்டியும்
முத்துக்குடை பிடித்து
முத்தாயி வந்தாளோ'' (க:33)

என்கிறார் கவிஞர். பத்துலட்சம் பந்தங்களும், பகல் தீவட்டிகளும் ஏந்திவருகின்ற

னர் பரிவாரத்தார். நிழலுக்கும், அழகுக்கும் முத்துக்களால்செய்யப்பட்டகுடைகள் காட்சி அளிக்கின்றன. கொம்பு ஊத, சங்கீதம் முழங்க மாரி வலம் வருகிறார்.

மாரியின் ஒப்பனை அழகு :

இனி, மாரியம்மனின் ஒப்பனை அழகினைக் கண்டு களிப்போம். 21 ஆம் கண்ணியில் இருந்து 30ஆம் கண்ணிமுடிய இச்செய்திகள் கூறப்பட்டுள்ளன. பொன்னால் செய்யப்பட்ட அரைஞாண் கயிறு கட்டி இருக்கிறாள் மாரி. கோடி உடுத்திக் கொண்டையில் பூச்சூடி இருக்கிறாள்; வார்க்காதில் தோடு, வளமான பொன்னோலையாகக் காட்சி தருகிறது. கட்டப்பட்ட வடத்துடன், காலில் சிலம்பு அசைய எட்டுத் திசையும் போற்றக் காட்சி தருகின்றாள் அவள். 'தங்கச் சவுளி' அணிந்திருக்கிறாள்; கழுத்தில் 'சரப்பணி'கள். காதுக்குக் கொப்பு அணிந்திருக்கிறாள். கைகளில் வளையல்கள் 'கலகல' என ஓசையிடுகின்றன. பதக்கம், சன்னமான பின்னல், தாழ்வடம், தோளில் உருட்டு வளை, மாலைகள், முன்னங்கைகளில் 'முதாரி'யுடன் காட்சி தருகிறாள் (முதாரி-முன்கைவளையல்). தாயத்தும் கட்டியிருக்கின்றாள்.

தொட்டில் சிறப்பு :

இனி மாரியின் தொட்டில் சிறப்பினைக் காண்போம். அன்னையைக் குழந்தையின் நிலையில் வைத்துப்பாடுகிறார் கவிஞர். தாலாட்டுப் பாடல் என்றாலே அதில் தொட்டிலின் சிறப்பு முக்கியமாக இடம் பெறும்; ஆனால் இதன் ஆசிரியர் மாரியின் வலம்வரும் சிறப்பினை விரிவாகக் கூறி, தொட்டிலின் சிறப்பைச் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

''வச்சிரக்கால் நிறுத்தி
வயிரவளைதான் பாய்ச்சி
பச்சை நிறத் தொட்டிலிலே
பள்ளிகொள்ளும் மாரிமுத்தோ''
(க:5)

என்கிறார் கவிஞர். வச்சிரத்தால் கால்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதன் குறுக்கே வைரத்தினால் செய்யப்பட்ட மூங்கில் போடப்பட்டுள்ளது. இரண்டுமே உறுதியான பொருள்கள். தொட்டிலோ பச்சை நிறமாகக் காட்சியளிக்கிறது. அதாவது மாணிக்கத்தினால் செய்யப்பட்ட தொட்டில். அதில் பள்ளிகொள்ளுகிறாள் மாரி.

அருளும் பாங்கு :

அம்மை அருள் செய்யும் விதத்தைப் பார்ப்போம். பூதப் பிசாசுகளுடனும் வேட்டை நாய்களுடனும், சங்கிலிக் கறுப்பன்களுடனும், நாகத்துடனும், நல்ல பாம்புடனும் தீயவர்களுக்குக் கொடியவளாகக் காட்சிதரும் திரிசூலி, நல்லவர்களுக்கு,

''கும்பத்துமாரி கொலுவில் அலங்காரி
அலங்காரமான அம்மை முத்து'' ;

ஆகக் காட்சி தருகின்றாளாம். அங்கிங்கெனாது எங்கும் நிறைந்த அன்னையின் இயல்பு சொல்லற்கு அரியது; ஆனால் சொல்லப்போனால் மெய்ப்பொருள் அவள் என்பதனை ஆசிரியர் ;

''சொல்லுக் கரியவளோ
சொல்வதற்கு மெய்ப்பொருளோ''
(க:14)

என்று கூறுகிறார். இவ்வரி 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்னும் திருமூலரின் திருவாக்கை நினைவுபடுத்துகிறது. நினையாத பேர்களை நிந்திக்கும் மாரிமுத்தாகவும் காணப்படுகிறாள்.

''பாலர் பிழைத்துப்
பரிபாலமாயிருக்கக்
காலால் உதைக்கும்
கண்ணனூர் மாரிமுத்தோ (க:20)

என்கிறார் கவிஞர். மானிடர் மாரியின் தண்டனைக்கு அஞ்சி, மறுநாடு போனாலும் போன இடம் தேடிவரும் பொல்லாத மாரிமுத்தாகவும் காட்சி தருகிறார்.

முடிவுரை :

''மாரியம்மன் தாலாட்டை
வரிசையுடன் கற்றவர்க்கு
வேறுவினை வாராமல்
வீரியமாய் வாழ்ந்திருப்பார்''

என்று கூறித் தமது தாலாட்டினை முடிக்கின்றார் ஆசிரியர்! இந்நூலில் சொல்வடிவம் விளங்காமல் மூன்று இடங்கள் காணப்படுகின்றன. அந்தச் சொற்கள் உள்ள இடம் அடைப்புக் குறிகளுக்குள் காட்டப்பட்டுள்ளன. கிடைத்தற்கு அரிய இந்நூல் சிதைவு அடையாதவாறு நமது கரங்களுக்குக் கிடைத்திருப்பது நமது பேறு ஆகும். பக்திச்சுவை வேண்டுபவர்க்கு அந்தச் சுவையையும், இலக்கியச்சுவை வேண்டுபவர்க்கு அந்தச் சுவையையும் இந்நூல் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. பாமரர் பாடல்களை ஆய்வு செய்யும் அறிஞர்களுக்கு இந்நூல் ஒரு களஞ்சியமாகக் காணக்கிடக்கிறது என்றால் மிகையன்று.

முதுமை நிலையாமையால் இளமை நிலைத்தது

மகாவித்துவான் பண்டித நடேசனார், B.A., J.P.

உலகம் பல கோணங்களையுடையது. இக்கோணங்களிலிருந்து பார்வையிடும் கண்கள் பல. பல மனங்களே பல மதங்கள் காணக் காரணமாயின. புத்தரும் ஜினரும் உலகினைப் பார்த்ததுபோல் சைவர் பார்க்கவில்லை. உலகில் நிறைந்துள்ள சீவர்களுள் மனிதப் பிறப்பே உயர் நல முடையது. ஆனால், யாவரும் விரும்பும் இன்பம்இம்மியளவும் காணப்படுவதில்லை. நாம் இன்பம் நாடுகின்றோம்; இன்பம் கலவாததை இகழ்கின்றோம். தொடக் கூடாததைத் தொட்டால் துன்பம். எனவே பிறப்பு இன்பத்தைப் பயக்காவிடில் அதனை வெறுத்தல் அறிவுடைமையாம். ''இனிப் பிறவாமல் வந்து ஏன்றுகொள்ளே' என்று நாவுக்கரசரும், ''பிறவாமை வேண்டும்'' என்று காரைக்காற் பேயாரும் வேண்டினார்கள். பிறப்பு துன்பம் உடைமையால் அடியார்கள் அஞ்சினார்கள்; துன்பத்திலிருந்தும் துக்கத்தினின்றும் விடுதலை பெறவே நாடினார்கள்; முயன்றார்கள்; வெற்றியும் கண்டார்கள். பிறப்பறுத்தல் நம் குறிக்கோளாகப் பெறுக! இயக்கவுணர்ச்சியே பிறப்பாகும். பேதைமை எனும் வித்திலிருந்தே பிறப்பு பிறக்கிறது; இறுதியில் அது மரணமே கனிகின்றது.

செம்பொருள் காண்பதே அறிவுடைமை. அப்பொருள் காண அவனது திருப்பெயர்களில் ஒன்றினை மனத்துட் கொள்ள வேண்டும். அப்படிச் சிவனது பண்பினைக் காட்டும் ''நீலகண்டத்தை'' என்றும் நினைந்தே வாழ்ந்த தம்பதிகள் ''திருநீலகண்டரும்'' அவர்தம் தர்மபத்தினியுமாவார்கள். அம்மையார் கணவனது திருப்பெயரையே (திருநீலகண்டம்) மனத்துட் கொண்டு வாழ்ந்தார் எனினும் மிகையன்று. மணம் தவிர்ந்த புத்தூரில் வாழ்ந்த சடங்கவி சிவாசாரியார் மகள் (சுந்தரர் மனைவி), சுந்தரரையே தம் மனத்துட் கொண்டு முத்தி பெற்றார் என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. (பார்வை: பெரியபுராணம், தடுத்தாட் கொண்ட புராணம் பாட்டு 77).

சேக்கிழார் தம் செந்தமிழ்க் காவியத்தில் நாயன்மார்களின் பெருமைகளை நன்கு விளக்கச் சொற்சுவையும் பொருட்சுவையும் செறியப் பாடியுள்ளார். அவர் தம் வரலாறு கூறும் வழி, எவ்வெச் சொல்லையும் எவ்வெப் பொருளையும் எவ்விடத்திற் பொருத்தின் நாயனார் செயலின் அருமைப்பாடு இனிது விளக்கமுறுமோ, அவ்வச் சொல்லையும் அவ்வப்பொருளையும் அவ்வவ்விடத்திற் பொருத்துதல் ஆசிரியரின் செயல்களில் ஒன்றாம்.

''வேதியர் தில்லை மூதூர்
வேட்கோவர்குலத்து வந்தார்;
மாதொரு பாகம் நோக்கி
மன்னுசிற் றம்பலத்தே
ஆதியு முடிவு மில்லா
அற்புதத் தனிக்கூத்தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி
வழிபடும் நலத்தின் மிக்கார்''

ஈண்டு ''வேதியர்'' என்பது நடராசப்பெருமானையே குறிக்கும். அவரே எல்லா அந்தணர்களிலும் வேதியர்களிலும் மேம்பட்டவர் என்று மறைகள் அறைகின்றன. நல்லினத்தவர் நாயனார் என்ற குறிப்பும் உண்டு. தில்லையில் வாழ்ந்த வேதியர்களுக்கும் வேட்கோவர் உதவினார். இந்நகரோ மிகப் பழமையானது. எனவே ஆசிரியர் ''வேதியர் தில்லை மூதூர்'' என்றார். மாணிக்கவாசகரும் ''தில்லை மூதூர் ஆடிய திருவடி'' என்றார். வேட்கோவர் குயவர், குசவர், குலாலர். மண்ணிலே குல உரிமைத் தொழில் செய்பவர் என்று பொருள் கூறுவாரும் உளர். ஆனால், கோவர்-பிசைபவர், வேள்-மண். மண்ணைப் பிசைந்து ஓடு, குடம், பானை, சட்டி முதலியன வனைபவர் எனப் பொருட்படுத்தலே நலம். இந்தப் பெரிய குலத்தின்கண் வந்தவர் நீலகண்ட நாயனார். ''வந்தார்'' எனும் பதத்தால் இறைவனாணையால் விண்ணுலகினின்றும் மண்ணுலகில் இறங்கினர் என்று கருதவேண்டும். உயர்ந்த இடத்திலிருந்து வந்து நற்குடியில் தோன்றினவர், தாழ் செயல் செய்வரோ? செய்யார் எனத் துணிக. நாயனார் அவதரிக்கத் தவம் செய்தது குலம். தில்லை ''நாத

னார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்'' நாயனார் என்கிறார் சேக்கிழார். எனவே, திருவடியை வணங்கும் மேன்மையுடையவர் நாயனார் என்பது வெள்ளிடைமலை. நீலகண்டத்தைப் போற்றாமல் இறைவனின் குஞ்சித பாதத்தையே மனத்திற்கொண்டார் எனில் மிகப்பொருத்தம்.

நாதனார் கழல்கள் வாழ்த்தினார் நாயனார் எனில், வீரச்செயல் புரிந்த வீரர்க்கே வீரக்கழலைப் பரிசில் அளிப்பர் பெரியோர். இது நன்றி காட்டும் செயலாகும். எந்தப் பாதம் எம பயத்தை மிருகண்டு புத்திரனாகிய மார்க்கண்டேயனுக்குப் போக்கியதோ அந்தத் திருவடித் தியானத்தை ஏற்றார் நாயனார். வாயார வாழ்த்தி நன்மனத்தோடு சிந்திக்கும் நலம் பெற்றவர் திருநீலகண்ட நாயனார். இத்தகையார் இழிதொழில் செய்வரோ? செய்யார்.

''பொய்கடிந்து அறத்தின் வாழ்வார்;
புனற்சடை முடியார்க்கு அன்பர்;
மெய்யடியார் கட்குஆன பணிசெயும்
விருப்பில் நின்றார்;
வையகம் போற்றும் செய்கை
மனையறம் புரிந்து வாழ்வார்;
சைவமெய்த் திருவின் சார்வே
பொருள்எனச் சாரும் நீரார்''

பொய்யாமை ஆற்றின் அறம் பிற செய்யாமை நன்று எனும் நீதிக்கேற்ப, மெய்ப்பொருள் எது என்றும், பொய்ப்பொருள் யாது என்றும் உணர்ந்து பொய்யினைத் தள்ளி உண்மை நெறியாகிய சிவநெறியிலே வாழ்பவர் நாயனார் எனக் காண்பிக்கவே சேக்கிழார் ''பொய்கடிந்து அறத்தின் வாழ்வார்'' என்றார். ஈண்டு அறம் என்பது சைவ நல்லறங்கள்; இதனையே பதிதருமம் என்ப. பதிதருமம் எனும் சிவதருமங்கள், நாயனார் அன்பாகிய உண்மைத் தன்மையிலே நிலை பெற்றவர்; பொய்யடிமை இல்லார்; அன்பாம் மெய்யடிமை உள்ளார். சைவச் செல்வமாகிய திருநீறு, கண்டிகை, சடைமுடி, பஞ்சாட்சரம் முதலியவைகளையே சார்பாகக் கொண்டார். செல்வன் கழல் ஏத்தும் செல்வம் பெற்றார்; சிவத் தொண்டர்களுக்குத் தொண்டு புரிந்தார், இல்லறத்தை இனிது நடாத்தினார். சைவ நெறிப்படி வாழ்வதே செல்வம் என்று உணர்ந்தார், ஒழுகினார். தம் குலத் தொழில் புரிந்து சீவனம் செய்தார்; செயற்கரியன செய்யும் சீரியர் இழிசெயல் புரிவரோ? புரியார்.

''அவர் தங்கண் மனைவியாரும்
அருந்ததிக் கற்பின் மிக்கார்
புவனங்கள் உய்ய ஐயர்
பொங்குநஞ்சுண்ண யாம்செய்
தவம்நின்று தடுத்தது என்னத்
தகைந்துதான் தரித்ததுஎன்று
சிவன் எந்தை கண்டம் தன்னைத்
திருநீலகண்டம் என்பார்''

நாயனார் தம் கண்போன்ற மனைவியார் அருந்ததியைவிட, மேம்பட்ட கற்பின் மிக்கார்; கண் அன்னவன் கணவன். இங்கே கண் அன்ன மனைவியரையும் காண்கின்றோம். கற்பு-கல் பு. பு விகுதி பெற்ற தொழிற் பெயர்; கணவனார் வழி நிற்கும் பெண் கல்வி. ஆளும் தன்மையுடையது ஆண்; பேணும் தன்மையுடையது பெண். ''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' எனும் அளவுகோலுக்கு எடுத்துக் காட்டாக விளங்கினார் திருநீலகண்ட நாயனார்தம் மனைவியார். கருத்து ஒருமித்து இருவரும் இல்லறம் நடத்தினர். கற்பெனப்படுவது சொல் திறம்பாமையன்றோ? ஒருவரை ஒருவர் இணைபிரியாது இன்பச் சோலையுள் இருவரும் உலாவினர். இளமை மீதூர இன்பத் துறையினில் எளியரானார். கணவன் மனைவியரிடை உண்மையும் நம்பிக்கையும் உலாவ வேண்டும். கேண்மை இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும். தவறு செய்தவர் தம் நண்பரிடம் ஒளித்துப் பேசார். தவறு கண்ட காலத்தும், கேட்ட காலத்தும் தவறியவர் நல்வழிப்பட இடித்துக் கூறுபவரே உண்மை நண்பர். ஈருடலுக்கு ஓர் உயிர்போல் விளங்குதலே உத்தம நட்பு; உயர்ந்த காதல். இத்தலையாய காரணத்தால் திருநீலகண்ட நாயனார் தம் மனைவியிடம்''அடைமழையால் பரத்தைபால் (இடம்) தங்க நேரிட்டது'' என்ற உண்மையை ஒளியாமல் கூறினார். இல்லையெனில் ''ஆனதம் கேள்வர் ஆங்கோர் பரத்தைபால் (இடம்) அணைந்தது' அம்மையார்க்குத் தெரியச் சந்தர்ப்பமே இல்லை.

சேக்கிழார் சுவாமிகளுக்கு முற்கால மக்கள் பேசிய நீலகண்டக் குயவரது கதை தெரியும். ஆனால் அதை அவர்கள்தம் பெரிய புராணத்தில் குறிப்பாகக் குறித்தே பாடியுள்ளார். ''பரத்தைபால் அணைந்து நண்ண, மான முன் பொறாது வந்த ஊடலால்'' எனும் அடியில், அக்குறிப்பினைக் காணலாம். ''பரத்தைபால்'' ஏழாம் வேற்றுமை விரி; பால், இடம், கண், இல் ஏழாம் வேற்றுமை உருபுகள். ''பரத்தை வீட்டை அணைந்தார்'.' என்பதேபொருள். பரத்தையை அணைந்தார் எனப் பொருள் பண்ணல் வேண்டா. இங்கு இடக்கர் அடக்கல் இல்லை.

பழங்கதை: ''நீலகண்டம்'' எனும் காரண இடுகுறிப்பெயர்தாங்கிய 'வேட்கோவர்; அடைமழையின் காரணமாக ஓர் இரவு வீடு திரும்ப முடியவில்லை. பரத்தையரது வீடு என்று தெரியாமல் மழைக்காக முன்றிலில் ஒதுங்கினார். கதவு தாளிட்டிருந்தது. பரத்தை உண்ட உண்கலம் கழுவிய நீரினை அவளதுதோழி சன்னல் வழியே வேகமாக ஊற்றினாள். அக்கழுநீர் சைவவடிவம் பொலிந்த நீல

கண்டத்து மேனிமேற்பட்டுத் துணி நனைந்தது. நீலகண்டம் குரல் கொடுத்தார். அக்குரலைக் கேட்ட பரத்தைமார் தலைவி வெளியே வந்தாள்; நடந்ததைத் தெரிவித்து மன்னிப்புக் கேட்டாள். மன்னிப்பு தெய்வச் செயலன்றோ? நீலகண்டம் புன்முறுவல் பூத்தார். சிவவேடப் பொலிவினைக் கண்ட பரத்தைமார் எல்லோரும் வேண்டினர்; வீட்டிற்குள் அழைத்துச் சென்றனர்; எச்சில் நீரினைப் போக்கத் தூய நீரில் நீலகண்டத்தைக் குளிப்பாட்டினர். புலராக் கழகம் புனைந்து கொள்ளச் செய்து வாசனைமிக்க சுண்ணத்தையும் சந்தனத்தையும் பூசி, இருக்கை தந்து, மழை நின்றதும் வெளியே அனுப்பிவிட்டனர்.

மணம் மிக்கு வீசக் குயவனார் தம் வீடு நண்ணினார்; மனைவியார் கேட்க, உண்மை நிகழ்ச்சியை ஒளியாமல் விரித்துரைத்தார் நீலகண்டம். பரத்தையர் வீட்டுக்குப்போய் வீடு திரும்பியதே அசைவரது பண்பு எனக் கொண்டு, தம் மானமே போய்விட்டதாக எண்ணி வருந்தினார். யாது சொல்லியும் சமாதானம் பெற வில்லை. நீலகண்டம் தம் மனைவியின் ஊடலைத் தீர்க்க அருகு சென்றார். அவள் அது பொறாமல் ''நீலகண்டம் சாட்சியாக எம்மைத் தீண்டற்க'' என்றாள். பரன் என்று உணர்விற்கு அறிகுறியான நீலகண்டத்தை விளித்தார் என்ப. இன்றும் உலகில் மக்கள் ஒன்றினைத் தெளிவுபடுத்தத் தங்களுக்குப் பிரியமான ஒன்றின் மேல் ஆணையிடுதலைக் காணலாம். கொண்ட கொழுநனைவிட வேறுதெய்வம் கற்புக்கரசிக்கு இல்லை என்னும் நீதிக்கேற்ப, கணவன்றன் பெயராலேயே ஆணையிட்டார் என்றும் கூறலாம்.

திருநீலகண்டத்தின் பெருமை:''கறைமிடறணியலும் அணிந்தன்று ; அக்கறை மறை நவில் அந்தணர் நுவலவும்படுமே''—பெருந்தேவனார்—புறம். ''ஆதல் நின்னகத் தடக்கிச் சாதல் நீங்க எமக்கீத்தனையே; நீலமணிமிடற்று ஒருவன்போல மன்னுக பெரும!''—ஔவையார். ''மாமாமலர்த் தெரியலான் மணி மிடற்றிடைக் கிடந்த சாம கீதம் மற்றும் ஒன்று சாமி நன்கு பாடினான்'' — சீவகசிந்தாமணி. ''களங்கனி மாறேற்கும் பண்பின் மறுமிடற்றன் றேறிய''—பதிற்றுப்பத்து. ''யாழ்கெழு மணிமிடற்று அந்தணன் தாவில் தாணிழல் தவிர்ந்தன்றால் உலகே'' அகம், பெருந்தேவனார். அத்தகைய ஓதுதற்கு அரிய எட்டெழுத்து மந்திரம் (ஸ்ரீ நீலகண்டாயநம:). உன்னும் அடியார் உறுதுயர் களையும் திருநீலகண்டம், திரு நீல வாசனை திரவியத்துடன் வந்ததால் நாயனார் மனைவியார் ஐயமுற்றுக் கேட்கையில், தாம் பரத்தைபால் (வீடு) அணைந்தமையைக் கூறினார், பொய் கடிந்தறத்தின் வாழ்வார் (நீலகண்டத்துக் குயவனார்).

தம் கற்பிற்கும், தம் கேள்வர் ஒழுக்கத்திற்கும் அடாதவாறு அவர் பரத்தை பால் (வீடு) அணைந்து வருதலின் மானம் முதலியவை வாதிக்கப்பிணங்கினார். ஊடலால் மனையின் வாழ்க்கை ஏனைய எல்லாம் செய்தே, உடனுறைவு இசையாரானார். திருவினும் உருவம் மிக்கார். பல்லாண்டுகள் இருவருமே ஆணைவழி நின்றனர்.

''தோன்றாள் பிறலோக்காள் தோகையரைக்
காணஒட்டாள்
ஈன்றாள் என் அன்பியற்றுவாள்
—மான்றேயோர்''

''காரிகையைக் கண்ணுற்ற காந்தனுடன்
சேராளே
சீரிய கற்பு ஓவாத்திரு''

''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகை
சான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்பன கற்பியல். ''இளமை மீதூர இன்பத் துறையினில் எளியரானார்'' என்று தெய்வச் சேக்கிழார் பாடிய தொடரில் கதையின் நீதி ஒளிந்தே கிடக்கிறது. எந்த இளமை நீலகண்டக்குயவனாரை பரத்தைபால் அணையச் செய்ததோ, அவ்விளமைப் பருவம் வீணே கழியவும் கழிந்த இளமை பிறர்போலக் கழிந்தே போகாது மீளவும் பெறும்படியாகவும் காண்கின்றோம். (இளமை, மீது-மேலும்; ஊர-வர)

சிற்றின்பம் சிறிது; பேரின்பம் பெரிது. இறைவனிடத்தே பதிந்த அன்புக்காகச் சிற்றின்பத்தை அறவே துறந்தவர், என்றும் அழியாப் பேரின்ப மடைகுவர், 'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் திருநீக்கப்பட்டார் தொடர்பு'' என்பது நீதி. ''வென்ற ஐம்புலனால் மிக்கீர்! விருப்புடன் இருக்க நம்பால் என்றும் இவ் இளமை நீங்காது'' என்று எழுந்தருளினாரே. நம்பால்-நம்மிடம் (சிவலோகம்). ''முருந்தனைய தூமுறுவல் முற்றிழையார் சேரி, இருந்து இளமைக் கள்ளுண்டிடை தெரிதலின்றிக், கருந்தலைகள் வெண்டலைகளாய்க் கழியு முன்னே, அருந்தவமும் தானமும் ஆற்றுமின்கள் கண்டீர்'' எனும் போதனையை உன்னுங்கள். பல்லாண்டு ஒரே வீட்டில் கணவனும் மனைவியும் வாழ்ந்தும் உண்டும் உடுத்தியும் உறங்கியும் நீலகண்டத்தின் ஆணைவழி நின்றது செயற்கரிய செயலேயாம். செயற்கரிய செயலைச் செய்து முதுமைநீக்கி இளமையாக்கினார் திருவருளால் சிவலோகத்திற் சேர்ந்து இவர்கள் என்றும் நீங்கா இளமையுடன் நிலைத்துப் பேரின்பமுற்றார்கள்.

ஆண்டாளும் அருளாளனும்

திரு. நா. வேணுகோபால் நாயகர், B.A., B.L.
செயலாளர் : வைணவ மகா சங்கம், சென்னை.

பெருமாள்கோயில் (1) என்றும், கல் லார் மதிள்சூழ் கச்சி நகர் (2) என்றும், கல் உயர்ந்த நெடுமதிள் சூழ் கச்சி (3.) என்றும், உலகம் ஏத்தும் ஆழியான் ஊர் அத்தி (4) என்றும், நகரேஷு காஞ்சி (5) என்றும், ஐந்து அடைமொழிகளாலே புகழப்பெறும் கச்சியம்பதியில், எழுந் தருளியுள்ள எம்பெருமானுக்கும்; ஐந்து எழுத்துக்களாலான 'அருளாளன்' என்னும் திருநாமமே சிறப்படைந்துள்ளது!

ஆண்டாள் அருளிய திருப்பாவை யிலும், அத்தியூர் அருளாளனை ஐந்து பாசுரங்களால் போற்றியருளுகின்றாள்! கல் உயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சி எம்பெரு மான், இந்நிலவுலகில் காணும் அஃறிணை, உயர்திணைப் பொருள்களுக்கு மட்டும்அல் லாமல்; வானவர்க்கும் ஈசனாக விளங்கு கிறான்! எனவே, அவன் தேவாதி தேவன்! இதனாலேயே, நம்மாழ்வாரும் தாம் அரு ளிய ஆயிரம் பாடல்களாலான திருவாய் மொழியில் முதற்பாசுரத்திலேயே அவனை அயர்வறும் அமரர்கள் அதிபதி எனப் போற்றியருளுகிறார்!

திருப்பாவையிலே ஆண்டாள் இயற்ற விரும்பும் மார்கழி நீராட்டம் எதற்காக? ஆண்டாளும் கோகுலத்துக் கோபியர்களும் கண்ணனைச் சேவிப்பதற்கே! அந்தக் கண்ணன் நம்மாழ்வார் போற்றும் வான வர் கண்ணனாக, பெருமாள் கோயிலிலே தேவாதி தேவனாக அல்லவா எழுந்தருளி யுள்ளான்!

காஞ்சியில் எழுந்தருளியுள்ள தேவாதி தேவன் கண்ணனே என்பது ஆழ்வார் ஆச் சாரியர்களின் திருவுள்ளம். நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி முதற்பத்து, முதல் பாசுரத்தில் அயர்வறும் அமரர்கள் அதிபதியின் துயரறு சுடரடி தொழுது, அப்பத்தின் (ஒருபத்தில் நூறு பாடல்கள் அடங்கும்) கடைசிப் பாசுரத்திலும் தேவ ராசனைப் போற்றுகிறார்! கண்ணன் இந் நிலவுலகில் அவதரித்திருப்பினும் அவனை வானவர் கண்ணன் அதாவது தேவாதி தேவன் என்றார்.

மணியை வானவர் கண்ணனைத்
தன்னதோர்
அணியை, தென்குருகூர்ச்
சடகோபன், சொல்
பணிசெய் ஆயிரத்துள்
இவைபத்துடன்
தணிவிலர் கற்பரேல்
கல்வி வாயுமே

(திருவாய்மொழி 1-10:11)

கச்சி அருளாளன் கண்ணனே என்ப தைத் திருமங்கையாழ்வாரும் திருவுள்ளம் பற்றுகிறார். கச்சியில் அமைந்துள்ள பர மேச்சுரவிண்ணகரப் பதிகத்திலே! கண்ண னுடைய இடம், தடமாமதிள் சூழ்ந்து அழகாய கச்சிதானாம்!

கார்மன்னு நீள்விசும் பும்கடலும்சுட
ரும்நில னும்மலையும் தன்னுந்தித்
தார்மன்னு தாமரைக் கண்ணனிடம்தட
மாமதிள் சூழ்ந்தழ காயகச்சி!

நூற்றெட்டுத் திருப்பதிகளின் மேன் மைகளை அறிந்து அவைகளை நூற்றெட் டுத் திருப்பதி அந்தாதியில் நுணுக்கமாக அமைத்தருளிய திவ்யகவி பிள்ளைப்பெரு மாள் அய்யங்காரும், அத்தியூரில் எழுந் தருளியுள்ள அருளாளன் கண்ணனே என நிர்வகிக்கின்றார்.

பொருளாசை மண்ணாசை
பூங் குழலார் போகத்து
இருள்ஆசை சிந்தித்து இராதே
அருளாளன்
கச்சித் திருப்பதியாம் அத்தியூர்க்
கண்ணன் தாள்
இச்சித்து இருப்பது யாம் என்று?

கண்ணனாகிய, தேவாதி தேவனைச் சேவிப்பதால் என்ன பலன்? அவனை நாம் சேவிப்பதுதான் தாமதம்! உடனே தேவாதி தேவன் நம் குறைகளைக்கேட்டு, அப்படியா, அப்படியா, இத்தனை குறை களா? என்று கேட்டு அவைகளை ஆராய்ந்து நீக்கி அருள்வான்! இதுவே மார்கழி

நீராட்ட நோக்கித்தின் பூர்த்தி! இதை ஆண்டாள் அருள்வதைச் சேவிக்கலாம்.

கீழ்வானம் வெள்ளென்று
எருமை சிறுவீடு,
மேய்வான் பரந்தன காண்!
மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப்
போகாமல் காத்து, உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம்
கோது கலமுடைய
பாவாய் எழுந்திராய்!
பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை
மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம்
சேவித்தால்
ஆ! ஆ! என்று ஆராய்ந்து
அருளேலோர் எம்பாவாய்!

தேவர் என்றாலும், உம்பர் என்றாலும் ஒரு பொருள் குறித்த இரு சொற்களே! தேவதேவன் என்றாலும் உம்பர் கோமான் என்றாலும், தேவாதி தேவனையே குறிக்கும் !

குழந்தையான கண்ணனைத் துயில் எழுப்ப வேணுமானால் முதலில் அக் குழந்தையின் தந்தை தாயாரைத் துயில் எழுப்பவேணும். எனவே பெற்றோர்களான நந்தகோபர், யசோதைப் பிராட்டி திருமாளிகைக்குச் சென்று அவர்களை முதலில் எழுப்புகிறார்கள். அங்கே பல தேவரான நம்பி மூத்தபிரானும் உறங்குவதால் அவரையும் எழுப்புகின்றனர். பிறகு அவன் மூலமாக திருத்தம்பியான கண்ணனையும் திருக்கண்மலர வேண்டுகின்றனர்! இந்தக் கோட்டித் திருப்பள்ளிஎழுச்சி நிகழ்த்தியது உம்பர்கோமான் சந்நிதியிலே !

அம்பரமே, தண்ணீரே, சோறே
அறஞ் செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா!
எழுந்திராய்!
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே!
குலவிளக்கே!
எம்பெருமாட்டி யசோதாய்!
அறிவுறாய்,
உம்பர் கோமானே
உறங்காது எழுந்திராய்!
செம்பொன் குழலடிச் செல்வா!
பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோர்
எம்பாவாய்!

அமரர்கள் எண்ணிக்கை முப்பத்து முக்கோடி என்பது மரபு. கோடி கோடியாகப் பிரிந்த முப்பத்து மூன்று வகையினர் என்றும் கொள்ளலாம். வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்னும் பொய்யா மறையின்படி உலகு தொடங்கிய நாள் முதலாக இன்றளவும் முப்பத்து முக்கோடி அளவையும் கடந்திருக்கலாமே அமரரானவர்களின் தொகை !

மனிதர்கட்குத் துன்பம் உண்டு. துயரம் உண்டு. அமரர்கட்கு அவை கிடையாது! இத்தகைய அவர்கட்கும் ஓர்ஒரு சமயம் துன்பம் உண்டாகுவதாயின் அதனை எல்லாத்தெய்வங்களும்பின்னிடும் படியாகத், தான் முன்னிட்டு அத்துன்பம் அவர்களுடைய நடுக்கத்தைக் (கப்பம்) தவிர்த்து ஒழித்தருள்பவன், அருளாளனே! அயர்வறும் அமரர்கள் அதிபதி தன்துயரறு சுடரடியால் கப்பம் தவிர்க்கும் கலி! அடியவர்களைக் காப்பதில் செப்பம் உடையவன். பக்தர்களின் பகைவர்களைச் சுர வேகத்தாலேயே அடக்கும் புனிதன்!

பிராட்டியை முன்னிட்டே பெருமாளை அடைதல் வேண்டும் என்பது வைணவத்தில் பெருங்கொள்கை. முப்பத்து மூவரின் கலியான அருளாளனைத் துயில் எழுப்புமுன் நப்பின்னை நங்கையைத் துயில் எழுப்புகின்றனர். எனவே இது திருப்பாவையில் அமைந்துள்ள துவயானு சந்தானப்பாடல். அதாவது பெருமாளும் பிராட்டியுமான சேர்த்தினியிலே பக்தன் சரணாகதி செய்தல் வேண்டும் என்ற வைணவக் கொள்கையை வெளியிடும் பாசுரம்.

பிராட்டியும்பெருமாளுமான சேர்த்தியில்தான் சரணாகதி சிறக்கும். பெருமாள் சினந்தாலும் பிராட்டி வரிந்து வந்து காப்பாற்றுவாளே!

''அடிமைதான் சித்திப்பதும், ரசிப்பதும் அச்சேர்த்தியிலே'' -(முமுட்சுப்படி 109)

உதாரணங்கள் :

''இவள் சந்நிதியாலே காகம்
தலைபெற்றது; அது இல்லாமையினாலே
இராவணன் முடிந்தான்!'' (முமு.135)

''இளைய பெருமாளைப்போலவே இரு
வருமான
சேர்த்தியிலே அடிமை செய்கைமுறை''
—(மு.மு.168)

இவ்விதமான புனித சேர்த்தியிலே அடிபணிவதும், குற்றேவல் (அடிமை) செய்வதும் முப்பத்து மூவரான அமர்களின் கலியான அருளாளனை முன்னிட்டே!

முப்பத்து மூவர்
அமரர்க்கும் முன்சென்று,
கப்பம் தவிர்க்கும் கலியே!
துயிலெழாய்
செப்பமுடையாய்! திறலுடையாய்!
செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா!
துயிலெழாய்!
செப்பன்ன மென்முலைச்
செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே!
துயிலெழாய்!
உக்கமும் தட்டொளியும் தந்து
உன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோர்
எம்பாவாய்!

பெருமாள் கோயிலென்னும் கச்சியம் பதியிலே எம்பெருமான் எழுந்தருளிய விருத்தாந்தத்தைப் புராணக் கதை கூறுவது: உலக நன்மைக்காகப் பிரம்மா ஆயிரம் அசுவமேதயாகம் புரிய விரும்பினார். ஐராவதம் என்னும் இந்திரனது யானையே, அத்தி(யானை)கிரியாக அமைந்துள்ளது. இந்த அத்தி கிரியின் மீது ஒரு அசுவமேத யாகம் செய்யினும் அது ஆயிரம் அசுவமேத யாகம் செய்தமைக்குச் சமமாகும் என அசரீரி (வான் முழக்கம்)மூலம் பிரம்மா அறிந்தார். அத்திகிரியை உத்திர வேதியாக (யாககுண்டமாக)க் கொண்டு நான்முகன் அசுவமேத யாகம் இயற்றலும், அதில் தோன்றிய புண்ணியகோடி விமானத்தில் உலகமே கண்டு வியக்கும்படியான ஒளிப்பிழம்பாக உலகினில் தோற்றமாய் நின்ற சுடராக, அருளாளன் தேவாதி தேவன் எழுந்தருளினார். நான்முகனும் இந்த யாகம் இயற்றியது உலக நன்மைக்கு ஆதலால், எக்காலத்தவரையும்காப்பாற்றி அருளும்பொருட்டு அத்திகிரியில் நிரந்தரமாகச்சேவை சாதிக்கும்படிப்பிரார்த்தித்தபடியே உலகினில் தோற்றமாய் நின்ற சுடராகத் திகழ்கின்றான். பக்தர்களை எக்காலத்தும் காப்பதாக வரம்கொடுக்க வரதராசன், அதிலே ஊற்றம் உடையவன் அதனால் பெரியவன்!

இவ்விதப் புகழ்படைத்த அருளாளனிடம் தானே நேரடியாக சரணடைந்து, போற்றவேணும்! புகழவேணும்! சரணாகதி செய்யும் திருக்கூட்டத்தைச் சேவித்தால் எப்படி இருக்கிறது, எதிர்த்த பகைவர்களும் தங்கள் வல்லமையை இழந்து, வரதராசனின் திருவாசலிலே திருவடி தொழுவது போல உள்ளது.

ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி
மீதளிப்ப,
மாற்றாதே பால்சொரியும் வள்ளற்
பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே!
அறிவுறாய்!
ஊற்றமுடையாய்! பெரியாய்!
உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்!
மாற்றார் உனக்கு வலிதொலைந்து
உன்வாசற் கண்
ஆற்றாது வந்துன் அடிபணியுமா
போலே
போற்றியாம் வந்தோம்
புகழ்ந்தேலோர் எம்பாவாய்!

சரணாகதியின் பலன் என்ன? திருப்பாவை நோன்பில் புரிந்த சரணாகதியின் பலன் என்ன? அருளாளனைப் பற்றிய ஐந்தாவது பாசுரத்திலே இதை அருளுகிறாள் ஆண்டாள்!

வைணவர்கள் அடைய வேண்டிய பேறுகள் இரண்டே. பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை; அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை. அருள் எவ்வுலகிற்கும் தேவை! திருவாகிய இலட்சுமிப் பிராட்டியின் கடாட்சத்தாலே செல்வத்தைப் பெற வேணும். அதாவது நமது செல்வம், லட்சுமியின் திருவுள்ளத்தால் மதிக்கத் தக்கதாக இருத்தல் வேண்டும். பிறர் தூற்றுதலுக்கும், நமது மனச்சாட்சியின் எதிர்ப்புக்கும் உட்பட்டதாக இருத்தல் கூடாது. இதுவே திருத்தக்க செல்வம்.

இந்த செல்வத்தின் பயன் என்ன? திருத்தக்க சேவகம்தான். வைணவப் பொலிவோடு கூடிய குற்றேவல்களே! கடல் சூழ்ந்த மண்உலகம் வாழ வேண்டுமெனத் துதிப்பவர்கள் வைணவர்கள். திரிவிக்கிரம அவதார காலத்தில், அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர்கோமான் உயர் குலத்து-வசிஷ்டர் என்றும் தாழ்குலத்துச் சண்டாளர் என்றும் வேற்றுமை பாராட்டாமல், தன் திருவடியாலே ஆட்கொண்டபடி அனைவரும் வைணவப் பொலிவுடன் விளங்கும்படி உதவுவதே நாம் இயற்ற வேண்டிய சேவகம். இதுவே திருத்தக்க சேவகம். இந்தத் திருத்தக்க சேவகம் மூலமாகவும், திருத்தக்க செல்வத்தை அடையலாம். வைணவப்பேறு இப்படிப் பின்னிக் கிடக்கிறது!

பிரமனின் யாககுண்டத்தில் கச்சியிலே நெருப்பென்ன நின்ற நெடுமால், ஒரு காலத்தில் வடமதுரையை கொடுங்கோல் ஆட்சிக்கு உட்படுத்திய கம்சன் அடிவயிறு கலங்கும்படியாக அவதரித்தான். எட்டாவது குழந்தையால் தனக்கு மரணம் என அறிந்தும், முதல் குழந்தையிலிருந்தே ஒவ்வொரு குழந்தையையும் கொன்று போட்டான் கம்சன்! ஆகவே கம்சனின் அடிவயிற்றில் நெருப்பாகவல்லவா பரவினான்! கச்சியிலே யாககுண்டத்தில், சிஷ்ட பரிபாலனத்திற்காக உலகினில் தோற்றமாய் நின்ற சுடர், துஷ்ட நிக்ரகத்திற்காகக் கம்சன் வயிற்றிலே வடமதுரையிலே தோன்றியது. தேற்றமாய் நின்ற சுடரே; வடமதுரையில் நெருப்பென்ன நின்ற நெடுமாலாய்க் கண்ணனாகியது!

திருத்தக்க செல்வமும் சேவகமும் அருளி, வருத்தமும் தீர்த்து மகிழ்விக்கும் நெருப்பென்ன நின்ற நெடுமாலாம் அருளாளனைச் சேவிப்போம்:

ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஓரிரவில்
ஒருத்தி மகனா யொளித்து வளரத்,
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த,
கருத்தைப் பிழைப்பித்துக்
கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே உன்னை
அருத்தித்து வந்தோம்,
பறை தருதியாகில்,
திருத்தக்க செல்வமும் சேவகமும்
யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து
மகிழ்ந்தேலோர் எம்பாவாய்!

ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையில் நாராயணாய நாமத்தை மும்முறை கோஷித்து, அசித், சித், ஈசுவரன் என்ற தத்துவத் திரய ஞானத்தை வெளியிட்டருளினாள்! கோவிந்த நாம சங்கீர்த்தனத்தையும் மும்முறை கோஷித்து வைணவ மரபு வகுத்துள்ள தத்துவம், இதம், புருஷார்த்தத்தை வெளியிட்டருளினாள்! அருளாளனின் திருநாமத்தை நேரிடையாகவும் மறைமுகமாகவும் ஐந்து முறைக்கோஷித்து அர்த்தபஞ்சக ஞானத்தை அடிக்கோடிட்டு அருளியுள்ளதை இனி சேவிப்போம்!

நம்மாழ்வார் திருவாய்மொழியில் அமைத்துள்ள அர்த்தபஞ்சக ஞானத்தை வைணவ ஆசாரியரான பட்டர் ஒரு வெண்பாவில் வரிசைப்படுத்தியுள்ளார்.

மிக்க இறை நிலையும் ,மெய்யாம்
உயிர் நிலையும்
தக்க நெறியும் தளையாகித்
தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும்
ஓதும் குருகையர்கோன்,
யாழினிசை வேதத் தியல்!

மிக்க இறைநிலை :

வைணவத்தில் திருமாலே மிக்கஇறை. திருமாலின் நிலை பரத்துவம். உயர்வற உயர்நலம் உடையநிலை. மரம், விலங்கு முதலிய அஃறிணைப் பொருள்களை விட உயர்திணையைச் சேர்ந்த மக்கள் தேவர் உயர்ந்தவர்கள். மக்களினும் தேவர் உயர்ந்தவர்கள். தேவரினும் உயர்ந்தவன் தேவாதிதேவன்! ஒத்தார் மிக்காரைஇலையாய மாமாயன் அவன் (திருவாய்மொழி 2-3-2) இப்பரம் பொருளையே நாம் சென்றடைதல் வேண்டும்! சேவித்தல் வேண்டும்! ரட்சகத் தன்மையே இறைநிலை. நம் குறைகளை விண்ணப்பித்த மாத்திரத்திலேயே மிக்க இறைநிலையாம் தேவாதி தேவனும் நமக்கு மிக இரங்கி அவைகளை ஆராய்ந்து அருள்வானாம்!

தேவாதி தேவனைச்
சென்று நாம் சேவித்தால்
ஆ! ஆ! என்று ஆராய்ந்து
அருள்வானாம்; அருளாளனும்!

மெய்யாம் உயிர்நிலை :

உயிர் நிலையை மிக்க உயிர்நிலை எனலாகாது. உயிர்த் தத்துவத்தைவிட இறைநிலை மிக்கது. ஆயினும் உயிர்நிலை மெய்யாம் உயிர்நிலை. அதாவது இறைவன் எங்ஙனம் நித்தியமோ, சத்தியமோ, அங்ஙனமே, உயிரும் நித்தியம், சத்தியம், அழியாதது!

இறையும்,உயிரும் சேர்ந்தே வாழும். உயிர் இறையைத் தொழுதே வாழும். இவ்விதமான உயிர்த் தத்துவத்தைக் குறிப்பவர்கள் நந்தகோபாலனும்,யசோதையுமே.

உயிர்த்தத்துவம் அடியவரை ஆதரித்து அவர்கட்கு அறஞ்செய்து வாழவேணும் என்பதை நந்தகோபன் மூலம் வெளிப்படுத்துகிறாள் ஆண்டாள். மேலும், இறைவனே கதி என்ற அபல நிலையில் வாழ வேண்டுமென்பதை யசோதைப் பிராட்டியால் விளக்கப்படுகிறது. அபலநிலையில் தலைநின்ற யசோதை உயிர்வர்க்கத்தின் கொழுந்து! குலவிளக்கு! பெருமாட்டி!

அம்பரமே, தண்ணீரே சோறே
அறம்செய்யும் நந்தகோபாலா!....
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே!
குலவிளக்கே!
எம்பெருமாட்டி! யசோதாய்!.......

தக்கநெறி :

தக்கநெறி என்பது அடையத்தக்க நெறி! இறைவனை அடையத் தகுந்தநெறி சரணாகதி மார்க்கமே! சரணாகதியையும் பிராட்டியை முன்னிட்டுச் செய்தல் வேண்டும். பெருமாளும் பிராட்டியுமான சேர்த்தியிலே சரணாகதி செய்வதே சாலச் சிறந்தது. இச்சேர்த்தியிலே நம்மாழ்வாரின் சரணாகதி,

'அகல கில்லேன் இறையும்' என்று
அலர் மேல் மங்கை உறைமார்பா!
நிகரில் புகழாய்! உலக(ம்) மூன்(று)
உடையாய்! என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக் கணங்கள்
விரும்பும் திருவேங்கடத்தானே!
புகலொன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே'

ஆண்டாள் செய்யும் சரணாகதியும் இச்சேர்த்தியில்தான். பெருமாள் :

முப்பத்து மூவர் அமரர்க்கும் முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே!
செப்பம் உடையாய்!
திறலுடையாய்!
செற்றார்க்கும் வெப்பம் கொடுக்கும்
விமலா!

பிராட்டி :

செப்பன்ன மென்முலைச்
செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்!
திருவே!

பிராட்டி சந்நிதியில் பெருமாளிடம் சேர்ப்பிக்க வேண்டுதல். ''இப்போதே எம்மை நீராட்டு''. இக்கணத்திலேயே பெருமாளுடன் சேரத் துடிக்கும் எங்களை அவனிடம் சேர்ப்பித்தருள்வாயாக!

தடையாகித் தொக்கியலும் ஊழ்வினை :

இறைவனை நாம் அடைவதற்குத் தடையாகி உள்ளவை, நாம் முன்செய்த

தீவினையாலே திரண்டுள்ள விதியும், இப் பிறவியிலே நாம் புரியும் தீமைகளும், இவைகள் நம்மை வருத்தும். மாற்றார் வடிவிலே உருவம் கொண்டு செயல்படுகின் றன!

உன்னுடன் எதிர் அம்புகோத்து நின்ற வர்களின், வலி தொலைந்து, உன்னைச் சரண் அடைந்தது போலவே, எங்களு டைய மாற்றார்களான போய பிழையும், புகுதருவான் நின்றனவுமான எங்கள் தீவினைகளின் வலிதொலைந்து தடை யாகித் தொக்கியலும் ஊழ்வினையைச் சிதைத்து உன்னைச் சரண் அடைய உதவ வேண்டும்.

மாற்றார் உனக்கு வலிதொலைந்துன்
வாசற் கண்,
ஆற்றாது வந்து உன் அடிபணியுமா
போல.

வாழ்வினை வைணவர்தம் பேறு :

தொக்கியலும் ஊழ்வினையின் தடை அகலின் வாழ்வினைதான்!

அற்றது பற்றெனில்; உற்றது வீடு!
நீர்நுமது என்று வேர்முதல் மாய்த்து இறை
சேர்மின் உயிர்க்கு அதன்-நேர்நிறைஇல்லே!

(திருவாய்மொழி 1-2-5 3)

இந்த நிலையில் ஏற்படுவது வாழ்வு! வைணவர்தம் பேறு! புருஷார்த்தத்தின் சிகரம்! ஆண்டாள் இந்த வாழ்வினை விவ ரிக்கின்றாள்! திருத்தக்க செல்வம்: இலட்சுமி கடாட்சமும், சேவகமும்: பெரு மாளுக்குக் குற்றேவலும் இதனால் ஏற் படும் பலன். பெருமாளின் கல்யாண குணங்களைப் பாடி, திருநாம சங்கீர்த் தனத்தில் திளைத்து, அதனால் எல்லா வருத்தமும் தீர்ந்து மகிழ்கிறோம்!

நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பா
வாய்!

அருளாளனை ஐந்து பாசுரங்களால் திருப்பாவையில் போற்றி, அப்பாசுரங் களில் அர்த்த பஞ்சக ஞானமான ஐம் பெரும் உண்மையைக் குறிப்பாக உப தேசித்தருளிய ஆண்டாளின் தூய நற் பாதம் துணை நமக்கே!

சிவலிங்கத் திருவுருவம்

சிவலிங்கத் திருவுருவின் பழமையும், பெருமையும் எல்லையற்றன. மொகஞ் சதாரோ, ஹாரப்பா முதலிய இடங்களில், நிகழ்ந்த அகழ்வு ஆராய்ச்சிகளில், மிகப்பல சிவலிங்கத் திருவுருவங்கள் கண்டெடுக்கப்பெற்றுள்ளன. அதனால் சற்றேறத்தாழப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிக காலத்திற்கு முன்னரே, சிவலிங்க வழிபாடு இந்திய நாட்டில் நிலவி இருந்தமை புலனாகிறது.

சிந்துவெளிப் பகுதியில் கிடைத்த சிவலிங்கத் திருவுருவங்கள், மிகப்பலவற்றைக் கண்ட மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்கள் வியப்படைந்து, உலகிலேயே மிகவும் தொன்மை வாய்ந்த சமயம், சைவ சமயமே ஆதல் வேண்டும் என்னும் உண்மையை உணர்ந்து குறிப்பிட்டுள்ளனர் (1).

சிவலிங்கத் திருவுருவங்களும், சிவலிங்க வழிபாடும், இந்திய நாட்டில் மட்டுமே யன்றி எகிப்து, சிரியா, பாரசீகம், சிறிய ஆசியா, கிரீசு, இத்தாலி, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, திபெத்து, சீனா, ஜப்பான் முதலிய உலகின் பல பகுதிகளிலும் ஒருகாலத்தில் பெரிதும் பரவியிருந்தது. இதனை 'வெஸ்ட்ராப்', இ. பி. டெய்லர், ஆலன், கிராண்ட் முதலிய மேற்புல அறிஞர்கள் தத்தம் நூல்களில் ஆராய்ந்து குறிப்பிட்டுள்ளனர் (2).

— ஆசிரியர்

---

(1) "Among the many revelations that Mohanjo Daro and Harappa have had in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivism has a history going back to the Chalco-lithic age or perhaps even further still and that it thus takes its place as the most ancient living faith in the world".

— SIR JOHN MARSHALL

(2) "The practice of Linga-worship was so general as to have spread itself over a large part of the habitable globe, for it flourished for many ages in Egypt and Syriya, Persia, Asia Minor, Greece and Italy. It still is in vigour in India and many parts of Africa and was even found in America on its discovery by the Spaniards, being regarded as the most sacred object of worship and consecrated by religion. The culture was associated with the very idea and sentiment which was regarded as ennobling to man".

— H. M. WESTROPP



ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டையொட்டி, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நடந்த பொற்கிழிப் பரிசளிப்பு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், திரு. சொ. மீ. சுந்தரம் அவர்களுக்குச் சிறந்த கவிதை இயற்றியதற்கான பொற்கிழிப் பரிசை வழங்குதல். உடன் இருப்பவர் திரு. வி. என். சிதம்பரம். (9.1.81)



சென்ற நூற்றாண்டின் இறுதியில், மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் திருப்பணிகள் செய்த திரு. வயிநாகரம். நாகப்பச் செட்டியார் திருவுருவப் படத்தை, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், காரைக்குடியில் திறந்து வைத்தபோது எடுத்த படம். அருகில் வி. என். சிதம்பரம் நிற்கிறார்.



ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு குறித்து மதுரைக்கு வருகை தந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள், அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில், புதிதாகச் செய்யப்பெற்ற தங்கத் தேரினைப் பார்வையிடுதல். அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம். வீரப்பன், மத்திய அரசின் வேளாண்மைத் துறைத் துணை அமைச்சர் திரு. ஆர். வீ. சுவாமிநாதன், அறங்காவலர்கள் திரு. வி. என். சிதம்பரம், திரு. என். எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, திரு. எம். சின்னசாமிக் கோனார், நிர்வாக அதிகாரி திரு. இரா. அரங்கசுவாமி முதலிய பலர் உடனுள்ளனர்.



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நிகழ்ந்த தங்கத்தேர்உலா விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன், வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கா. காளிமுத்து, மதுரை மேயர் எஸ். கே. பாலகிருஷ்ணன், திருமதி டாக்டர் இராதாதியாகராஜன், அறங்காவலர்கள் திரு. வி. என். சிதம்பரம், திரு. எம். சின்னசாமிக் கோனார், திரு. என். எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி ஆகிய பெருமக்கள் கலந்து கொள்ளுதல்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.